உ

# ஆற்றூர்ப் புராணம்.

ஆசிரியர் :

சிரபுரம் - ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

பதிப்பாசிரியர் :

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

உ

# புத்தக விளம்பரம்

## பழைய காப்பியங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியருரை (3-ஆம் பதிப்பு, 1922) .... .... .... | 10 | 0 |
| ஷை 2-வது கோவிந்தையாரிலம்பகம் மூலமும் உரையும் | 0 | 10 |
| சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரை முதலியனவும் (3-ஆம் பதிப்பு, 1927) | 6 | 4 |
| மணிமேகலை மூலமும் அரும்பதவுரை முதலியனவும் (3-ஆம் பதிப்பு, 1931) .... .... | 5 | 0 |
| உதயணன் சரிதையாகிய பெருங்கதை, பலவகைக்குறிப்புக்களுடன் (2-ஆம் பதிப்பு 1935, அச்சில்) | | |
| பெருங்கதை மூலம் (அச்சில்) | | |
| பெருங்கதை, இலாவாண காண்டம்: குறிப்புரையுடன் .... | 1 | 8 |
| உதயண குமாரகாவியம், குறிப்புரையுடன் .... .... | 0 | 6 |

## பத்துப்பாட்டு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரை முதலியனவும் (3-ஆம் பதிப்பு, 1931) .... .... | 5 | 0 |
| பத்துப்பாட்டு மூலம்: பொருட்சுருக்கம், வரலாறு முதலியவற்றுடன் .... .... .... | 1 | 0 |
| ஷை 5-வது முல்லைப்பாட்டு உரையுடன் .... .... | 0 | 5 |

## எட்டுத்தொகை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஐங்குறுநூறு மூலமும் பழையவுரை முதலியனவும் (2-ஆம் பதிப்பு, 1920) .... .... .... | 2 | 0 |
| பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரை முதலியனவும் (2-ஆம் பதிப்பு, 1920) .... .... | 1 | 14 |
| பரிபாடல் மூலமும், பரிமேலழகருரை முதலியனவும் (2-ஆம் பதிப்பு, 1935) .... .... | 2 | 0 |
| புறநானூறு மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு, 1935 (அச்சில்) | | |
| புறநானூறு மூலம் (அச்சில்) | | |

## இலக்கணம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| புறப்பொருள் வெண்பாமாலை: பழைய உரை, பொருட்சுருக்கம் முதலியவற்றுடன் (4-ஆம் பதிப்பு, 1934) | 1 | 9 |

உ

கணபதி துணை

# ஆற்றூர்ப் புராணம்.

திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான்

திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

இது

ஷை பிள்ளையவர்கள் மாணாக்கருள் ஒருவராகிய

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

## டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை, கதைச்சுருக்கம்

முதலியவற்றோடு

ஆற்றூர்

**ம-ள-ள-ஸ்ரீ ச. இரத்தினசபாபதி பிள்ளையவர்கள்**

விருப்பத்தின்படி

சென்னை :

**கேசரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

யுவ௵ ஆவணிமீ

*Copyright Registered*] **1935** [விலை ரூ. 0—10—0

# இப்புத்தகத்தில் அடங்கியவை

பக்கம்.

1. முகவுரை .... .... ... v—xiv
2. சிறப்புப்பாயிரம்: சி. தியாகராச செட்டியார் அவர்கள் இயற்றியது .... .... xv
3. இப்பதிப்பில் எடுத்துக் காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி .... xvi
4. பிழையும் திருத்தமும் .... .... „
5. **ஆற்றூர்ப் புராணம் மூலமும் கதைச் சுருக்கமும் குறிப்புரையும்** க-ககஉ

கடவுள் வாழ்த்து ... .... க
நூலியற்றியதற்குக் காரணம் முதலியன .... எ
அவையடக்கம் .... .... எ
க. திருநாட்டுப்படலம் .... .... அ
உ. திருநகரப்படலம் .... .... கரு
ங. நைமிசப்படலம் .... .... உங
ச. தலவிசேடப்படலம் .... .... உகூ
ரு. தலவிசேடம் தேவிக்குணர்த்திய படலம் ... ஙங
சூ. மண்டூகம் முத்தியடைந்த படலம் .... சக
எ. சொன்னயான நிரோதனபுரப்படலம் .... சச
அ. நடனப்படலம் .... .... ருரு
கூ. கயற்கண்ணியார் திருமணப் படலம் ... சூக
க0. ஆற்றூர்ப் படலம் .... .... அரு
கக. திருமால் இடங்கொண்ட படலம் .... கூக
கஉ. நந்தி அருள்பெறு படலம் .... .... கூஎ
கங. சங்கரமறையோன் முத்தியடைந்த படலம் க0க
கச. முனிவர் முதலியோர் பூசித்த படலம் .... க0கூ

சில தலங்கட்குப் பழைய புராணங்கள் இருப்பினும் காப்பிய இலக்கண அமைதியோடு அவை விளங்க வேண்டுமென்னும் விருப்பத்தினால் தமிழ் வித்துவான்கள் இயற்றிய புராணங்களும் உண்டு. சேதுபுராணம் முதலியவற்றை இவ்வகைக்கு உதாரணமாகக் கூறலாம். இத்துறையில், "இரவியென்பான், தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோல், மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்க ளெல்லாம், உன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்" (கம்ப. குகப். 36) என்பதுபோலத் தமக்கு முன்பிருந்த பலருடைய ஆற்றலையும் அறிவையும் ஒருங்கே கொண்டு பல புராணங்களை இயற்றிப் புகழ்பெற்ற கவிசிகாமணி திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள்; "புராணம் பாடும் புலவன்" என்று ஓரன்பர் அவர்களுடைய சிறப்பியல்பைச் சுருக்கமாகக் கூறியதுண்டு. அவர்கள் இயற்றிய புராணங்களுள் இவ்வாற்றூர்ப் புராணமும் ஒன்றாகும்.

புராணமென்பது பழமை யென்னும் பொருளையுடையது. "காதல் கொண்டு கடல்வணன் புராணம், ஓதினன்" (மணி. உஎ : 98-9) என்பதில் இச்சொல் பழமையையே குறிக்கின்றது. பழைய வரலாற்றைக் கூறுவதுபற்றி இவ்வகை நூல்களுக்கு இப்பெயர் வந்தது. "தொல்கதை" என்று சேதுபுராணக்காரர் கூறுதலும், "பழங்கதை" (விளத்தொட்டிப்புராணம்) என்று இந்நூலாசிரியர் கூறுதலும் இவற்றை வலியுறுத்தும். தமிழிலுள்ள இவ்வகை நூல்கள் பொருட்டொடர் நிலைச்செய்யுட்களாகக் கருதப்படுவன. அவற்றுள் இழுமென்மொழியான் விழுமியது நுவலும் தோலென்னும் வனப்புக்கு இலக்கியமாதற்குரியன; 'தொன்மொழி என்றார் பழையகதையைச் செய்தல்பற்றி' (தோல். செய். சூ. 238) என்ற பேராசிரியர் உரை இங்ஙனம் கொள்ளுதற்கு உபகாரமாகின்றது. இவ்வாறு பழைய வரலாற்றைச் சொல்வனவாக உள்ளவற்றிற்குப் புராணமென்னும் பெயர் வழங்குதல் மேருமந்தர புராணம், ஸ்ரீ புராணம், திருத்தொண்டர் புராணம் என்பவற்றாலுமுணரலாம்.

புராணங்களிலுள்ள செய்திகளின் உண்மையைக் குறித்து வேறுபட்ட அபிப்பிராயங்கள் சிலருக்கு இருப்பினும், செய்யுள்நடை முதலியவற்றின் அழகை அறிந்து மகிழ்வதற்கு அவை யாவருக்கும் பயன்படும். அன்பர்களுக்கு பக்தியை மிகுவிக்கும்.

ஆற்றூரென்பது சோழநாட்டில் மாயூரத்திற்கு வடக்கே மண்ணியாற்றின் தென்கரையில் உள்ள ஒரு சிவஸ்தலம். க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்திலுள்ள,

“மண்ணிப் படிக்கரை வாள்கொளி புத்தூர்
வக்கரை **மந்தாரம்** வாரணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்களத்தும்”

எனவரும் பகுதியில் கூறப்பட்ட மந்தாரமென்பது இத்தலமென்றே கருதப்படுகின்றது. இது முதன்முதலில் மந்தாரவனமென்னும் பெயரையுடையதாதலினாலும் இப்பகுதியில் இதற்கருகிலுள்ள மண்ணிப்படிக்கரை, வாள்கொளிபுத்தூர், விளத்தொட்டி முதலியன உடன்கூறப்படுதலினாலும் இங்ஙனம் கொள்வது பொருத்தமுடையதாகின்றது. இந்நூலாசிரியரும், “மட்டுவிரி மந்தார மன்னுபெருங் கோயிலமர், எட்டுருவமுடையான்” (கூ: 61) என்பதில் மந்தாரமென்றே இத்தலத்தைக் கூறியுள்ளார். எனவே தேவாரவைப்பு ஸ்தலங்களுள் இவ்வாற்றூர் ஒன்றாகுமென்பது பெறப்படும்.

மந்தாரவனம், சொன்னயானநிரோதபுரம், நடனபுரம், நதிபுரம் என்னும் திருநாமங்களும் இத்தலத்துக்கு உண்டு. இவற்றிற்குரிய காரணங்கள் இந்நூலாலுணரப்படும்.

இங்கேயுள்ள ஸ்தல விநாயகர் திருநாமம் மந்தார விநாயகரென்பது. சிவபெருமான் திருநாமங்கள் சொன்னயானநிரோதர், மந்தாரவனேசர் என்பன. அம்பிகையின் திருநாமம் அஞ்சனாட்சியென்பது. ஸ்தலவிருட்சம்: மந்தாரம். தீர்த்தங்கள் மண்ணிநதி, பழவாறு சிவதீர்த்தம் என்பன. இத்தீர்த்தங்கள் மூன்றும் சிவபெருமானின் முக்கண்களுக்கு ஒப்பானவையென்று சொல்லப்பட்டிருக்கின்றன; ரு: 38. சிவதீர்த்தமென்பது கைலாசகங்கையெனவும் பெயர் பெறும். அது திருக்கோயிலுக்கு எதிரே உள்ளது.

இத்தலத்தில் சிவபெருமான் வாதூல கோத்திரத்தினரான ஒரு பிராமணருடைய குமாரியாகிய கயற்கண்ணியாரென்பவரைத் திருமணம் செய்துகொண்டனர். அவ்வம்மையாருடைய ஸந்நிதி மகாமண்டபத்தில் இருக்கிறது. அந்தத் தேவியின் திருநாமத்தை மீனாட்சியென்றும் வழங்குவதுண்டு. கயற்கண்ணியார் அவதரித்த இடம் இத்தலத்தில் தெற்குவீதியில் உள்ள ஒரு வீடென்று சொல்லுகிறார்கள். மார்கழித் திருவாதிரையன்று ஸ்ரீநடராசமூர்த்தி

திருவுலாப் போதுகையில் அவ்வீட்டிலெழுந்தருளுவதும் மணமகனுக்குரிய சிறப்புக்கள் செய்யப்பெறுவதும் வழக்கமாக உள்ளன சோழேந்திரனென்னும் அரசனுக்காக ஒருமுறையும் சங்கரனென்னும் அந்தணனுக்காக ஒரு முறையும் சிவபிரான் இங்கே திருநடனஞ் செய்தருளினார். சங்கரமறையோன் ஸ்ரீ நடராச மூர்த்தியின் திருவுருவொன்றைப் பிரதிஷ்டை செய்ததாக இப்புராணம் கூறுகின்றது. இப்பொழுது ஆலயத்தில் நடராசமூர்த்தியின் விக்கிரகங்கள் இரண்டு உள்ளன.

இத்தலத்திற் பூசித்துப் பேறுபெற்றோர்: இடபதேவர், இந்திரன், ஒரு மண்டூகம்(தவளை), சங்கரமறையோன், சாத்தனார், சில முனிவர்கள், சோழேந்திரன், திருமால், தூர்க்கை,நந்திதேவர், பிரமதேவர், முருகக்கடவுள் முதலியோர். நந்திதேவரும் மண்டூகமும் பூசிப்பதைக் காட்டும் இரண்டு சிற்பங்கள் இவ்வாலயத்தின் அர்த்த மண்டபத்தில் உள்ளன. இப்புராணத்திற் கூறப்படும் சுகாசீன நாராயணப் பெருமாளது திருக்கோயில் இப்பொழுதும் இத்தலத்தில் இருந்துவருகின்றது. பெருமாள் நின்றதிருக்கோலமாக எழுந்தருளியிருக்கின்றார் நாச்சியார் திருநாமம் கோமளவல்லி யென்பது. பெருமாள் திருநாமம் சுகவாசி நாராயணப் பெருமாளென்று வழங்குகின்றது.

இதில் மரணமடைவோர்களுக்கு மரண சமயத்தில் அம்பிகை ஐந்தெழுத்தை உபதேசிக்கிறதாக ஓர் ஐதிஹ்யம் இந்நூலுட் கூறப்பட்டுள்ளது; கூ: 12.

பண்டைக்காலத்தில் இங்கே மாசிமாதத்தில் மகநட்சத்திரத்தில் பிரம்மோத்ஸவமும் தைமாதம் வெள்ளிக்கிழமையில் கயற்கண்ணியார் திருக்கல்யாண உத்ஸவமும் நடைபெற்றுவந்தன.

ஸ்ரீ ஸ்காந்தபுராணத்திலும் பிரம்மாண்ட புராணத்திலும் இந்தஸ்தலத்தின் வரலாறு சொல்லப்பட்டுள்ளதென்று இந்நூலால் தெரிய வருகின்றது.

ஆற்றூர்ப்புராணமென்னும் இந்த நூல் பிள்ளையவர்களாற் பாடப்பெற்ற காலம் ரௌத்திரி (1860) வருஷமாகும். இதனை இயற்றும்படி அப்புலவர் பெருமானைக் கேட்டுக்கொண்டு இயற்றச்செய்து அரங்கேற்றுவித்து அவர்களைப் பாராட்டிச் சம்மானம் செய்தவர் கலியாணசோழபுரம் கணபதிப்பிள்ளையின் குமாரராகிய சிதம்பரம் பிள்ளை யென்பவர். அவரும் அவருடைய சகோதரர்களாகிய ஐயாறப்ப பிள்ளை, அருணாசலம் பிள்ளை என்னும் இருவரும் பிள்ளையவர்கள்

பால் அன்புபூண்டு அவர்களை ஆதரித்து வந்தவர்கள். *இம்மூவரோடும் நான் பழகி இருக்கிறேன். ஸ்ரீ சிதம்பரம்பிள்ளையவர்களுடைய பெருமை நூலியற்றுதற்குக் காரணமென்னும் பகுதியாலும் இந்நூற் சிறப்புப்பாயிரத்தாலும் விளங்கும்.

இந்நூல் கடவுள் வாழ்த்து, நூலியற்றுதற்குக் காரணம், அவையடக்கம், சிறப்புப்பாயிரம் என்பவற்றை முதலிற் பெற்றுத் திருநாட்டுப்படலம் முதலிய கச-படலங்களை உடையது. இதன் செய்யுட்டொகை- ருஉரு.

அவையடக்கத்துக்குப் பின்புள்ள சிறப்புப்பாயிரச் செய்யுள் அரங்கேற்றுங்காலத்திற் கேட்டு மகிழ்ந்த ஒருவராற் செய்யப்பட்டது ; அதனை இயற்றியவரின்னாரென்று தெரியவில்லை. பிள்ளையவர்களின் மாணாக்கராகிய திரிசிரபுரம் தியாகராச செட்டியாரவர்களால் இயற்றப்பெற்ற சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் ஆறு இம்முகவுரையின் பின்னே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் இயற்றப்பட்ட காலத்தில் உடனிருந்து இதனையேட்டில் எழுதிவந்தவர் பிள்ளையவர்களுடைய மாணாக்கரும் தேவாரம் (ஸ்தல முறை) பதிப்பித்தவரும் திருஞானசம்பந்தப் பிள்ளையென்னும் தீக்ஷா நாமமுடையவருமாகிய மதுரை இ. இராமசாமிப்பிள்ளையவர்கள்.

சிவபெருமான் பெருமைகளும், சைவசாஸ்திரக் கருத்துக்களும், ஸ்தலவரலாறுகளும், சொல்லணி பொருளணிகளும் பிறவும் மலிந்து இந்நூலைச் சிறப்பித்துப் பிள்ளையவர்களுடைய புலமைத் திறனைக் காட்டுகின்றன.

கடவுள் வாழ்த்திலும் (5) நடனப்படலத்திலும் ஸ்ரீ நடராச மூர்த்தியின் பெருமைகளும், சோழேந்திரன் ஸ்ரீமந்தாரவனேசரைத் தரிசித்துத் துதிக்கும் பகுதியில் (எ : 26-8) ஆன்மதத்துவம் முதலியவற்றின் அமைப்புமுறையும், கயற்கண்ணியாருடைய தந்தையார் சிவபெருமானுடைய இயல்பைக்கூறும் பகுதியில் (கூ : 31-6) அப்பெருமானுடைய பரத்துவமும், திருமால் செய்ததுதியில் (கஅ : 16-7) அவருடைய இயல்பும் வெளியாகின்றன. அவை சைவ நூல்களிற் கண்ட பல உண்மைகளை விளக்குகின்றன.

இவற்றையன்றிக் குருவின் திருவருள் மும்மலத்தினையும் நீக்குமென்பது (கடவுள். 20), யாவரும் செய்யும் வணக்கம் முடிவிற்

* இவர்களைப்பற்றிய வரலாறுகள் சிலவற்றை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தால் உணரலாகும்.

சிவபெருமானையே சார்தல் (க: 9), மாயையின் இயல்பு (க: 12), அத்துவிதநிலை (உ : 31), மும்மூர்த்திகளின் குணங்கள் (அ:5) முதலியன அங்கங்கே பலவகையாக அமைக்கப்பட்டுள்ளன.

திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து என்பவற்றின்பால் அளவற்ற அன்புடைய இவ்வாசிரியர் அவற்றை இடந்தோறும் கூறிக் கொண்டே செல்லுகின்றார். அவை வருமாறு :

" வெண்ணீறுங் கண்மணியு மைந்தெழுத்து மேவிக் கொண்டு
தூவாத சுகத்தழுந்து நாயன்மார் " (கடவுள். 21)
" போதுசாலப் பொலிந்த தருவெலாம்......
தாது வென்னுந் தவாப்பொடி பூசியே
மீது வண்டெனுங் கண்மணி மேவுமே " (ரு : 8),
" பூதி கண்மணி போற்றி யெழுத்தைந்தும்
ஓதி நிற்கு மொழுக்கச் சிறப்பினர் " (ரு : 14),
" மறை புகல்வி பூதிபூசி, நண்ணியகண் மணிபூண்டு
மனத்துறவைந் தெழுத்தழுத்தி " (அ : 2),
" ஊனமிலா வெண்ணீற்றி னுருத்திராக் கத்தினபி
மானமிகு வைதிகமா மறையவர் " (கூ : 1),
" பூதிநிறை தரப்பூசிப் பொலிதருகண் மணியும்பூண்
டாதிமுதல் வடிவாய வஞ்செழுத்து முச்சரிப்பான் " (கரு : 4),
" காதன்மிக வெண்ணீறுங் கண்மணியுந் தரித்தெழுந்து " (கரு:19.)

சிவபக்திச்செல்வராகிய இந்நூலாசிரியர் அன்பின் திறத்தை நன்கறிந்தவராதலின் இந்நூலின்கண் சோழேந்திரனுடையபேரன்பை,

" என்றுபன் முறையுங் கூறு மெதிர்சென்று தழுவிக் கொள்ளும்
நன்றுநெட் டுயிர்க்குந் தெய்வ நறுமணங் கவர்வான் மோக்கும்
துன்றுமா னந்தந் தேங்கச் சூழ்ந்திமை யாது நோக்கும்
என்றுந்தான் கொண்ட வன்புக் கெல்லையி லாத சோழன்"(எ: 29)

என்னும் அவன் செயலாலும்,

" நின்னடிக்கன் பில்லாதா ரென்குலத்துப் பிறவாது
நீங்க நீங்கா
தன்னவர்வந் துதித்தனரே லப்பொழுதே யிறந்தொழிக
வதான்று நாயேன்
என்னபிறப் புற்றிடினு நின்னடிக்கன் பொழியாமை
இயல்பே யாகப்
பொன்னசலங் குழைத்தாயிவ் வரம்பெறுவா னுனைத்தொழுதேன்
போற்றி போற்றி " (அ : 14)

என்னும் அவன் வேண்டுகோளாலும், பிறவற்றாலும் உணர்த்தியிருக்கின்றார்.

இப்புராணத்திற்குத் திருமுகம்போல விளங்குவது கயற்கண்ணியார் திருமணப்படலமாகும். அதில் கயற்கண்ணியாருடைய இளமைப் பருவத்தைப்பற்றிச் சொல்லுகையில் காப்பு முதலிய பத்துப் பருவங்களையும் ஒரு பருவத்துக்கு ஒன்றாகப் பத்துச் செய்யுட்களில் ஆசிரியர் வருணிக்கின்றார். அவ்வம்மையாரை நோக்கி அவர் தந்தையார் கூறுவனவற்றுள் வேத முதலியவற்றிற் காணப்படும் சிவபிரான் இயல்புகள் அமைந்துள்ளன. சிவபெருமானை விரும்ப வேண்டாமென்று சொல்லும் தாயின் கூற்று அவருடைய திருக்கோலத்தை இழிவுக்குறிப்புடன் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. கயற்கண்ணியார் சிவபிரானை வேண்டுவதாக உள்ள செய்யுட்கள் மனவுருக்கத்தை யாவருக்கும் உண்டாக்கும். அவர் சிவபிரான் பாலுள்ள அன்பின்மிகுதியால் கிளி, அன்னம், நாரை என்பவற்றை நோக்கிக் கூறும் பகுதிகள் காமமிக்க கழிபடர் கிளவியென்னும் அகப்பொருட்டுறையையும் தூதுப் பிரபந்தங்களையும் ஞாபகப்படுத்துகின்றன. தேவாரத்திற் காணப்படும் இருவகைச் சந்தங்கள் இப்படலத்தில் இரண்டிடங்களில் (ப. 67, 72) அமைக்கப்பட்டுள்ளன. அவை முறையே காந்தாரப்பண்ணிலமைந்த 'சுண்ண வெண் சந்தனச் சாந்தும்' என்னும் பதிகச் சந்தத்தையும், நட்டபாடைப் பண்ணிலமைந்த 'மைம்மரு பூங்குழல்' என்னும் பதிகச் சந்தத்தையும் பின்பற்றியவை.

அம்பிகை, சோமேந்திரன், திருமால், நந்திதேவர், சங்கரமறையோன் என்பவர்கள் செய்தனவாக அமைந்துள்ள துதிகள் சிவபெருமானுடைய பெருமைகளை விளக்கிக்கொண்டு படிப்போர்களுடைய உள்ளத்தில் அன்பை உண்டாக்குகின்றன.

சிவதீர்த்தத்தில் இருந்த ஒரு மண்டூகம் ஒரு பாம்பினாலுண்ணப்பட்டுப் பிறகு சாரூப பதவியைப் பெற்றதை இவ்வாசிரியர்,

"செயிரக லஃதப் போதே சிவபிரா னுருவம் வாய்ந்து
பயிலணி யாக வந்தப் பாம்பையே யணிந்த தம்மா"

என்று சமற்காரமாகக் கூறுகின்றார்.

தலவிசேடம் தேவிக் குணர்த்திய படலத்தில் தேவாரப்பதிகம் பெற்றனவும் வைப்புமாகிய 219-ஸ்தலங்கள் சொல்லப்படுகின்றன; ஊர், குடி, வாயில், பள்ளி, ஈச்சரம், காடு, துறை, குன்றம், மலை,

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
MADRAS-41

புரம், கா, கரை, தானம் என்னும் ஈறுடையவற்றை முறையே தொகுத்து அமைத்திருக்கின்றார். இவற்றையன்றி வாட்போக்கி, வச்சிரவனம் (அவை.), திருவாரூர் (க : 2, ச : 8), திருவாவடு துறை (க : 3), திருவாலவாய் (உ : 32), பந்தணைநல்லூர் (ச : 2), நமச்சிவாயபுரம் (ச : 2), கருப்பறியலூர் (ச : 2), திருத்துருத்தி (ச : 2), சிதம்பரம் (ச : 8), காசி (ச : 8), அருணாசலம் (ச : 8), திருக் காளத்தி (ச : 8), திருநல்லம் (கூ : 40), சீகாழி (கO : 11), புள் ளிருக்குவேளூர் (கO : 11), திருவெண்காடு (கO : 11), திருச்செங் காடு (கO : 11), திருக்குறுக்கை (கO : 11) என்பவை அங்கங்கே சொல்லப்படுகின்றன.

இந்நூலாசிரியர் தம் குருபீடமாகிய திருவாவடுதுறையாதீனத் தில் மிக்க பக்தியுடையவர். அவ்வாதீனஸ்தாபகராகிய ஸ்ரீ நமச்சிவாய தேசிகரையும் இந்நூல் செய்யப்பெற்ற காலத்தில் அவ்வாதீனத் தலைவராக இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகரையும் கடவுள் வாழ்த்தில் துதித்திருக்கின்றார். அவ்வாதீனத்தின் முதல்வராகிய நந்திதேவரை, "முறைமையி னெங்கள் முதற்குரு வாய, கறைதபு நந்தி" (கஉ : 19). என்று பாராட்டுகின்றார். திருவாவடுதுறையை, "எங்களாவடு தண்டுறை" (க : 3) என்றும், "எங் நாளு நீதி, கோணுதலி லாத் திருவா வடுதுறை" (ரு : 27) என்றும் சிறப்பிக்கின்றார்.

"கன்னலும் பாகுந் தேனுங் கனியுங்கற் கண்டும் பாலும்
இன்னமிழ் தமுமுட் கைப்பத் தமிழென வினிக்குஞ் சொல்லாய்"
(கூ : 31)

என்பதனால் இவ்வாசிரியருடைய தமிழன்பு விளங்குகின்றது.

"இடையற முதலு மீறு மியைந்தொரு பொருள்கொள் பாக்கு
நடைகெழு நூற்பா வென்ன நலங்கெழு பாய்த்துச் செய்யும்"
(சு : 3)

என்பதில் தவளைப்பாய்த்தென்னும் சூத்திரநிலையும், "சென்ற வாற்றுமீட் டெய்தலாற் செந்தமிழ்ப் புலவர், ஒன்ற வாற்றியமாலைமாற் றுத்தன மொருநீ, என்று மற்றைய செய்யுள்போல் வாயென வினன் றோர், கன்ற வெள்ளுவ கடுவிசைத் தேர்பல கவினும்" (உ : 19) என் பதில் மாலைமாற்றென்னும் சித்திர கவியும் எடுத்தாளப்படுகின்றன.

பொருளணிகளில் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், சிலேடை, சொற்பின்வருநிலை, முரண் முதலியன அங்கங்கே விரவி வந்துள்ளன. உழவர் உழுதுபயிரிடுதலுக்கு ஆசிரியர் மாணாக்கரைப்

பயிற்றுவிக்கும் செயலும், சோலைக்குக் கடலும் உவமை கூறப்படுகையில் சில செய்யுட்களில் தொடர்ந்து அவ்வுவமைகள் விரிக்கப்பட்டிருக்கின்றன.

தற்குறிப்பேற்றம் : க : 14; உ : 16 - 7, 34 முதலியன.
சிலேடை ; உ : 21 - 3 ; ரு : 2 ; கூ: 7, 98.
முரண் : " அரசன் பார்ப்பானு யுற்ற வன்னபோது " (எ : 7),
" படுபிறவா னவருருவம் பாராரப் பார்ப்பாரே " (கூ : 9),

" வலங்கொண்டு நெடிய மாயோ னிடங்கொண்டு வாழ்தல் சொல்வாம் " (கக : 1.)

சொற்பின் வருநிலை : கூ : 8.

எண்ணணி : " வழுவிலொரு பிறப்பகத்தே யிருபிறப்பின்மாண்படைந்து, செழுவியமுத் தழல்வளர்த்துத் திருந்துநான் மறையுணர்ந்து, பழுதமையைம் பொறியவித்துப் பகருமறு பகையுமொழிந், தெழுபிறப்பு மிலராகி யெண்குணச்செல் வனையடைவார் " (கூ : 10.)

சொல்லணிகளுள் யமகம், மடக்கு, திரிபு என்பவற்றையும் எதுகை நயங்களையும் அங்கங்கே காணலாம்.

யமகம் : கட. 3 ; கூ : 20.

மடக்கு : கூ : 76.

திரிபு : கட. 9, 19 ; அவை. 1 ; அ : 27 ; கூ : 12.

எதுகைநயம் : கட. 2, 10 ; க : 35 ; எ : 3 - 4 ; கூ : 56 - 8 ; கக : 10.

தனியே அச்சிடப்பெற்று வெளியாகியிருக்கும் மகாவித்துவான் பிள்ளையவர்களுடைய சரித்திரத்தால் அவர்களுடைய குணவிசேஷங்களும் தெய்வபக்தியும் நூலாராய்ச்சி வன்மையும் பிறவும் நன்கு விளங்கும்.

இந்நூல் ஸ்ரீ சொன்னயான நிரோத மூர்த்தியின் திருவருளால் இப்பொழுது வெளிவரலாயிற்று. எளிய நடையில் அமைந்திருத்தலின் சுருக்கமாகக் குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. படிப்பவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு ஒவ்வொரு படலத்தின் முன்னும் அதன் அதன் சுருக்கம் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதனை ஆக்குவித்தோராகிய கலியாண சோழபுரம் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய பௌத்திரரும் ஸ்ரீ சபாபதியா பிள்ளையவர்க

ருடைய புத்திரருமாகிய ஸ்ரீமான் இரத்தினசபாபதி பிள்ளையவர்கள் இதனை வெளியிடும் விஷயத்தில் பொருளுதவி செய்தார்கள். தம்முன் னோர்களால் வெளிவந்த இந்நூலைப் பதிப்பிக்க உதவிசெய்தது இவர்களுடைய பரம்பரைப்பெருமையையும் சிவபக்தியையும் தமி ழன்பையும் புலப்படுத்துகின்றது.

ஆற்றூர் ஸ்தலசம்பந்தமான சில செய்திகளைத் திருச்சிற்றம்பலம், செல்வச் சிரஞ்சீவி மு. அருணாசலம் பிள்ளை முகமாக நான் வினவிய பொழுது அவற்றிற்குரிய விடைகளை எழுதி உதவியவர் திருச் சிற்றம்பலம் ஸ்ரீ நடனபுரீசுவரர் கோயில் தருமகர்த்தாவும் தமிழ்ப் பண்டிதரும் ஆகிய ம-ா-ா-ஸ்ரீ சி. பொன்னுசாமி பிள்ளையவர்கள்.

இதனை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உட னிருந்து உதவியவர்கள், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண் டிதர் சிரஞ்சீவி வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்வான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

பிள்ளையவர்கள் சரித்திரத்தின் முகவுரையில் அவர்களுடைய புராணங்களுள் வெளியிடப்படாதனவற்றை வெளிவரச் செய்ய வேண்டுமென்ற என் விருப்பத்தைத் தெரிவித்திருந்தேன். இறைவன் திருவருளால் அதன்பிறகு விளத்தொட்டிப் புராணமும், இப்புராண மும் வெளிவந்ததை யெண்ணி மகிழ்கின்றேன். அவர்களுடைய நூல்களுள் கிடைத்தற்கரிய சில நூல்களையும் வெளிவரச்செய்து தமிழ்நாட்டினர் அவற்றின் சுவையை அறிந்து நுகரவேண்டுமென் பதே எனது வேணவாவாகும்.

"தியாகராஜ விலாசம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
15—9—1935.

இங்ஙனம்
வே. சாமிநாதையர்.

# சிறப்புப் பாயிரம்.

இந்நூலாசிரியர் மாணாக்கராகிய

## சி. தியாகராச செட்டியாரவர்கள் இயற்றியது.

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

சீர்பூத்த மணிகொழிக்கும் பொன்னிநா டெனப்பொலியுஞ் சென்னி நாட்டில், ஏர்பூத்த வளஞ்செறியுங் கலியாண சோழபுர மெனும்பே ரூரில், பார்பூத்த தமிழருமை யறிபவனு முகில்விளர்க்கும் படியீ வானு, வார்பூத்த கார்காத்தார் குலம்விளங்க வவதரித்து வாழும் வள்ளல். (௧)

வாய்ந்தபுகழ்க் கணபதிமா மகிபாலன் மாதவத்தில் வந்த தோன்றல், ஆய்ந்தபொருட் கல்வியறி வொழுக்கத்தா னுயரையா றப்ப வேளும், ஏய்ந்தநய சுகுணவரு ணாசலமா லுந்தனக்கோ ரிருகண் ணென்றே, காய்ந்தவவித் தையர்புகல மற்றையோர் கனிட்டரெனக் கலந்து வாழ்வோன். (௨)

தில்லைநட ராசர்திருத் தளியகத்துப் புகாதுபுறஞ் செறிந்த தோர்ந்து, வல்லையிர தம்புரிந்த மன்னவனுட் சமழ்ப்பப்பொன் மானஞ் செய்தோன், நல்லையென வொப்புரவு மொழுக்கமுங்கண் ணோட்ட முமே நயந்து பூண்டோன், ஒல்லையடுத் தவரைவட திசைக்கோனும் வந்திரப்ப வுயர்த்து மேலோன். (௩)

சாற்றுபெரு மான்மியங்கூர் சிதம்பரமை யாறருணு சலங் காளத்தி, ஏற்றுபெருந் துறைவிருத்தா சலந்திருவே ரகத்தொடுபுள் ளிருக்கு வேளூர், போற்றுமிவை முதற்பலவு மமர்தருமெற் பணிப் பெருமான் பொருவி லாத்தே, சாற்றுயர்கற் பணிப்பெருமா னலங் குறுபொற் பணிப்பெருமா னுகச் செய்தோன். (௪)

கண்ணியதன் புகழாய பாலொடுதேன் கலந்தென்னக் கற்று ளாரே, எண்ணியவண் புகழ்த்திருவா வடுதுறைமெய்ஞ் ஞானவடி வியல்பே வாய்ந்து, நண்ணியசுப் பிரமணிய குரவர்பிரா னெழுந் தருளி நடனங் காணப், பண்ணியபே ரன்புடையா னெனுஞ்சீரும் பெற்றசிதம் பரமா லென்பான். (௫)

கற்பணியும் பொற்பணியு மாற்றார்க்குப் புரிந்தென்றுங் கதிர்க்கு மாறு, சொற்பணியுஞ் செயக்கருதி யாராய்ந்து மிகத்தெளிந்து தோலா நாவின், வற்பணியு மீனாட்சி சுந்தரநா வலரேற்றை மகிழ்ச்சி செய்து, பொற்பணியு மத்தலமான் மியமுயர்செந் தமிழ்ப்பாவாற் புகழ்வித் தானால். (௬)

# நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அடியார்-அடியார்க்கு நல்லாருரை.
அவை - அவையடக்கம்.
கட.
கடவுள் } - கடவுள் வாழ்த்து.
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
காஞ்சிப் - காஞ்சிப் புராணம்.
காரைக்கால் - காரைக்காலம்மையார் புராணம்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சீவக - சீவகசிந்தாமணி.
சூ - சூத்திரம்.
செய் - செய்யுளியல்.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்.
திருநா - திருநாவுக்கரசு நாயனார்.
திருப்பெருந்துறைப் - திருப்பெருந்துறைப் புராணம்.
திருவா - திருவாசகம்.
திருவிளை - திருவிளையாடற் புராணம்.
தே - தேவாரம்.
தொல் - தொல்காப்பியம்.
நால்வர் நான்மணி - நால்வர் நான்மணிமாலை.
நீதி நெறி - நீதிநெறி விளக்கம்.
ப - பக்கம்.
பதினோராந் - பதினோராந் திருமுறை.
பரி - பரிபாடல்.
பிரபு - பிரபுலிங்க லீலை.
புறநா - புறநானூறு.
பெரிய - பெரிய புராணம்.
பெருங் - பெருங்கதை.
பேர் - பேராசிரியருரை.
மணி - மணிமேகலை.
மீனாட்சி. பிள்ளைத். - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.
மும்மணி - மும்மணிக்கோவை.
முருகு - திருமுருகாற்றுப்படை
மேற் - மேற்கோள்.

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 15 | ஒளிரச் சுழந்தொரு | ஒளிரச் சூழ்ந்தொரு |
| 68 | 9 | ஒருவிய | மருவிய |
| ,, | 10 | மருவியு | ஒருவியு |
| 75 | 14 | வனக்கோயில் | வனங்கோயில் |
| 86 | 9 | தாண்டார் | தண்டார் |

உ

கணபதி துணை

# ஆற்றூர்ப் புராணம்.

## கடவுள் வாழ்த்து.

### விநாயகக் கடவுள்.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மாமேவு திருவுதர மசையினொரு தான்பரிக்கு மண்ணை யாதி
தாமேவு மசைத்தலையென் றன்னுபுபஃ றலையரவந் தயங்க ரீர்ப்பான்
தூமேவு மதன்புறஞ்சூழ்ந் திறுக்கியாங் கவ்வரவந் துதைய வங்கட்
பூமேவு கலமாகப் புனைவேழ முகப்பெருமான் பொற்றாள் போற்றி. ()

### சொன்னயான நிரோதனப் பெருமாள்.

சீர்பூத்த வானவருந் தானவருங் கவுள்யானைச் செல்வ வேந்தும்
நீர்பூத்த நறுங்கமல மேலவனு மாலவனு நிறைநீர் வேலைப்
பார்பூத்த மற்றோரு முற்றோரும் படியிறைஞ்சப் பரிந்தாற் றார்வாழ்
தார்பூத்தபுகழ்ச்சொன்ன யானநிரோ தனப்பெருமான் சரணஞ் சார்வாம்.

---

## கடவுள் வாழ்த்து.

க. விநாயகரது திருவயிறு அசைந்தால் தான் தாங்கும் உலகெல்லாம் அசையுமென்று அஞ்சி அவ்வயிற்றை அசையாமல் வந்து சேடன் இறுக்கித் தழுவினாற்போன்றது உதரபந்தனம்; விநாயகரது திருவயிற்றில் உலகமெல்லாம் அடங்கியுள்ளன வென்பதும், அவரது உதரபந்தனம் ஒரு பாம்பென்பதும் இங்கே அறியற்பாலன; "தாமரை நாயகன், அகட சக்கர வின்மணி யாவுறை, விகட சக்கரன்" (கந்த. காப்பு. 1.) ஒருதான்- ஆதிசேடன். பல்தலை அரவம் - ஆதிசேடன்.

உ. தானம் அரு கவுள் - மதநீர் பெருகும் அரிய கன்னம். உற்று ஓரும்படி; ஓரும்படி - அறியும் வண்ணம்,

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

## அஞ்சனக்கணம்மை.

அஞ்சனக்க ணம்மைதப வானவரிந் திரன்மகிழ வரவப் பாயோன், அஞ்சனக்க ணம்மையொழிந் தனமெனவுள் ளிறுமாப்ப வருள்வாண் மேலோர், அஞ்சனக்க ணம்மையொரு பொருளாக்கொண் டாண்டருளி யாற்றூர் மேவும், அஞ்சனக்க ணம்மையிரு பாததா மரைமலர்க ளடுத்து வாழ்வாம். (ங)

## கயற்கண்ணியம்மையார்.

உரியமறை யாகமங்க ளான்மாவை நாயகியென் றுரையா நிற்கும், பிரியமொழி யுண்மையெனத் தெரித்தாங்கு மறையவர்தம் பேறுய்த் தோன்றி, அரியயனு தியர்புணரான் றனைப்புணர்ந்து பேரின்ப மடங்கத் துய்க்கும், கரியகுழற் செய்யவாய்க் கயற்கண்ணி யிருசரணங் கருதி வாழ்வாம். (ச)

## நடராசப் பெருமான்.

நிலவுதுடி படைக்கவப யம்புரக்க வழலழிக்க நின்ற தாளுட்
குலவுமறைப் பியற்றவினி தெடுத்தமலர்த் தாளருளக் கோலு மாயைக்
கலவுதவிர் தரவுதறிக் கருமநீற் றுபுசமலங் கடிந்தி ரீஇயின்
புலவுயிர்மூழ் குறநின்று மன்றுடுமொருமுதலை யுன்னி வாழ்வாம். (ரு)

---

ங. அம் சனக்கணம் மை தப - அழகிய உயிர்த்தொகுதி குற்றத்தினின்றும் நீங்க. அரவப்பாயோன் - திருமால். அஞ்சன் - பிரமதேவன். அக்கண் அம்மை ஒழிந்தனம் என்று - அவ்விடத்து வரும் பிறவியை ஒழிந்தோமென்று; மை - பிறவி. மேலோர் அஞ்சு அல் நக்கு அண் நம்மை - பெரியோர் அஞ்சுகின்ற அஞ்ஞானமாகிய இருள் மகிழ்ந்து நெருங்குகின்ற நம்மை ; அல் : எழுவாய்.

ச. கயற்கண்ணி - மீனாட்சியென்னும் அந்தண மங்கையார் ; இவரைச் சிவபெருமான் மணஞ்செய்துகொண்ட வரலாற்றை இந்நூலிலுள்ள **கயற்கண்ணியார் திருமணப்படலத்தால்** அறியலாகும்.

ரு. துடி - உடுக்கை. அபயம் - அபயத்திருக்கரம். புரக்க - காக்க. மறைப்பு - திரோதானம். எடுத்த மலர்த்தாள் - குஞ்சித பாதம். கலவு - கலத்தல். நீற்றுபு - சாம்பராக்கி. சமலம் - மலத்தோடு கூடியிருத்தல். "தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற், சாற்றியிடு மங்கியிலே சங்காரம் - ஊற்றமாய், ஊன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோ தம்முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" உண்மைவிளக்கம், 36.

## சிவகாமியம்மை.

கருங்குழலுஞ் செவ்வாயும் வெண்ணகையும் பசுந்தோளுங் கனிந்த தீஞ்சொல், மருங்குழலுங் கருணைபொழி யிருவிழியும் பரஞானம் வழியுங் கோடும், இருங்குழலும் பணிமொழியுங் கொடியிடையும் பட்டுடையு மெறிவெம் பாசத், தொருங்குழலு மெம்மையுமாள் சிவகாமித் தாய்பதமு முன்னி வாழ்வாம். (௬)

## தக்ஷிணாமூர்த்தி.

வெற்றிநிக மாகமங்க ளுணரினுமா ளுசிரியன் வேண்டும் வேண்டார், ஒற்றிமரு வார்நம்மோ வென்றுரைத்த துணர்த்தியாங் கொருநால் வர்க்கு, முற்றியருள் கனியமொழி யாததுகை கொடுதெரித்து முனியா ருண்மை, பற்றியிரட் டுறமொழிய வாற்றூர்வீற் றிருப்பாரைப் பரவி வாழ்வாம். (எ)

## வயிரவக் கடவுள்.

(வேறு)

மாயவன் றனுக்குற் றேங்க மலரவன் கபாலத் தோடு
பாயவன் சூல மேற்ற பங்கயச் செங்கை யண்ணல்
ஆயவ னெம்ம னத்தோ டளவில்கேத் திரத்துக் காப்பு
மேயவன் வடுகப் புத்தேள் விரைமலர்ப் பாதம் போற்றி. (அ)

## மந்தார விநாயகர்.

(வேறு)

சந்தார வனமுலைப்பொன் றன்றூர மெனத்தழுவு தகையோன் முன்னோர், வந்தார வழுத்துதொறு மகிழ்ந்தார வாரவருள் வழங்கு வள்ளல், அந்தார மென்மொழியோ டாதார மாயுலகுக் கமருந் தெய்வ, மந்தார வனத்துலவு மந்தார மால்களிற்றை வணங்கி வாழ்வாம். (௯)

---

௬. மருங்கு உழலும். கோடு - யானைக் கொம்பு; என்றது தனத்தை. குழலும் பணிமொழி - புல்லாங்குழலும் பணிகின்ற சொல்.

எ. நிகமம் - வேதம். ஒற்றி - ஒன்று பட்டு. உரைத்தது - தாம் திருவாய் மலர்ந்தருளியதை. மொழியாமல் அதனைச் சின்முத்திரையால் தெரிவித்து. ஆற்றூர்-ஆற்றூரென்னும் தலம், ஆலமரத்தின் தூர்; தூர்-அடி.

அ. ஏங்க ஏற்ற என முடிக்க. வைரவக்கடவுளுக்கு க்ஷேத்திர பாலரென்னும் ஒரு திருநாமம் உண்டு.

௯. சந்து - சந்தனம். ஆரம் - முத்து வடம். பொன் - திருமகள். தாரம் - மனைவி. தகையோன் - திருமால். ஆர - நிறைய. வள்ளல் - சிவபெருமான். தாரம் - வல்லிசை. மென்மொழி - அஞ்சனக்கண்ணம்மை.

## முருகக் கடவுள்.

தருவள்ளி யரைவருத்திப் பொருவள்ளி யையும்படையிற் சவட்டும் வெய்யோர், கருவள்ளி யனுக்குகதிர் மருவள்ளி யலுமயிற் கைக் கந்தன் மிக்க, உருவள்ளிம் மடந்தையெனப் பெருவள்ளி மலைச்சார லுவந்து தொட்டுப், பருவள்ளி நுகர்குலத்து வருவள்ளி மணவாளன் பாதம் போற்றி. (க0)

## திருநந்தி தேவர்.

(கொச்சகக்கலிப்பா)

பரவுமரி யயன்முதலோர் பதியல்லர் பசுக்களென்றே
விரவுமட வருமுணர வேத்திரம்பல் கால்வீசிக்
குரவுகமழ் குழல்பாகன் குளிர்மலர்த்தாட் சேவையருள்
கரவுதவிர் நந்திபிரான் காமர்கழ லிணைதொழுவாம். (கக)

## அகத்திய முனிவர்.

உருப்பெருமை பெருமையென வுரைத்தல்பய னின்மைதவத்
திருப்பெருமை பெருமையெனச் செப்பல்பய னுண்மையென
மருப்பெருமைத் துழாய்நெடிய மாலுருவங் குழைத்ததவக்
குருப்பெருமைக் குறுமுனிவன் குளிர்மலர்ப்பொற் றாள்பணிவாம.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

ஒருத்தியை யியற்றி நோக்கி யுறுபெருங் காமம் பூண்டு
வருத்திவெம் பழியே யுற்ற மறையவ னுணங் கொள்ள

---

க0. தரு வள்ளியரை - கற்பகத்தாலே வண்மையை யுடைய தேவரை. வள் இயையும் - கூர்மை பொருந்திய. வெய்யோர் - அசுரர். கரு அள்ளி - கருவை அள்ளி. அனுக்கு - வருத்துகின்ற. கதிர் மருவு அள் இயலும் அயில்; அள் - கூர்மை. மிக்க உருவள் இ மடந்தை. தொட்டு - தோண்டி. வள்ளி நுகர் - வள்ளிக்கிழங்கை உண்ணுகின்ற.

கக. வேத்திரம் - பிரம்பு. குரவு - குராமலர். கரவு - கள்ளம்.

கஉ. திருக்குற்றாலத்தில் திருமாலை அகத்தியமுனிவர் சிவபெருமானாக்கியது இங்கே அறிதற்பாலது.

கந. (க) ஒருத்தி - திலோத்தமை. மறையவன் - பிரமதேவர். பழியுற்றது: "இன்று காறுஞ் சிறுசொல்லாய் நின்றதன்றே" (சீவக. 207.) (உ.) ஒருத்தி - சிவநேசருடைய குமாரி. வருத்தி - வரச்செய்து. இங்கே கூறிய செய்தி எலும்பைப் பெண்ணாக்கிய செய்தி. வெம்புகழ் - விரும்பத்தக்க புகழ்; வெம்மை - விருப்பம்.

ஒருத்தியை யியற்றி நோக்கி யுற்றபே ரின்ப மூழ்க
வருத்திவெம் புகலுழ யுற்ற மறையவன் சரணஞ் சார்வாம். (கங)

திருநாவுக்கரசு நாயனார்.

ஒருமகண் மயக்க நீங்கா தழன்றுசாம் பரிற்பு ரண்ட
திருமகண் மணாள னாணத் திருப்புக லூர்மின் னார்முற்
பெருமகண் மதலைத் தாம பிறைச்சடா முடிய வெற்பின்
வருமகண் முதல்வ வென்று வாழ்த்திவாழ்ந் தவர்தாள் போற்றி.(கச)

சுந்தரமூர்த்தி நாயனார்.

ஒருமணம் புரியா தாண்ட வும்பர்நா யகனே மீட்டும்
இருமணம் புரிவித் தெல்லா வேவலும் புரியப் பெற்றுக்
கருமணங் கழிய நீத்தார் கருதுபு வணங்கு மாண்பின்
வெருமணந் தவழ்தார் மார்பின் வள்ளலைப் பழிச்சி வாழ்வாம். (கரு)

திருவாதவூரடிகள்.

உடையபொன் னுடைய தாக்கொண் டொளிரச்சூழந் தொருபான் சன்மம், அடையவன் சமழ்ப்புக் கொள்ள வரசுபண் டாரத் தேற்ற, உடையபொன் னுடையா னுக்கே யொளிர்தரக் கொடுத் தோர் சன்மம், அடையவும் பெறாத வள்ள லடிமலர் முடிமேல் வைப்பாம். (கசு)

சண்டேச நாயனார்.

(கொச்சகக்கலிப்பா)

கோறலொரு தொழிலாகக் கொண்டபிரான் றிருக்கரத்திற்
கோறல்குறி யாதெடுத்துக் கொண்டமழுப் போலாது

---

கச. ஒருமகள் - பிருந்தை. சாம்பரில்......மணாளன்: "இடுகாட் டெண் மாத ரெலும்பிற் புரண் மால்" (நால்வர் நான்மணி.) மின்னார் முன்- தெய்வமாதர் முன்னே. பெரும: விளி. கள் மதலைத்தாம - தேனையுடைய கொன்றை மாலையை அணிந்தோய். வாழ்ந்தவர் - மகிழ்ந்தவர்.

கரு. ஒரு மணம் புரியாது. ஆண்ட - தடுத்தாட்கொண்ட. இரு மணம் - பரவை, சங்கிலி யென்பவர்களுடைய மணத்தை. கருமணம் - பிறவியின் கலப்பை. "ஒரு மணத்தை" (காஞ்சிப். கடவுள். 12) என்னும் செய்யுளின் பொருளைத் தழுவியது இது.

கசு. உடையதா - ஆடையாக. ஒருபான் சன்மம் - பத்துப் பிறவி. அடை அவன் - அடைந்த திருமால். அரசு பண்டாரத்து - பாண்டிய னுடைய கருவூலத்தில். ஏற்ற - ஏற்றுக்கொண்ட.

கஎ. சிதைப்பார் - தந்தையார்; சிதைப்பு ஆர் உயிரை எனப்பிரித் துச் சிதைத்தல் பொருந்திய உயிரையென்றும் கொள்ளலாம்.

கோறனுறு சிவதருமக் கொள்கைசிதைப் பாருயிரைக்
கோறல்குறித் தெடுத்தமழுக் குழவிமல ரடிபோற்றி. (கஎ)

நாயன்மார்.

(கலிவிருத்தம்)

பொருளின் மிக்க புரிசடைப் புண்ணியன்
தெருளின் மிக்க திருவடி சார்ந்தபேர்
அருளின் மிக்க வறுபத்து மூவரும்
மருளின் மிக்கவென் னுள்ளத்தும் வாழ்வரே. (கஅ)

பஞ்சாக்கர தேசிகர்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

கமச்சி வாயவங் கதிர்புரை மேனியுங் கருணைநாட் டமுங்கூறுத்
தமச்சி வாயவா ருயிருணர் முத்திரைத் தடங்கையு மதியாளர்
அமச்சி வாயமை குழாமெனச் செறிதிரு வாவடு துறைமேய
நமச்சி வாயதே சிகன்மலர்ப் பதமுமென் னயனம்விட் டகலாவே. ()

அம்பலவாண தேசிகர்.

(வேறு)

பண்டரு மலமுங் கன்மப் பகுப்புமா யையும்பற் ருது
விண்டருஞ் சுகத்து மூழ்க விரும்புயிர்க் கருளு மேலோன்

---

கஅ. பொருள் - தருமம். புண்ணியனது திருவடியை.

கசு. கம - நிறைந்த. சிவாய அங்கதிர்புரை - மாணிக்க மலையின் அழகிய ஒளியை ஒத்த; சிவாயம் - இரத்தினகிரி யென்னும் ஸ்தலம்; வாட்போக்கி. கூறு உத்தம சிவாய-சொல்லப்படுகிற உத்தமமாகிய சிவாய என்னும் திருமந்திரத்தை. உயிர் உணர் முத்திரை - உயிர்கள் உணரும் சின்முத்திரையை அணிந்த. இ வாய் அமை குழாம் அமைச்சு என - இவ் விடத்தே அமைந்த திருக்கூட்டங்கள் அமைச்சர்களைப் போல்வார்க ளென்று சொல்லும்படி. மதியாளர் எனச் செறிந்த எனக்கூட்டுக.

"தேன ருமகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக்காதும்
கான ருமலர்த் திருமுகச் சோதியுங் கயிரவத் துவர்வாயும்
மோன மாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையுமென் னயனம்விட் டகலாவே"

என்னும் பெரியார் வாக்கை ஒத்துள்ளது இது.

உ௦. பண்டு அருமலம் - பழையதாகிய கடத்தற்கரிய ஆணவமலம் கோமுத்தி - திருவாவடுதுறை.

அண்டரும் புகழ்கோ முத்தி யம்பல வாண தேவன்
தண்டருங் கமலப் பூந்தா டலைக்கணி யாக்கி வாழ்வாம். (உ0)

திருத்தொண்டர்.

(வேறு)

ஓவாத புறச்சமயப் பிணக்குமுழு மையுமொருவி யுண்மை தேர்ந்து
தாவாத பெருஞ்சைவ சித்தாந்தத் துறைபடிந்து தவமி லாரை
மேவாத வெண்ணீறுங் கண்மணியு மைந்தெழுத்து மேவிக் கொண்டு
தூவாத சுகத்தழுந்து நாயன்மார் கழல்பரவித் தொழுது வாழ்வாம். ()

# நூலியற்றுதற்குக் காரணம் முதலியன.

தழைதருநல் லாற்றூர்மான் மியமுழுது மொழிபெயர்த்துத் தமிழிற் பாடி, விழைதருமா தருகவெனக் கலியாண சோழபுரம் விரும்பி வாழ்வோன், உழைதருகைப் பெருமானு ருவந்துறையத் தலப்பணிமுற் றொருங்கு செய்தே, இழைதருபொன் னுலியன்ற கும்பாபி டேகமுஞ்செய் தின்பந் துய்ப்போன். (க)

தில்லைநட ராசருக்குச் சொன்னவிமா னமுங்கலனுஞ் செய்து நல்கி, வல்லையவர் குஞ்சிதத்தா மரைக்கொருதா மரைசூட்டி மகிழு மேலோன், எல்லையிலாப் புகழ்படைத்த சிதம்பரமால் கேட்கவுவந் தேற்று மாறுத், தொல்லைவினை முழுதொழிப்பான் ஞானமிலா யான் பாடத் துணிந்தேன் மன்னே. (உ)

அவையடக்கம்.

மந்தார வனத்தமருஞ் சிவபரன்வச் சிரவனமு மகிழ்ந்தா னின்னும், கொந்தார மலர்நறிய கடுக்கையொடு புல்லெருக்கும்

---

உக. தவமிலாரை மேவாத வெண்ணீறு. தூவாத - நீங்காத.

நூலியற்றுதற்குக் காரணம்.

உ. சொன்ன விமானம் - தங்க விமானம்.

அவையடக்கம்.

க. மந்தாரவனம் - ஆற்றூர்; மந்தாரம் தலவிருட்சம். வச்சிரவனம் - திருக்கள்ளில் என்னும் திருப்பதி யென்பர். நந்து ஆர - பெருகுதல் நிரம்ப.

கொண்டா னற்றால், முந்தார விளங்கறிஞர் வழுவில்பா மாலையொடு மூட னேனாய், நந்தார வழல்கொடியேன் பிதற்றியபல் வழுக்கவியு நயந்து கொள்வான். (௧)

அருளாளர் திருப்பாட லூர்தியுடை யான்செலனை ராகு மோர்ந்த, தெருளாளர் மொழிபாடல் கால்வலியா னடந்துசெலல் சிவனாந் தேரா, மருளாளர் வாய்ப்பாடன் முடவன்கோல் கொண்டு செலன் மானாங் கண்டக், கருளாளர் சரிதமெனுங் கோல்கொடென்பா டனாநடக்குங் கற்றோர் தேத்தே. (௨)

சிறப்புப்பாயிரம்.

நீர்பூத்த தடம்பணைசூ ழாற்றூர்மான் மியந்தமிழி னிலவச்செய் தான், ஏர்பூத்த திரிசிரா மலைவாழ்வோன் பெருங்கலைக்கோ ரெல்லை யானோன், கூர்பூத்த மதிகொடள வாப்பன்னூல் களுமியற்றுங் குணத்தான் மிக்கோன், நார்பூத்த மீனாட்சி சுந்தரநா வலவனெனு நல்லோன் றானே. (௧)

ஆகத் திருவிருத்தம்—உசு.

# ௧. திருநாட்டுப் படலம்.

பொதுவளம்
(கலித்துறை)

வலங்கு லாவிய மழுவல னேந்திய வானோன்
கலங்கு லாவிய முலையொடு கலந்துவீற் றிருக்கும்
பலங்கு லாவிய நதிபுர முதற்றலம் பலசால்
நலங்கு லாவிய சோழநாட் டணிசில நவில்வாம். (௧)

எண்ணி வானவ ரேங்குற விண்ணக மிகந்து
கண்ணி வார்குழன் மாதொடுங் கான்முளை யோடும்

௨. ஊர்தி - வாகனம் ; கண்டக்கருளாளர் - நீலகண்டர்; கருள் - கருமை.

௧. திருநாட்டுப் படலம்.

௧. கலம் - ஆபரணம். அம்பிகையோடு கலந்து. நதிபுரம்-ஆற்றூர்.

௨. கான்முளை - பிள்ளை ; என்றது முருகக்கடவுளை. தியாகர் - ஸ்ரீ தியாகராசப் பெருமான். அகன் அமர்ந்து - மனம் விரும்பி.

அண்ணி யார்க்கரு டியாகர்தன் பாலக னமர்ந்து
நண்ணி வாழ்தரத் தவம்புரிந் ததுபுன னாடு. (உ)

திங்கள் சூடியோன் றிருக்கயி லாயத்தோர் செல்வர்
எங்க ளாவடு தண்டுறை மேவிவீற் றிருந்து
கங்க ணான்குடை யவன்புகழ் மந்திரங் கரையப்
பொங்கு மாதவம் புரிந்தது பொன்னிநன் னாடு. (ங)

தூய கன்றினை யிழந்தவெந் துயர்க்குடஞ் சுட்டு
மேய தோர்ந்துதன் னொருமகற் கிடத்துபு மேலால்
ஆய தேர்நடத் தரசன்வெண் குடைநிழ லமர்ந்து
பாய சீர்மிகப் படைத்தது பரந்தநீர் நாடு. (ச)

ஆடு நீரெலாந் தீர்த்தங்க ளிருப்பதற் கமைந்து
கூடு தேமெலாந் தலங்களே குவித்தகை விரியா
நீடு சால்சிவக் குறிகளே யெங்கணு மென்றால்
நாடு மற்றிது போல்வதோர் நாடுமுண் டாங்கொல். (ரு)

## மழைவளம்.

நம்மை யூர்தரு மிறைவனே யளிக்குமிந் நாட்டின்
வெம்மை மேவுத றகாதென வேனில்வெப் பொழிப்பான்
செம்மை நெஞ்சுறக் குறித்தெழுந் தெனத்திசை யெழுந்த
அம்மை யாழியை நோக்கின மழைமுகி லனைத்தும். (சு)

பொருவி லாதகுண் டோதரன் போற்கடல் புகுந்தாங்
கொருவி லாதநீ ருறப்பெரு வாய்மடுத் துண்டு
வெருவி லாததம் வயிறுவீங் கிடவிரைந் தெழீஇத்தோம்
மருவி லாதகும் போதரன் போல்வரை வளைந்த. (எ)

---

ங. ஓர் செல்வர் - ஒரு சிவயோகியார். நூலாசிரியர்க்குத் திருவாவடுதுறை ஞானாசிரிய ஸ்தலமாதலால், 'எங்களாவடுதுறை' என்றார். கங்கள் - தலைகள்; கம் - தலை. வீற்றிருந்து - கவலையின்றி யிருந்து. மந்திரம் கரையா - திருமந்திரமென்னும் நூலை அருளிச்செய்து.

ச. குடஞ்சுட்டு-பசு. மேயது - மேவியதை. அரசன்-மனுவேந்தர்.

ரு. இருப்பதற்கு - தங்குவதற்கு. தேம் - இடம். ஈடு - பெருமை.

சு. இறைவன் - அரசன்; என்றது இந்திரனை. அமை ஆழியை - அழகிய கருமையையுடைய கடலை.

எ. எழீஇ - எழுந்து. தோம் - குற்றம். கும்போதரன் - சிவகணத் தலைவர்களுள் ஒருவன்.



MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

கோடை சுட்டிட நிலைபெயர் வின்மையாற் கொதித்தேம்
ஓடை மால்களிற் றும்பவென் றோங்கல்க ளுய்ங்க
ஆடை யாசைமான் முன்னவ னூர்தியை யனுப்ப
வாடை கூடவாட் டுதல்பொரூஉம் புயல்பொழி மழையே. (அ)

யாவ ரெவ்வயின் யார்க்குறித் திறைஞ்சுவ வெல்லாம்
தாவ ருஞ்சிவ பிரானிடைச் சார்தரு மாபோல்
ஏவு விண்ணெவ ணைவைகுறித் துப்பொழி வெல்லாம்
பாவு மாபுகழ்க் காவிரி சார்தரும் பரந்தே. (கூ)

அளவி லாருயிர்க் கின்பயன் றகுதியி னளிக்கும்
அளவி லாற்றனஞ் சிவபெரு மானென வமையா
அளவி லாறுகா லோடைக்குத் தகுதியி னளிக்கும்
அளவி லாதவின் சுவைப்புன லறைந்தகா வேரி. (கo)

திரைசெய் நீர்ப்பெருங் காவிரி நம்பர சிவனே
உரைசெய் மற்றத னிடம்பொலி கொள்ளிட முமையே
கரைசெ யிவ்விரண் டிடைப்பொலி காமரு மண்ணி
விரைசெய் நீபமா லிகைத்தடம் புயத்தசெவ் வேளே. (கக)

ஐய னுணையி னுயிர்க்கெலா நுகர்பய னளிக்கும்
செய்ய மாயையின் வயற்கெலாம் புணர்பயன் செறிப்ப

---

அ. பெயர்வு இன்மையால்; பெயர்வு - பெயர்தல். உம்ப: விளி. ஓங்கல்கள் உயங்க. ஆசை - பொன். மால் முன்னவன் - திருமாலுக்கு முன்னவனாகிய இந்திரன்: இதனால் திருமால் உபேந்திரனென்று கூறப்படுவர். வாடை - காற்று. காற்றுத் தன்னோடு ஆட்டுதல் பொரூஉம்.

கூ. யார்க்குறித்து - எந்தத் தேவரைக் குறித்து. "பலசமயத்தினுள்ளும் பயினசை வணக்கமெல்லாம், பலதலை யணிமா தேவன் பாலே சென்றுறுதல் போல" (திருநாகைக் காரோணப் புராணம்.) எவண் - எவ்விடத்தே. விண் - மேகங்கள். பொழிவு எல்லாம் - பொழியும் நீரெல்லாம்.

கo. கால் - வாய்க்கால். புனலை அளிக்கும்.

கக. மண்ணி - ஒரு நதி; இதற்கு ஆதியில் அமைந்தபெயர் சுப்பிரமணிய நதியென்பது; பிற்காலத்து ஆன்றோர் செய்யுட்களிலும் உலகவழக்கிலும் மண்ணியென மருவி வழங்குகின்றது. நீப மாலிகை - கடப்பமாலை.

கஉ. பொன்னி: எழுவாய். வெள்ளணி - பிறந்த நாளில் வெள்ளியமலர் முதலியவற்றால் அலங்காரம் செய்து கொள்ளுவது வழக்கம்; அது வெள்ளணிநாளென்று கூறப்படும்.

ஐய பொன்னிநீ ரீன்றமைக் கெடுத்தவெள் ளணிபோல்
வைய மெங்கணும் பரந்தது வெண்புனல் வயங்கி. (கஉ)

## உழவு முதலியன.

வாத வூரவ தரித்தவர் பெருந்துறை மாட்டு
வேத நாதனைக் கண்டுமேன் மேன்மகிழ்ந் தென்னச்
சீத வார்புனல் வயலுறும் பரந்தமை தெரிந்து
போத மாமகிழ் பூத்தனர் பொலிபல களமர். (கந)

மருவு தாந்தொழு தெய்வமாம் வானவற் பகைத்த
வெருவு தானவன் மார்பகம் பிளத்தன்மேற் கொண்டாங்
கொருவில் வன்கடும் பகட்டின முரப்பியொள் ளலத்தாற்
பொருவின் மள்ளர்க ளுழுவர்கள் வயலெலாம் போர்த்தே. ()

வெப்பு மேவிய பொழுதியல் பேபல விண்ட
அப்பு மேவிய பொழுதுவிள் ளுதலமைந் திடவும்
பப்ப கன்பணை யொன்றுபட் டேகுழை பால
செப்பு தண்மையிற் சிறந்ததொன் றுண்டுகொ றேரின். (கரு)

வரம்பு தன்னிலே குலைவது தகாதென மதித்து
நிரம்பு மாறுகங் கரிந்துநீ ரேறமே லேற்றிக்
கரம்பு தீரிட மெங்குநின் றாருவர் கடுகப்
பரம்பி ருந்தினி தூர்பவ ரூர்தொழில் பற்ற. (கசு)

உயிரெ ழுத்துமெய் யெழுத்துநன் னுளூறு பாலர்க்
கயர்வ றத்தெரித் தமைந்துபின் வணக்குமா ரியர்போற்
செயிரில் வெண்ணெலுஞ் செந்நெலு நாளுறச் செறித்துப்
பெயர்த ரும்படி கவிழ்த்திடு வார்புனல் பின்னர். (கஎ)

---

கந. பெருந்துறை - திருப்பெருந்துறை. போத - மிக. களமர்க்குத் திருவாதவூரர் உவமை.

கச. வானவன் - இந்திரனை. தானவன் - மதுவென்பவனது. கரும்பகட்டினம் - எருமைக் கடாவின் இனங்களை. அலம் - கலப்பை.

கரு. விண்ட - விண்டன. அப்பு - நீர். பப்பு - பரவிய,

கசு. கங்கு - வரம்பின் பக்கம். கரம்பு - தரிசு நிலம். பரம்பு-பரம்புப் பலகை. பரம்பிருந்து கடுக ஊருவர். ஊர்பவர் - யானை முதலியவற்றை ஊர்பவர்.

கஎ. நாள் - நல்ல நாள்.

பழுத்த வாரிய ரோம்பலிற் பற்றுமா ணவர்பால்
எழுத்து மேலசை சீர்முதற் பெருத்திட லென்னக்
கொழுத்த நீர்வயற் பாற்குலாந் தொழுவர்க ளோப்ப
முழுத்த சொன்முளை யோரிரண் டிலைமுதன் மொய்த்த. (கஅ)

சொற்பெ ருக்குவான் பல்லிடந் தொறுஞ்சென்று தோயும்
மற்பெ ருக்குநன் மாணவர் பெருங்குழா மானச்
சொற்பெ ருக்குவான் பல்வய றொறுஞ்சென்று தோயும்
மற்பெ ருக்குநன் னாறுமள் ளர்கடொழில் வயங்க. (கசு)

தாழ்ந்தெ ழுந்துநூ லுணர்பவர் தமைப்பிணி மிடிமுற்
சூழ்ந்து மேல்வருத் திடலெனத் தொக்கசெய் தோறும்
தாழ்ந்தெ ழுந்துயர் பயிர்களைக் குவளைதா மரைமுற்
சூழ்ந்து மேல்வருத் தஞ்செயத் தொடங்கின மாதோ. (உ0)

## களைகட்டல்.

### (கலிவிருத்தம்)

கலையுணர் பவர்க்கிடை யூறு காற்றுபு
நிலைபெற வியற்றிடு நீர்மை யாளர்போல்
உலைவறு களமரு ளொழிந்து பைம்பயிர்
அலைவறப் புரிதிற னுற்ற வெண்ணினர். (உக)

எண்ணிய பொழுதுசெய் யெழிறெ ரிந்திட
நண்ணிய வோதிமக் குழாங்க ளுடியாங்
கண்ணிய வாற்றுக்கா லாட்டி மார்பலர்
உண்ணிய வடர்களை யொறுத்தன் மேயினர். (உஉ)

---

கஅ. தொழுவர் - தொழில் செய்யும் உழவர். முழுத்த - பூரணமாகிய. சொல்முளை - நெல்முளை.

கசு. சொல் - மொழி, நெல். மல் - வளம். மாணவர் - மாணாக்கர்; இவர் செயல்; "அங்கங்கே கலைக டேரு மறிவன்போ லியங்குமன்றே" (திருவிளை. தருமிக்குப் பொற்கிழி. 19) என்பதனாலும் அறியப்படும். நாறு - நாற்று. நாறுதோயும்.

உ0. 'வித்தைக்குச் சத்துரு விசனம் தரித்திரம்' என்பது ஒரு பழமொழி.

உக. காற்றுபு - நீக்கி. ஊறு ஒழிந்து - இடையூறு நீங்கி.

உஉ. ஓதிமம் - அன்னம். ஆற்றுக் காலாட்டிமார் - கடைசியர். உண்ணிய அடர்களை - உண்ணுதற்கு அடர்ந்த களைகளை.

முண்டக முதலிய முருக்க வும்புனல்
எண்டக முகஙிழ லாதி யெய்ந்தன
கண்டகங் கறுத்தனர் கண்சி வந்தனர்
மண்டகங் கொண்டன மறுத்து மென்னவே. (உரு)

மருவிய புனல்விழி வதனந் தோன்றக்கண்
பொருவிய வளிமரை பொருந்தக் கூடிநின்
றொருவிய வல்லவென் றுடன்று பற்றுவார்
வெருவிய கைப்படா வியப்பி னிற்பரால். (உச)

மாதர்தங் கையகப் படாத மாட்சியால்
மேதகு விண்ணர விந்த மோவென்பார்
ஆதரத் திங்குமண் ணரவிந் தந்தபப்
போதர லுற்றன புதுமை யேயென்பார். (உரு)

அம்புய மனைத்தையுஞ் சவட்டி யாய்மலர்
வம்புயர் குழலினர் வரப்பி லேற்றுவார்
பம்பிய பங்கயம் பகைத்த காரணத்
தம்பரி வுளங்கொளுஉச் சவட்டன் மானவே. (உசு)

மிடிபிணி நித்திரை வெகுளி யாதிய
ஒடிதரக் கலையுணர் வோங்கி யாங்குசெய்
படியரக் காம்பன்முற் பலவுங் கட்டலாற்
கடிதலில் பயிரெலாங் கதித்த வென்பவே. (உஎ)

வெள்ளிய தாழையின் மடல்கி ழித்துமேல்
துள்ளிய வரும்பெனக் கதிர்க டோன்றின
உள்ளிய வவைவிரித் தென்ன வூங்கெலாம்
தெள்ளிய பருவத்தின் விரிந்து சீர்க்குமே. (உஅ)

சாலியென் பெயர்கொடு தங்கு நீர்மையால்
வாலிய மடந்தையர் வதனஞ் சாய்த்தறத்
தாலிய றன்மையை யறிவித் தாங்குநன்
பாலியல் கதிர்கள்சாய்ந் தசைந்த பாங்கெலாம். (உகூ)

---

உரு. புனலில் மறுத்தும் அகம் கொண்டனவென்று; அகம் - இடம்.

உரு. விண் அரவிந்தமோ - ஆகாயத்தாமரையோ. தப - கெட.

உசு. வம்பு - நறுமணம். சவட்டல் - தடிதல்.

உகூ. சாலி - அருந்ததி, நெற்பயிர்.

## நெல்லரிதல் முதலியன.

முற்றிய கதிரென மூரி மள்ளர்கள்
பற்றிய குயத்தொடு பழனம் புக்கனர்
சுற்றிய முழுமையுந் தொட்ட ரிந்தனர்
செற்றிய களம்புகச் சேர்த்திட் டாரரோ. (௩0)

## (அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

வெள்ளி வரையிற் பொன்வரையின் மிக்கு நிவந்த போர்பலவும்
தள்ளி நிலனெங் கணும்பரப்பித் தவாவன் கடாக்கள் பலபிணைத்துத்
துள்ளி யெழுந்து களமர்பல ருரப்பி நடத்தச் சுழல்காட்சி
நள்ளி முகில்கள் வளங்தெரிந்து நாதற் குணர்த்தச் சூழ்தல்பொரூஉம்.

நிலவு தமக்காம் வைநின்று நென்னீங் கியது தெரிதரல்போற்
கலவு பிணையற் கடாக்கள்வாய் கவ்வி நோக்கும் படிநடத்தி
உலவு களமர் வைவேறு நெல்வே றுக வுஞற்றியே
சுலவு வளியிற் பதடிபொடி தூற்றிப் போக்கிக் குவித்தளப்பார்.(௩௨)

திருந்து மிறைக்கு மறத்தினுக்குஞ் செலுத்துந் தகவிற் செலுத்தியபின்
பொருந்த வளந்து கொடுபோகிப் பொங்கு மனையுய்த் திடுவாரும்
விரிந்த கமுகு கதலிமுதல் விரும்பு பலன்கள் கொள்வாரும்
பரிந்து புனலாட் டயர்வாரும் பரவப் படுவ தண்ணடையே. (௩௩)

உருவிற் சிறிய தாயினுமொண் பயனிற் பெருமை யுடையதனால்
உருவிற் சிறிய னுயினுமொண் பயனிற் பெருமை யுடையவனுய்
உருவிற் சிறந்த திருமுருக னெக்கு மண்ணிப் புனல்வளத்தால்
உருவிற் பொலியும் பலவளமு முலவா தென்றுஞ் சோணுடு. (௩௪)

கற்றூர் நிறையுஞ் சீர்நாடு கருமால் பொழின்மே லூர்நாடு
பற்று ரச்சங் கூர்நாடு பசிசெய் வருத்தந் தீர்நாடு

---

௩0. மூரி - வலிமை. குயம் - அரிவாள்.
௩௧. உரப்பி - அதட்டி. நள்ளி - செறிந்து. நாதன் - இந்திரன்.
௩௨. வை - வைக்கோல். சுலவு - சுற்றுகின்ற. பதடி - பதர்.
௩௩. தண்ணடை - மருத நிலங்கள்.
௩௪. மண்ணிநதியை இங்கே கூறியது இத்தலத்தை யடுத்து ஓடுவது பற்றி; இது கொள்ளிடத்தினின்றும் பிரியும் நதிகளில் ஒன்று.
௩௫. கருமால் - கரிய மேகம். பற்றூர் - பகைவர்.

பெற்றூர் பிரியாப் பேர்நாடு பெருமை பலவுஞ் சார்நாடு
செற்றூர் புகினு மேர்நாடு செல்வந் துறுக்கு நீர்நாடு. (௩ரு)

இன்ன நாட்டின் வளஞ்சிறிது மிற்றென் றரவிற் கரசாலும்
பன்ன வரிதிந் திரனாலும் பார்க்க முடியா தென்னின்யாம்
என்ன புகன்று மென்கண்டா மீது நிற்க வெம்பெருமான்
மன்ன வுமையோ டமராற்றூர் வளத்துஞ் சிறிது புகலுவாம். (௩சு)

ஆகத் திருவிருத்தம் - சுஉ.

## உ. திருநகரப் படலம்.

(கலித்துறை)

அளவி லாச்சிவ புண்ணிய மாருயிர்க் காற்றூர்
அளவி லாவற நடவையே பெரும்பொரு ளாற்றூர்
அளிவி லாமகிழ் திளைத்திடு மின்பமிக் காற்றூர்
அளவி லாதவா னந்தமுத் தியுமினி தாற்றூர். (க)

சோலை.

அரவு சூடிய தம்பிரா னினிதம ராற்றூர்
விரவு மண்ணுல கென்னலா மதன்புடை விராய
பரவு பேரொலிக் கருங்கடல் பரந்துவண் டொலிப்ப
உரவு மேவுபைந் தழைகொடவ் வூர்வளை சோலை. (உ)

அன்ன வாரிதிப் புதுநுரை பழநுரை யாவ
இன்ன சோலையின் வெண்மலர் செம்மல ரியைய
அன்ன வாரிமே லூர்தரு மரக்கல மன்ன
இன்ன சோலைமே லூர்தரு முகிற்குல மெல்லாம். (௩)

---

௩ரு. ஏர்நாடு செல்வம் - அழகை நாடுதற்கு உரிய செல்வம். துறுக்கும் - மிகச் செய்யும்.

௩சு. அரவிற்குஅரசு - ஆதிசேடன்.

திருநகரப் படலம்.

க. அறநடவை - தருமவழி.

உ. விராய் - கலந்து. உரவு - வலி. சோலைக்குக் கடல் உவமை.

௩. வாரிதி - கடல். இயைய - ஒப்ப. அன்ன - ஒப்பன.

அனைய வாழ்கட னித்திலந் துகிர்க்கொடி யாய
இனைய நீள்பொழி லரும்புமா டெழின்மட வாரும்
அனைய வாழ்கடன் மேற்பயில் சங்கமே யாகும்
இனைய நீள்பொழின் மேற்பயி லெழில்வளர் பிறையே. (ச)

அறையு மன்னநீ ராழியிற் போய்ப்புகு மாறு
நிறையு மாந்தரச் சோலையிற் போய்ப்புகு நெறியே
அறையு மன்னதெண் டிரையகத் தாழ்ந்தபன் மணிகள்
நிறையு மாதரா டிடக்கல னின்றுகு மணிகள். (ரு)

அன்ன பைம்பொழில் வானமேற் போகிய வதனால்
இன்னன் மேவுறுப் புனல்வள நாட்டினுக் கிறைவன்
சொன்ன யானத்தைத் தடுத்தது பிறைமதி சூடி
முன்னை நாட்டடுத் தானென மொழிதல்பொய்ம் மொழியே. (சா)

போற்று மாதலந் தன்னகத் தெழுந்தபைம் பொழிலாற்
சாற்று யானத்தைத் தடுக்கவு மிறைதடுத் தானென்
றுற்று நூல்வலர் புகலுத லதற்குமற் றவற்கும்
வேற்று மைத்திற னின்றெனு மெய்யுணர்ந் தன்றே. (எ)

வாரி வேலையின் புறத்துற மண்டிய தாலம்
மூரி வார்பொழில் வேலியின் புறத்துமொய் தெங்கு
மூரி வார்பணைப் புறம்பொலி முழுப்பெருங் கழிகள்
வாரி நீர்பொழி மாறவழ் தென்மருங் கோடை. (அ)

புறநகர்.

ஓங்கு செம்பொன்செய் தொளிவளர் மாடத்தி னுள்ளாற்
கோங்கு மென்முலை மடந்தைமார் குழன்மலர்க் குப்பை

---

ச. துகிர்க்கொடி மடவாருக்கு. அரும்பும் மடவாரும்.

ரு. ஆறு - நதி. ஆடிட - நீராடுதலால். கலன் - ஆபரணம்.

சா. இறைவன் - சோழனது. சொன்னயானம் - தங்கவிமானத்தை. தடுத்தது பைம்பொழிலே.

எ. அதற்கும் - அத்தலத்திற்கும். இதனாற் சிவபெருமானுக்கும் தலத்திற்கும் வேறுபாடில்லை யென்பதைத் தெரிவித்தபடி.

அ. வேலை - கரை. தாலம் - பனை. தென்பக்கத்துள்ள ஓடையே கழிகள்; இந்த ஓடை நாற்றங்காலாக மாறிச் சிற்றோடையென இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றது.

வீங்கு செம்மணி கதிர்க்குமம் மாடத்தின் மேலாற்
பாங்கு விண்ணர மாதர்பைங் குழன்மலர்க் குப்பை. (கூ)

மன்னு செம்மணி வாள்விடு மாடத்தி னுள்ளால்
துன்னு மாடவ ராடுதல் காவிரித் தூநீர்
மின்னு பொன்னுல குரினுமம் மாடத்தின் மேலால்
இன்னு மாடவ ராடுதல் வானியாற் றியைநீர். (க0)

முத்த வெண்சுதை தீற்றுபு முழுநிலா வெறிக்கும்
சுத்த மாடமே லரமியத் தலத்திலொண் டொடியார்
அத்த மேவல கவர்குழற் சிதர்மல ரகற்ற
ஒத்த வாவயிற் கற்பக முகுப்பபூங் குப்பை. (கக)

நாடு பேரருட் செல்வரு நணிவியந் தடைதல்
கூடு மாளிகைக் கமைத்தசோ பானமுட் குறிக்கின்
ஏடு துன்றிய கற்பக நாட்டினுக் கெய்த
நீடு மால்பசை யாதமைத் திடுதிற நிகரும். (கஉ)

ஊடு மாதர்தஞ் சிலம்பொலி யொருபுற மொலிக்கும்
கூடு மாதர்மே கலையொலி யொருபுறங் குலவும்
பாடு மாதர்யாழ் நரப்பொலி யொருபுறம் பரவும்
ஆடு மாதர்காற் சதங்கையு மொருபுறத் தார்க்கும். (கங)

அறந்த வாதவந் நகர்த்தலை யெம்பிரா னருளாற்
சிறந்த வாடவர் பல்வகைப் போகமுஞ் சிவண
விறந்த வேட்கையிற் றுய்த்தலா லிந்திரன் விழைவார்
உறந்த வாயிரங் கண்பெறு வொருகுறை யுண்டே. (கச)

தருண மங்கையர் கொங்கையிற் கழிந்தசெஞ் சாந்தும்
பொருண லம்பட ருங்கருப் பூரமும் புழுகும்
இருண யந்தமற் றவர்குழ னின்றுவீ ழிணரும்
தெருண லம்படா தெங்கணுங் குப்பையாச் சிவணும். (கரு)

---

கக. சுதை - சுண்ணும்பு. அரமியம் - நிலாமுற்றம். அகற்றும்படி உகுப்பன.

கஉ. சோபானம் - படி. ஏடு - பூவிதழ். மால்பு - ஏணி.

கச. விறந்த - மிக்க. இந்திரனை ஒப்பார்.

கரு. தருணம் - இளமை. சிவணும் - கலக்கும்.

### யானை.

இன்ன மாநக ரியானையோ டேற்றிக ரேற்று
முன்ன மோடுபு போக்கிட மறத்திசை முட்டி
என்ன செய்துமென் றசைவற நிற்பன வின்னும்
அன்ன தோர்கிலர் திக்கய மென்றறை குவரே. (கக)

### குதிரைகள்.

காம னின்னகர்ப் பரியுளோன் றவாவினன் கவரான்
நாம வொற்றுமைச் சார்பினுற் கிள்ளையை நயந்தான்
ஏம மேவநம் மைச்சும வாதென வெண்ணித்
தூம வாரழல் சுவைக்குமா தன்னுருத் தொலைத்தான். (கஎ)

### வீரர்கள்.

இனிய வாருயி ரினுஞ்சிறந் ததுபுற மென்பார்
நனிய வாவியும் பொருநரில் குறைகொடு நலிவார்
முனிய வெண்டிசைப் பாலருண் முக்கணுன் முன்னும்
கனிய முன்கொடுத் தானையே வீரர்கா முறுவார். (கஅ)

### தேர்கள்.

சென்ற வாற்றுமீட் டெய்தலாற் செந்தமிழ்ப் புலவர்
ஒன்ற வாற்றிய மாலைமாற் றொத்தன மொருநீ
என்று மற்றைய செய்யுள்போல் வாயென வினன்றேர்
கன்ற வெள்ளுவ கடுவிசைத் தேர்பல கவினும். (கசு)

சந்த மாதர்கள் வாவியாட் டயர்தொறுந் தணவா
தந்த மாதரோ டாடுவ வஞ்சிறை யன்னம்

---

கசு. போக்கிடம் அற.

கஎ. கிள்ளை-குதிரை, கிளி; பெயர்ச்சார்பினுற்கிள்ளையை நயந்தானென்பது, "தண்டாது புல்லப் பெறுதாற் பெயர்ச் சார்பு நாடி, ஒண்டார் புனையு நளகூபரன் றன்னை யுற்றாள்" (நைடதம், அன்னத்தைத்தூது. 65) என்பதை ஒத்துள்ளது. சுவைக்குமாறு - உண்ணுமாறு.

கஅ. புறம் - முதுகு. இல்குறை - இல்லாத குறை. முன்கொடுத்தான் - மார்பைக் கொடுத்தான்; யமன்.

கசு. இனன்தேர் - சூரியனுடைய தேரை. தேர்கள் சூரியனுடைய தேரை எள்ளுவன.

உ0. இயல்காறும் - நடக்கும் வரையில்; "இயல் புடைபெயர்வன மயில்" கம்ப. நாட்டுப். 42.

கந்த மார்பொழி லனையமா தர்களியல் காறும்
மூந்த வாதரித் தியலுவ மொய்தழை மஞ்ஞை. (௨0)

வண்டு சூழுவ மாதர்தங் கூந்தலே யல்ல
கண்டு நேர்மொழி மற்றவர் தளிர்புரை கையும்
விண்டு நேருவ வனையர்மென் றோள்களே யல்ல
மண்டு மற்றவ ருதரவான் மென்மயி ரொழுங்கும். (௨க)

கிள்ளை மேவுவ மாதர்தங் கிளர்கையே யல்ல
வெள்ளை வாணகை யன்னவர் பணைத்தமென் முலையும்
வள்ளை நேருவ மற்றவர் வார்செவி யல்ல
புள்ளை யோவுருக் குழலவர் பொலிமலர் வாயும். (௨௨)

கள்ள மேவுவ வனையவர் கண்களே யல்ல
கொள்ளை வண்டுசான் மற்றவர் நறுமலர்க் குழலும்
உள்ள வாடுவ வவரிவ ருசலே யல்ல
தள்ள ருந்திற லாடவர் தந்தவா மனமும். (௨௩)

மதிலும் அகழியும்.

அவனி யாநடு நின்றுமேல் கீழள வறியப்
புவன நாயக னமைத்துவைத் தாலெனப் பொலிவ
உவமை தீர்தர வுயர்ந்துமே லுரிஞ்சிய மதிலும்
தவலி லாதுகீழ்த் தடையறப் போகிய வகழும். (௨௪)

பரத்தையர் தெரு.

அற்கு மாடவர் பொன்கவர் பார்வையைத் தாங்கு
விற்கு லாவுபொற் பணிபல மெய்புறச் சுமத்திக்

---

௨க. வண்டு: சிலேடை; மற்றொரு பொருள் சங்கு. விண்டு - மூங்கில், திருமால்.

௨௨. கிள்ளை - கிளி, கிள்ளுதலை. வள்ளை - வள்ளைக்கொடி, சுண்ணம் இடிக்கும் உலக்கைப்பாட்டு.

௨௩. கள்ளம் - திருட்டுத் தன்மை, கள்ளாகிய நீர். இவர் ஊசல்-ஏறுகின்ற ஊசற்பலகை.

௨௪. அவனியாகிய நடுவிடத்தில் நின்று. உரிஞ்சிய - தேய்த்த.

௨௫. அற்கும் ஆடவர் - தங்கியிருக்கும் ஆடவர். பார்வை-பார்வை மிருகத்தை. பொற்பணி - பொன்னாபரணங்களை. ஆவயின் - அவ்விடத்தில்.

கற்கு நூல்வல முனிவருங் கனியுமா றின்பம்
விற்கு மாதர்தஞ் சேரியு மாவயின் மேவும். (உ௫)

வேளாளர்.

மலரின் மேயவன் றுணின்று மாண்மையின் வந்த
நிலவு மேதுவி னுடையர்தா ளாண்மையை நிகழும்
அலகி லாதவே ளாண்மையாங் காரணத் தகிலப்
பலரை யும்புரப் பாரமர் வீதியும் பலவால். (உ௬)

வணிகர்.

எத்து ணைப்புனல் சாரினும் வெறுப்பற வேற்றும்
எத்து ணைப்புயல் சாரினும் வெறுப்பற வீத்தும்
ஒத்த வாரிபோற் பல்பொரு ளேற்றுமுற் றளித்தும்
ஒத்த நாய்கர்வா ழிருக்கையு மாவயி னுண்டால். (உ௭)

அரசர்.

இழிந்த தேற்றுமிக் குயர்ந்ததே யீத்திடு மிறைபோற்
கழிந்த மேவல ராண்டமண் கைக்கொடு போகம்
பொழிந்த விண்ணுல கந்தரு பொலிவினர் நீதி
வழிந்த கோவின ரிருக்கையு மொருபுற மருவும். (உ௮)

அந்தணர்.

தழலு ருப்பிரான் றனைத்தமுன் முகந்தரி சிப்பார்
உழல்ப சுப்பல வழித்துமொண் டுய்மையே யுற்றூர்
கழல்ப ழித்தனை யார்மறை முழுமையுங் கற்றூர்
சுழல்பி றப்பொரூஉ மந்தண ரிருக்கையுஞ் சூழ்வ. (உ௯)

ஆதிசைவர்.

சோதி நாயகன் முகங்களோ ரைந்தினுந் தோன்றும்
தீதி லேதுவான் மறைகளா கமமெலாந் தெளிய
ஓதி நாளுமான் மார்த்தமும் பரார்த்தமு மோம்பும்
ஆதி சைவர்வா ழிருக்கையும் பற்பல வாங்கண். (௩0)

---

உ௬. தாளாண்மை - முயற்சி.

உ௮. இறை - சிவபெருமான். மேவலர் - பகைவர்.

உ௯. தழலுருப் பிரான்றனை - சிவபெருமானை. கழல்பழித்தனை யார் - ஆணவமாகிய பந்தம் நீங்கப்பெற்றவராய். ஒரூஉம் - நீங்கிய.

௩0. ஈசனுடைய ஐந்து முகங்களாவன : சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தத்புருடம், ஈசானம்.

## ஆசிரியர்கள், யோகியர்.

ஊன மோவுபல் கலைகளு முற்றவர்க் குறுத்தும்
மான வாழ்வின ரிருக்கையு மலமுதன் மாய
ஆன பேருட் கலப்பினென் றிரண்டென லறுத்த
மோன யோகிய ரிருக்கையு மாவயின் முயங்கும். (௩௧)

## தண்ணீர்ப்பந்தர், அன்னசத்திரம்.

ஆல வாயினம் மிறையமைத் ததனினு மதிக்கும்
சால வெண்ணுநீர்ப் பந்தருந் தவாக்கறி யமுதும்
கோல மார்திரு வமுதுஞ்சிற் றுணைக்களுங் குழுமி
ஏல வாய்ந்தசத் திரங்களும் பற்பல வெங்கும். (௩௨)

## திருக்கோயில்.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மேவுசீர்ச் சோழ நாடு விளக்கஞ்சால் சுவேத வட்டத்
தீவுவெண் மாட மெண்ணில் செறிதரு மாற்றூர் குற்றம்
ஓவுபாற் கடலவ் வாழி நடுவின னுதய மொக்கும்
தாவரும் பெருமான் மேய தமனியத் தமைந்த கோயில். (௩௩)

## திருமதில்.

மலைமக ளொருத லத்து மலையுரு வாய பெம்மான்
மலையமர் குகன்பு ழைக்கைம் மலைமுகக் கடவுண் முன்னோர்
மலைவற வமர்தே மென்று மதித்தொரு நேமி வாள
மலைவளைந் தென்னச் சூழும் வான்றவழ் ஞொச்சி மாதோ. (௩௪)

---

௩௧. உறுத்தும் - அடையச் செய்யும்.

௩௨. ஆலவாயி.........பந்தரும் : இச்சரிதத்தை, தண்ணீர்ப் பந்தல் வைத்த திருவிளையாடலால் அறியலாகும். திருவமுது - அன்னம்; கறியமுது திருவமுது : "கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட" பெரிய. காரைக்கால். 19.

௩௩. இனன் - சூரியன்.

௩௪. ஒரு தலமென்றது திருவண்ணாமலையை. புழைக்கைம்மலை - யானை. நேமிவாளமலை - சக்கரவாளகிரி. ஞொச்சி - மதில். நேமிவரை இங்கே வந்ததென்பதற்கு ஏற்ப மலைகளின் சம்பந்தங்கள் இதன்பாற் கூறப்பட்டிருக்கின்றன.

### திருமதின்மேலுள்ள நந்திகள்.

வரைமதி லுருவங் கொண்டு வளைந்துமெய் வன்மை பெற்றுக்
கரைபழும் பகைவாழ் வானங் கடியமே லெழுவ தோர்ந்து
புரையினம் பெருமா னேவப் போந்தமர்ந் திருந்தன் மானும்
நரைவிடை பலவா ஞெச்சி மீதுநன் கமருந் தோற்றம். (௩௫)

### திருக்கோபுரம்.

ஈனமின் மேரு வெற்பு மியைதர வெய்தி விண்ட
வானகந் தகர்ப்பான் செல்லும் வரையினைத் தடேற்க வென்று
தேனமர் கொன்றை யார்முன் செப்பிநிற் கின்ற தேய்க்கும்
ஆனபல் சன்மு ழுக்க மறுப்பெருஞ் சிகரி மாதோ. (௩௬)

### விமானங்கள்.

சிகரியாய் மேரு நிற்குந் திறந்தெரிந் ததன்க ணுள்ள
புகரில்பல் சிகர மெல்லாம் போந்தமர் தன்மை காட்டும்
அகனமர்ந் தெம்பி ரானு மம்மையு மற்று ளோரும்
நகவமர்ந் திருக்குங் கோயி னக்கபொன் விமான மாதோ. (௩௭)

மேருவுஞ் சிகரக் காடும் விராயிவ்வா றமர்ந்த தோர்ந்து
சாருமோர் தெய்வ நாவ ருனும்வந் தவணின் றென்னப்
பாரும்வா னகமு மேத்தும் பரமனை நிழற்று நிற்கும்
ஓருமா மணவீ மல்க வோங்குமந் தார மாதோ. (௩௮)

### மண்ணியாறும் சிவதீர்த்தமும்.

நக்கபொன் வரைசூழ் சாம்பூ நதமுமங் கடைந்தா லென்னத்
தொக்கபொன் னெடுத்தெ றிந்து சூழ்தரு மண்ணி யாறு
மிக்கவவ் வரைப்பா ளுரு மேவுமா னதமே யென்னப்
புக்கவர்க் கின்ப நல்கிப் பொலிதருந் திருமுன் றீர்த்தம். (௩௯)

---

௩௫. வரை : எழுவாய். பழம்பகை - இந்திரன். ஓர்ந்தது சிவபெருமான். தடேற்க - தடைசெய்யற்க; இது, ' அழேற்கெம்பாவாய் " (பெருங். ௧. 36 : 74, ௪. 14 : 148) என்பது போன்றது.

௩௮. நாவல் - நாவல்மரம். மணவீ - மணத்தையுடைய மலர்கள்.

௩௯. சூழ்தரும் : முற்று. மானதம் - மானதவாவி. திருமுன்றீர்த்தம் - சந்நிதியிலுள்ள தீர்த்தம்.

நிகழ்தரு சொன்ன யான நிரோதன புரேச ரென்றோம்
அகழ்தரு கருணைத் தாயா மஞ்சனக் கண்ணி யோடும்
இகழ்தரு பவத்தி னீங்கி யின்பவா ரிதியின் மூழ்கப்
புகழ்தரு வாருக் கஃதே புணர்த்திவை குவரக் கோயில். (௪0)

ஆகத் திருவிருத்தம் - ௧0௨.

---

# ௩. நைமிசப் படலம்.

[நைமிசாரணியத்தில் சவுனகர் முதலிய முனிவர்கள் யாக மொன்று செய்தபோது சிவபிரான் திருவருளைப் பெறுதற்குச் சிவஸ்தல புராணம் கேட்டல் ஏதுவாகுமென்று எண்ணினர். சூதமுனிவர் அங்கே எழுந்தருள அவரைக் கண்டு முனிவர்கள் வணங்கி உபசரித்து, "நாங்கள் சிவபுராணம் கேட்கும் ஆவலோடு இருக்கையில் தேவரீர் எழுந் தருளியது எங்கள் பெரும்பேறாகும். தேவரீர் முன்பு, காசி அதனை யொத்ததலங்களாகியவற்றின் மான்மியங்களை யருளக்கேட்டு யாங்கள் உய்ந்தோம். இப்பொழுது காசியினும் மேம்பட்ட தலத்தைப்பற்றி அறியவிரும்பினோம்" என்று பணிந்து இரந்தனர். உடனே சூத முனிவர், "முன்பு குருக்ஷேத்திரத்திற் சுருக்கிச் சொன்ன ஒரு தலத் தின் பெருமையை இப்பொழுது கூறுகிறேன். அது சுப்பிரமணிய நதியென்னும் ஆற்றின்கரையிலுள்ளது. அது சொன்னயான நிரோதமா நகரென்றும் வழங்கும். அதன் பெருமை காந்தபுராணத்துள் உபய காவிரி மான்மியத்தில் முத்தித்தலப் பிரகரணத்துட் கூறப்படும்" என்று அதனை விரித்துக் கூறலானார்.]

---

## நைமிசாரணிய வளம்.

(கலிவிருத்தம்)

தண்மை மேயமந் தாகினி வானகரை
அண்மை மேய1தமர ரவாம்பொழில்

---

௪0. என்றோம் அகழ்தரு - என்குற்றத்தைப் பெயர்த்து நீக்கு கின்ற. அஃதே - இன்பவாரிதியையே.

௩. நைமிசப் படலம்.

௧. மந்தாகினி - கங்கை. அமரர் அவாம்பொழில் - தேவர்கள் விரும்பும் கற்பகச் சோலை. எண்மை - எளிமை.

எண்மை மேயதென் றெள்ளுநர் போற்றிட
உண்மை மேய வொளிவளர் நைமிசம். (க)

அடர்ப சுந்தழை யாசினி பற்பல
இடர்த பத்தழைந் தெங்கணு நிற்றலாற்
படர்மு கிற்குல மென்று பசுமயில்
தொடரு வப்புத் துதைய வகவுமே. (உ)

ஆடு மஞ்ஞை யருமை தெரிந்தவட்
கூடு பொன்சொரி வள்ளல் குழாமெனப்
பாடு மேய பலவிடத் தும்பலர்
தேடு பூக்கள் செருந்தி யுகுக்குமே. (ங.)

கொடைவி ராவிய வள்ளற் குழுவகத்
திடைவி ராவி யுலோபரு மெய்தல்போல்
அடைவி ராவ வலர்ந்த செருந்தியின்
புடைவி ராவிப் பொருந்துவ வற்றலும். (ச)

நனைய சூதம் பயிலு நகுகுயில்
துனைய வேறுபு சூர்முதன் மாவின்மேல்
இனைய விந்திர னென்னுங் கருங்குயில்
வினைய மேவ மிதித்திட லொக்குமே. (ரு)

கரிய புன்னை யரும்பிக் கவின்றரப்
பெரிய பூத்த பலாசு பிணைவன
உரிய வெண்ணகை மோகினி யொண்முலை
தெரிய மேவுஞ் சிவபரன் போலுமே. (சு)

திருகு தீரொரு மூங்கில்செவ் வேயெழ
அருகு வேயொன் றமைய வளைதலாற்
பெருகு தானப் பெருவெள்ளை யானையும்
பருகு தோட்டி யெனப்பதைத் தஞ்சுமே. (எ)

---

உ. ஆசினி - வேர்ப்பலா. துதைய - பொருந்த.

ங. செருந்திமலருக்குப் பொன் உவமை.

ச. வற்றல் - ஒருவகைமரம்; உலர்ந்த மரமுமாம்.

ரு. நனைய சூதம் - அரும்புகளையுடைய மாமரம். இனைய - வருந்த.

எ. செவ்வே - நேராக. தானம் - மதம். வெள்ளையானை - ஐராவதம். தோட்டி - அங்குசம்.

போது சாலப் பொலிந்த தருவெலாம்
ஓது மேன்மை யுறுவர் பழக்கமோ
தாது வென்னுந் தவப்பொடி பூசியே
மீது வண்டெனுங் கண்மணி மேவுமே. (அ)

பன்னு மாரன் பயிற்சி யறுதலால்
மன்னு தம்பெயர்க் காரண மாண்புறத்
துன்னு பற்ப லசோகங்கள் பூத்தன
முன்னு முன்ன முடியிற் குறையெவன் (௯)

தும்பி பாதச் சுவட்டிற் பலாசலர்
பம்ப மாவிற் பசுந்தழை வாயிணர்
நம்பு தேனுக நாடு தருக்களும்
வெம்பு தீயிட்டு வேட்பது போலுமே. (௧௦)

வேறு வேறு விரித்துரை யாடலென்
மாறு தீர்ந்த மரச்செறி வால்வெதுப்
பூறு செங்கதி ருண்ணுழை யாவகை
நாறு பூஞ்சினை துன்றின நைமிசம். (௧௧)

### நைமிசமுனிவர் இயல்பு.

அன்ன கானத் தமர்தரு வாழ்க்கையர்
பன்ன ருந்தவப் பாலெறு ழுற்றவர்
இன்ன ரென்றெவ ரும்புக லாவகை
நன்னர் மேவு மொழுக்க நயந்தவர். (௧௨)

அருளி னுக்கண் முனிவி னழித்தலிப்
பொருளின் மேவிப் பொலிதிரு வாக்கினர்
மருளி னாரனுர் மன்ற வறிதரார்
தெருளி னும்பெருஞ் செல்வந் திளைப்பவர். (௧௩)

---

அ. உறுவர் - முனிவர். தாது - பூந்தாது. கண்மணி - உருத்திராக்ஷம்.

௯. பெயர்க்காரணம் - அசோக மென்னும பெயர்க்காரணம்; என்றது சோகமற்றிருத்தலை. முன்னும் முன்னம் - நினைக்கும் குறிப்பு; என்றது மாரனதுபயிற்சி நீங்கியிருத்தல் வேண்டுமென்பதை.

௧௦. தும்பி - வண்டு. பம்ப - விரிய.

௧௨. எறுழ் - வலி.

௧௩. அனுர் - துன்பம்.

பூதி கண்மணி போற்றி யெழுத்தைந்தும்
ஓதி நிற்கு மொழுக்கச் சிறப்பினர்
ஆதி நாத னடிமலர் தம்முளப்
போதின் மேவப் பொலியுந் திருவினர். (கச)

வந்து மாதர் வலியத் தழுவினும்
நந்து தாயென வெண்ணு நலத்தினர்
முந்து மால்விதித் தோற்ற முடிவுகள்
உந்து மெத்தனை யோகண் டுவந்தவர். (கரு)

## முனிவர்கள்.

### (அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

மகத்துவத் துயர்ந்த சைவச் சவுனகன் மதிவான் மீகி
அகத்தியன் மதங்கன் மேன்மை யங்கிர சுசுதீக் கண்ணன்
மிகத்தெளி பரத்து வாசன் விழைகவு தமன ரீதன்
சகத்திய லுணர்த ராத சுகன்சதா நந்த மேலோன். (கசு)

காசிபன் கருணை சான்மார்க் கண்டேயன் வசிட்டன் யாரும்
பேசிய மவுற்க லன்கண் ணுவன்பெரும் பராச ரனும்
ஆசில்சங் கடன றங்கூ ராபத்தம் பன்வெண் ணீறு
பூசிய கபடன் விச்சு வாமித்தி ரப்பேர் பூண்டோன். (கஎ)

பிருகுநா ரதனெப் பில்லாப் பெருந்துரு வாசன் யாரும்
கருதுசீர்ச் சாது கண்டன் முதலியோர் கழியாத் தத்தம்
பெருகுமா ணக்க ரோடு குழாங்கொடு பிறங்க வைகித்
திருகுதீர் யாக மொன்று செய்தனர் மகிழ்ச்சி பொங்க. (கஅ)

அளிமக மியற்று நின்று ரரனடி காண்டற் கேது
ஒளிர்சிவ தலத்தின் காதை யுவப்புறக் கேட்ட லன்ன
தெளியதன் றியோகத் தாலோ விருந்தவத் தாலோ பண்பிற்
றெளிதர லாநா மென்று சிந்தைசெய் திருக்குங் காலை. (கக)

---

கச. பூதி - திருநீறு.

கரு. மால்விதித் தோற்ற முடிவுகள் - திருமால் பிரமனென்பாருடைய உற்பத்தியும் அழிவும்.

கசு. சுதீக்கண்ணன் - சுதீட்சணன்.

கஅ. திருகு - மயக்கம்.

கக. நாம் தெளிதரலாம்.

## சூதமுனிவர் வருதல்.

இரசதக் குப்பா யங்கொண் டென்னவெண் ணீறு பூசிப்
பரவுகண் மணிகள் பூண்டு பழமறைச் சார மாய
உரவுசா லைந்தெ ழுத்து முச்சரித் தடிய ரோடும்
சுரர்புகழ் பெருமை சான்ற சூதமா முனிவன் வந்தான். (உ0)

## சூதமுனிவர்பால் நைமிசாரணியமுனிவர் கூறுதல்.

சூதமா முனியைக் கண்டு துண்ணென வெழுந்தெல் லோரும்
மேதக வடியிற் றாழ்ந்து விரும்புமா தனத்தி லேற்றி
ஆதர மேன்மேற் பொங்க வருக்கிய மாதி நல்கி
ஓதருந் துதிக ளார்த்தி யுவந்தன ரிருந்து சொல்வார். (உக)

தண்ணிய குணத்துச் சான்றோய் தக்கநின் வரவெங் கட்குப்
புண்ணியம் பயந்தல் லாது போகுமோ புவியின் மேலாய்
நண்ணிய தலத்துக் காதை கேட்டிடு நசைமிக் குள்ளோம்
எண்ணிய படியே நீயிங் கெய்தினை பெரும்பே றன்றோ. (உஉ)

காசியு மதனுக் கொத்த கமழ்புகழ்த் தலமு முன்னம்
தேசிக நவின்றா யன்ன காசியிற் சிறந்து தோன்றும்
மாசிலாத் தலமுங் கேட்கும் வாஞ்சையே முரைக்க வேண்டும்
தேசுமேம் பட்டு முட்டாத் திருவரு ணிறைந்த மேலோய். (உ௩)

சிவபெரு மானுக் கென்றுந் திகழ்விருப் புடைய தாயும்
அவமகல் புத்தி முத்தி யவாவுமு னளிப்ப தாயும்
உவமையி றீர்த்த மூர்த்தி யுறுசிறப் புடைய தாயும்
தவமலிந் துள்ள தெய்வத் தலமரி தாகுங் கண்டாய். (உச)

அத்தகு தலமொன் றெங்கட் காய்ந்துநீ யுரைக்க வேண்டும்
உத்தம முனிவ வென்றா ருறுவரார் சூதன் கேட்டுச்
சித்தமிக் குவகை யுற்றுச் சிறிதுபோ துள்ளத் தெண்ணி
வித்தக முனிவர் தங்கோ ளுணர்ந்துவிம் மிதத்த னாகி. (உரு)

---

உ0. இரசதக் குப்பாயம் - வெள்ளிக் கவசம்.

உஉ. புவியில் நண்ணிய. நசை - விருப்பம்.

உ௩. கமழ்புகழ் - பரந்த புகழையுடைய.

உச. புத்தி - நுகர்ச்சி.

உரு. கோள் - கருத்து.

DR. U. V. SWAMINATHAIYAR LIBRARY, TIRUVANMIYUR, MADRAS-41.

## சூதமுனிவர் கூறுதல்.

நிறைபர சிவன்பொற் பாத நெஞ்சுறத் தியானஞ் செய்தே
அறைகுருக் கேத்தி ரத்துச் சுருக்கிமுன் னறைந்த தாய
மறைவரு மொரு நத லத்தின் மான்மியம் விரித்துக் கூற
முறையுளி யெண்ணங் கொண்டு முனிவிர்காள் கேண்மினென்றான். ()

தெண்டிரை சூழும் வைப்பிற் சிவதல மனேக கோடி
மண்டிய வவற்று ளுளும் வருபுனற் பெருங்கா வேரித்
தண்டருந் தீரத் துள்ள தலம்பல விசேட மாகும்
எண்டரு மவற்று ளொன்றே யெற்றைக்கும் விசேட மென்ப. ()

(வஞ்சிவிருத்தம்)

கண்ணிய வன்னது, தண்ணிய சுப்பிர
மண்ணிய மாநதிப், புண்ணிய தீரம். (உஅ)

உள்ளது புத்தியும், விள்ளரு முத்தியும்
உள்ள வளிப்பது, விள்ளரி தாகும். (உகூ)

விதிமுத லோரும், மதியி னமைத்துத்
துதிசெய மேவும், நதிபுர மாமால். (ஙO)

ஊனமில் சொன்ன, யான நிரோத
மாநக ரென்றும், ஆனதொர் நாமம். (ஙக)

அறமுத லன்கு, திறமுமுள் வாரே
பெறவினி தோங்கும், மறமிலத் தானம். (ஙஉ)

அந்தநற் றனச், சந்தநன் மேன்மை
மந்தண மென்றே, சிந்தையி னோர்மின். (ஙங)

ஒன்ப திரட்டி, என்பவை யுள்ளும்
அன்புறு பத்தின், இன்புறு காந்தம். (ஙச)

மேவிய வுபய, காவிரி மகிமை
மாவியப் பாகும், பாவிய வதனுள். (ஙரு)

---

உஎ. தண்தரும் தீரம் - குளிர்ச்சிதரும் கரை.

உஅ - உகூ. தீரம் உள்ளது எனக.

ஙO. விதி - பிரமதேவர். நதிபுரம் - ஆற்றூர்.

ஙங. மந்தணம் - இரகசியம்.

ஙச. என்பவை - என்னப்படும் புராணங்கள். பத்து - சிவபுராணம் பத்து.

உலப்பறு முத்தித், தலப்பிர கரணம்
புலப்பட வோதும், நலத்தகு மீதே. (௩௬)

மேதக விந்த, மாதல மேன்மை
ஒதுவ லென்று, சூத னுரைப்பான். (௩௭)

ஆகத் திருவிருத்தம் - க௩௯.

# ச. தலவிசேடப் படலம்.

## கதைச் சுருக்கம்.

[உபய காவேரிக்கு இடையே சுப்பிரமணிய நதிக்குத் தென்கரையில் சொன்னயான நிரோதன நகரம் விளங்குகின்றது. அத்தலம் பந்தணை நல்லூர்க்குக் கிழக்கே மூன்று நாழிகைவழித் தூரத்திலும் நமச்சிவாயபுரத்திற்கு அக்கினிதிக்கில் மூன்றுநாழிகைவழித் தூரத்திலும் கருப்பறியலூருக்கு மேற்றிசையில் நான்கு நாழிகைவழித் தூரத்திலும் திருத்துருத்திக்கு வடதிசையில் மேல் ஒன்றரை நாழிகை வழித்தூரத்திலும் அமைந்திருக்கின்றது. அங்கே மந்தார விருட்சத்தினிழலில் சிவபெருமான் அஞ்சனாட்சி யம்மையோடு வீற்றிருக்கின்றார். அவர்களை இந்திரன் முதலியோர் வணங்கிப் பயன்பெற்றனர். அத்தலத்தை வழிபட்டவர்கள் பலவகைப் பயன்களைப் பெறுவார்கள். ஸ்ரீ சொன்னயான நிரோதனப் பெருமான் ஸந்நிதியில் சிவதீர்த்தமென்னும் பெயருடைய தீர்த்தமொன்றுளது. அத்தீர்த்தத்தாலும் பால் முதலியவற்றாலும் சிவபிரானுக்கு அபிஷேகஞ் செய்தவர்கள் நற்பேறு பெறுவார்கள்.

அத்தலத்தின் நாற்புறத்திலும் அரையோசனைக்குள் முப்பத்திரண்டு இலிங்கங்களுள்ளன. திருமால் ஆலயமும், சாத்தன் முதலியவர்களுக்குரிய ஆலயங்களும் இருக்கின்றன. அத்தலத்தின் பெருமை முழுவதும் அம்பிகைக்குச் சிவபெருமான் முன்பு திருவாய்மலர்ந்தருளினார்.]

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

**பா**ரவரை யகழ்ந்துருட்டி மதவேழ மெடுத்தெறிந்து பரவை கீண்டு
நாரமுழக் கொடுபாய்ந்து நகுமுபய காவேரி நதிக்கு நாப்பண்

ச. தலவிசேடப் படலம்.

க. கீண்டு - கிழித்து. நாரம் - நீர். உபயகாவேரி - தென்காவிரி, வடகாவிரி (கொள்ளிடம்.) ஆரம் - முத்துக்களை. சுப்பிரமண்ணிய நதி -

ஆரமலை யெடுத்தெறியுஞ் சுப்பிரமண் ணியநதித்தெற் காய கோட்டிற்
சாரமென வமர்சொன்ன யானமிரோ தனநகரந் தயங்கா நிற்கும். (க)

கண்ணுதல்வாழ் கந்துகமா நகர்க்கீழ்பா லொருமூன்று கடிகை யாகும்
எண்ணுதல்செய் தாரகமா நகரமுற்றிக் கினிற்கடிகை யிசைத்த தாக
விண்ணுதலுங் கருப்பறிய வூர்க்குடபாங் கரிற்கடிகை மேலொன் றுக
ஒண்ணுதலார்பயிறுருத்திக்குத்தரமேலொன்றரையி லுளதத் தானம்.

சுயம்புவெனு மத்தலத்து நம்பெருமா னதிவிருப்பஞ் சுரத்த லாலே, இயம்புமண மலர்செறிமந் தாரநிழ லஞ்சனக்க ணெழிற்று யோடும், வயம்புனையு மடியார்க்கு வேட்டவரம் வேட்டபடி வழங்கி வைகும், நயம்புனையு மத்தலமே யெத்தலத்துஞ் சிறந்ததுண்மை நாடுங் காலே. (௩)

பந்தமொழி வதுகருதி யிந்திரன்வா னவரயன்மால் பருதி யாலோன்
சந்தமிகு கின்னரர்கிம் புருடர்வித்தி யாதரர்சாத் தியர்வான் சித்தர்
அந்தமிலாத் தவமுனிவ ரேனோரு நாளுளு மருச்சித் தேத்த
முந்தவருள் கொடுப்பதுபல் சம்பத்து நிரப்புவது முன்னு வோர்க்கும்.

நதிபுரமென் றுரைக்குமந்தத் தலவாசஞ் செயலெவர்க்கு நன் றுல் லாதேற், கதிதருமத் தலத்திருநா ளொருநாளா யினும்வசித்தல் கடன்முற் றுதேல், மதிமலியங் கிருகடிகை யொருகடிகை யேனுமன்பின் வசித்த லன்ன, ததிகமெனி லனையநகர் வழியேனுஞ் செலல் வேண்டு மருள்சார் வோரே. (௫)

பொருள்வேண்டி மனைவேண்டிப் புத்திரரா தியர்வேண்டிப் போகம் வேண்டி, இருள்வேண்டி னுமுறுச் சுவர்க்கமுத லாயபல வெய்த வேண்டித், தெருள்வேண்டிச் சாலோக சாமீப சாரூபஞ் சிவண

---

மண்ணியாறு; இது முருகக்கடவுளால் வருவிக்கப்பெற்றமையின் இப் பெயர்பெற்று மண்ணியென மருவிற்று ; இவ்வரலாறு இப்புராணத் துள்ள ஆற்றூர்ப்படலத்தால் விளங்கும். கோட்டில் - கரையில்.

உ. கந்துக மாநகர் - பந்தணைநல்லூர். மூன்று கடிகை - மூன்று நாழிகை வழித்தூரம். தாரகமாநகர் - நமச்சிவாயபுரம். விண் நுதலும். குடபாங்கரில் - மேற்குத்திக்கில். துருத்தி - குற்றாலம்.

௩. அதிவிருப்பம்-மிக்க விழைவு. வயம்-வெற்றி. வைகும் : முற்று.

௪. ஆலோன் - சந்திரன்.

௫. ஒல்லாதேல் - இயலாதாயின். கடிகை - நாழிகை.

௬. மனை - மனைவி ; வீடுமாம்.

வேண்டி, அருளவேண்டி யுழலுநர்நஞ் சிவபெருமா னுற்றாரை யறி யார் போலும். (௬)

அத்தலமான் மியங்களோ ரதுவிருப்பிற் புகல்வாரை யவாவிப் போற்றார், அத்தலங்கண் டின்புறா ரத்தலத்து விழாச்சேவை யடைந்து செய்யார், அத்தலத்துப் பணிபுரியா ரத்தலமான் மியம்பிறரு மறியச் சாற்றார், அத்தலஞ்சூ ழாரெடுத்த பிறப்பாலெப் பயனடைவா ரந்தோ வந்தோ. (௭)

பிறந்தவருக் காரூரே கண்டவர்க்குச் சிதம்பரமே பிறவி தீர, இறந்தவருக் கவிமுத்த மெனுந்தலமே நினைத்தவருக் கிருவ ரென்னச், சிறந்தவருக் கரியவரு ணசலமே பேரன்பு செய்து நாளும், உறந்தவருக் கொருதிருக்கா ளத்தியே நதிபுரமென் றுரைக்கு மூதூர். (௮)

திகழ்சொன்ன யானநிரோ தனப்பெருமான் றிருமுன்னர்த் தீர்த்த மொன்று, புகழ்மன்னு சிவதீர்த்த மெனும்பெயரிற் பொலியுமதிற் பொருந்த மூழ்கி, இகமென்னு மதுதீர வனையபிரான் கபிடேக மியையச் செய்வோர், அகமென்னு மளற்றழுந்தார் பாதகரும் புண்ணியரா யடைவர் முத்தி. (௯)

மந்தார வனேசனுக்குத் தயிலம்பா றயிர்முதலா வயங்கி யாவும், நந்தாத பத்தியினு னயந்தாட்டி நிவேதனமு நலக்க வூட்டி, முந்தார்வத் தொடுமுகமன் பலசெய்வோ ராயுள்செல்வ முதன்மற் றியாவும், சிந்தாத விதம்புணர்ந்து முடிவிலவன் றிருவடியே சேர்ந்து வாழ்வார். (௧௦)

நதிபுரநா யகன்மகிழ வியன்றமட்டு மாலயத்தை நகப்பு துக்கி, விதிகெழுபல் லுபசார நடந்துவர நிலமாதி விருப்பி னுக்கி, மதியமைய வஞ்சனக்க ணம்மையொடுஞ் சூழ்ந்துதொழு மாண்பி னோராய்த், துதிபுரிந்து வருமவர்கள் பெறும்பேற்றை யெவரெடுத்துச் சொலவல் லாரே. (௧௧)

---

௭. சூழார் - வலம்வராதவர்கள்.

௮. அவிமுத்தம் - காசி. இருவர் - திருமாலும் பிரமதேவரும். உறந்தவர் - மிக்கவர்.

௯. அளறு - சேறு; என்றது இங்கே நரகத்தை.

பல்வகைய பாத்திரம்பல் வகையமணிப் பொற்பூண்பல் வகைய தீபம், பல்வகைய நிவேதனம்பல் வகையநல விருதுகள்பல் வகைய வூர்தி, பல்வகைய வபிடேகம் பல்வகைய மற்றுமுள பலவு மேன்ற, பல்வகைய வுபாயத்தும் புரிவிப்பார் பெறும்பேறு பகரற் பாற்றோ.( )

ஒருகாலத் தலத்தைவலஞ் சூழ்ந்தாரை யும்பரெலா மொருங்கு சூழ்வார், ஒருகாலத் தலத்தடைந்து தாழ்ந்தோரை மாலொடய னுவந்து தாழ்வார், ஒருகாலத் தலத்தைமனத் துன்னினரை யெஞ்ஞான்று முள்வார் யாரும், ஒருகாலத் தலப்புகழ்கேட் டுவப்பார்தம் பெரும்புகழ்கேட் டுவவார் யாரே. (௧௩)

அத்தலநாற் புறத்தினரை யோசனைக்கு ளிலிங்கமெண் ணான் கமைந்து மேவும், முத்தநகைத் திருமறுமார் புடையமா லாலயமு முன்பான் மேவும், வித்தகவண் சாத்தன்முதற் பற்பலவா னவருமங்கு மேவி வாழ்வார், உத்தமமா மறையவர்கள் பற்பலர்வெற் பிறைவனென வுறுவா ரங்கண். (௧௪)

நந்தியுஞ்சாத் தனுங்குமரக் கடவுளுநந்துர்க் கையுமாலு நளினத் தோனும், இந்திரனும் வானோரு மேனோரு மத்தலத்தை யெய்திப் போற்றிப், புந்திநினைந் தனவெல்லா மிகப்பெற்றார் மறையவர்பெண் பொருந்தக் கொண்டே, அந்திநிறத் தெம்பெருமா னன்னவர்க்கு வேண்டும்வர மருளி மேவும். (௧௫)

அன்னதலப் பெருமைமுற்று மஞ்சனக்க ணுமையாளுக் காதி நாளிற், சொன்னவிமா னந்தகைந்தா ரெடுத்துரைத்தா ரெம்மனோர் சொல்லப் போமோ, பன்னரிய மாதவத்தீ ருணர்ந்தவரை யுரைப்பனன்பு பரவக் கேண்மின், இன்னதலப் புகழுணர்ந்தோ ரெய்துவர்யா வையுமென்ன வியம்புஞ் சூதன். (௧௬)

ஆகத் திருவிருத்தம் - கருரு.

---

௧௨. ஏன்ற - இயன்ற.

௧௩. ஒருகால் அத்தலத்தை.

௧௪. எண்ணான்கு இலிங்கம் - முப்பத்திரண்டு இலிங்கங்கள். திருமறு - ஸ்ரீவத்ஸம். சாத்தன் - ஐயனார். வெற்பிறைவனென - மலையரசனைப்போல.

௧௬. உணர்ந்தவரை - தெரிந்தவரையில்.

# ரு. தலவிசேடம் தேவிக்குணர்த்திய படலம்.

கதைச் சுருக்கம்.

[கைலாயத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு வீற்றிருக்கும் பொழுது ஒருசமயம் தேவியார் சிவபெருமானை நோக்கி, "தேவரீர் இக் கைலாயத்தினும் சிறந்ததாக விரும்பி ஆற்றூரில் வீற்றிருப்பதற்குக் காரணம் யாது?" என்று வினவினர். அதற்குச் சிவபெருமான் விடையருளலானார்:

'முன்காலத்தில் நாவலந்தீவிலுள்ளவர்கள் பலபாவங்களைப் புரிந்தமையால் வருந்திய பூமிதேவி நம்மிடம்வந்து குறையிரந்தனளாக, அவளுடைய வேண்டுகோட்கிணங்கி நாவலந்தீவிற் பல மூர்த்தி தலம் தீர்த்தங்களாக விளங்கி, அவற்றை வழிபடுபவர்களுக்கு இன்பம் வழங்கி வருகின்றோம். அங்ஙனம் நாம் அமர்ந்த தலங்கள் செங்குன்றூர் முதலியன. அத்தகைய தலங்கள் பலவற்றினும் ஏற்றமுடையது ஆற்றூர். அங்கே நாம் என்றும் பிரியாமல் வாழ்வோம். இந்தக் கைலாயத்திலுள்ள கங்கையே அங்கே நமது ஸந்நிதியில் ஒரு புஷ்கரிணி வடிவமாக அமைந்திருத்தலால் அதனைக் கைலாய கங்கையென்னும் திருநாமத்தால் வழங்குவர்; சிவதீர்த்தமென்றும் கூறப்படும். தென்பாலில் பழவாறு என்ற ஒரு நதியும் வடபாலில் மண்ணியாறும் ஓடுகின்றன. இம்மூன்றும் நம்முடைய மூன்று கண்களைப் போல்வன. ஆதலால் அத்தலமும் அங்குள்ள மந்தார நீழலும் எல்லாவற்றிலும் சிறந்தனவாகும்.']

திருக்கைலாய வருணனை.

(கலித்துறை)

வெள்ளி வெண்கதிர் நீறுமெய் புனைந்துகண் ணருவி
தள்ளி யாங்கிழி யருவியாச் சம்புவை யகங்கொண்

---

ரு. தலவிசேடம் தேவிக்குணர்த்திய படலம்.

க. யோகிக்கும் கைலைக்கும் சிலேடை. வெள்ளி வெண்கதிர் - மிக வெண்மையான கதிர். சம்புவை - பரமசிவனை. தள்ளி - பொருந்தி.

டுள்ளி யாவரு மேத்தவூ ழியுஞ்சலி யாது
நள்ளி யோகியி னமர்தரு நற்பெருங் கயிலை. (க)

கோடு தாங்குபு துதிக்கையும் வாய்ந்துமேற் குலவ
நீடு மாமுகிற் படாம்புனைந் தருவிநீண் மதமா
ஓடு மாறுகொண் டொளிர்பிறைத் தோட்டியை வணக்கி
நாடு நாகமே யாயது நற்பெருங் கயிலை. (உ)

அரிய வெள்ளிய நீறுமே னியிற்புனைந் தவிரும்
பெரிய நாயக னேயெனப் பிறங்கொரு தானும்
கரிய மாலிபத் தோலுறப் போர்த்துமேற் கதிர்த்துத்
தெரிய வான்பிறை முடித்தது திருப்பெருங் கயிலை. (௩)

வட்ட மாநில மெனுந்தடத் திடைமறை வண்டு
கிட்ட நஞ்சிவ பரனெனுஞ் செய்யதேன் கெழுமச்
சட்ட வாய்புகழ்த் தவாமணங் கமழ்தர மலரப்
பட்ட வெள்ளிய தாமரை படர்பெருங் கயிலை. (௪)

தழையு மாமுகில் சூன்முதிர்ந் திடந்தொறுந் தங்கல்
விழையு நாரணர் பற்பலர் பெருவரம் வேட்டுக்
குழையு நெஞ்சொடு கிடப்பது போன்மெனக் குலவும்
பிழையுந் தோற்றமு மெமக்குநீத் தருள்பெருங் கயிலை. (ரு)

அன்ன மால்வரை யகத்திளம் பொழில்வளைந் தமைந்த
மின்ன வாமணி யுபரிகை யரியணை மீது

---

உ. யானைக்கும் கைலைக்கும் சிலேடை. கோடு - தந்தம், சிகரம். துதிக்கை - தும்பிக்கை, துதித்தல். முகிற்படாம் - முகில்போன்ற முகபடாத்தை, முகிலாகிய ஆடையை. பிறைத்தோட்டி - பிறைபோன்ற தோட்டி; பிறையாகிய தோட்டி; தோட்டி - அங்குசம். நாகம் - யானை.

௩. சிவபெருமானுக்கும் கைலைக்கும் சிலேடை. மால் இபத் தோல் - பெருமை பொருந்திய யானைத்தோல், மேகமாகிய யானைத் தோல்; மால் - பெருமை, மேகம்; இபம் - யானை.

௪. தடத்திடை - தடாகத்தின் நடுவே. சட்டம் - செப்பம். கைலை வெண்டாமரை மலர்போல்வது.

ரு. தோற்றம் - பிறவி.

பொன்ன வாஞ்சுணங் கிளமுலைப் பூவையோ டமர்ந்தான்
பன்ன வாம்புகழ் வெண்பிறைச் செஞ்சடைப் பரமன். (௬)

மோன யோகியர் தமக்கருண் முழுமுதல் வானப்
பான லொண்கணூர் பற்பலர் புரிநடம் பார்த்தும்
ஈன மேவுறு திரந்தவர்க் கின்னரு ளீத்தும்
கான வின்னிசை கேட்டுநன் கமருமக் காலே. (எ)

எண்ணி லண்டமு மவற்றுள வுயிர்களு மீன்றும்
கிண்ண வெம்முலைக் கேழ்கிளர் கருநறுங் கூந்தற்
செண்ண வஞ்சிலம் பொலித்திடு சிற்றடி மடந்தை
அண்ணன் முன்பணிந் தஞ்சலி யொடுந்துதி யறைவாள். (அ)

அம்பிகை செய்யும் துதியும் வினவும்.

போற்றி யெண்ணெய்போ லெங்குமாய் நிறைந்தமெய்ப் புராண
போற்றி யாவையும் படைத்தளித் தழிக்குமோர் புநித
போற்றி யாவினுங் கலந்துமோர் கலப்பிலாப் புலவ
போற்றி யெண்குணப் பூரண புண்ணியப் பொருளே. (௯)

சரண மேருவிற் கோட்டிய தடம்புயச் சாமி
சரணம் யான்றமு வக்குழைந் தருளிய சம்பு
சரண மூவகை யுயிர்க்குமின் பந்தருந் தலைவா
சரண மன்பர்தங் குறையறத் தலையளிப் பவனே. (௧0)

என்று தோத்திரம் புரிந்துநின் றிருமுன மெளியேன்
ஒன்று மாறொன்று வினவுவல் யாதெனி னுரைப்பல்
என்று மிக்கயி லாயத்து முவந்துவீற் றிருப்பாய்
ஒன்று மாநதி புரத்தெவ னுரைத்தியென் றிரந்தாள். (௧௧)

அதுவி னவிய கருங்குழல் வெண்ணகை யணங்கைப்
புதுவ தாகிய வெண்பிறை செஞ்சடைப் புனைந்த

---

அ. செண்ணம் - வடிவு.

௯. போற்றி - பாதுகாத்தருள்க. எண்ணெய் - எள்ளும் அதிலுள்ள நெய்யும்.

௧0. மூவகை உயிர் - விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்.

௧௧. நின் திருமுனம். வினவுவல் - கேட்பேன். கயிலாயத்தும் - கயிலாயத்தைக் காட்டிலும். நதிபுரத்திலிருப்பாயென இயைக்க.

௧௨. இறுப்பல் - விடையளிப்பேன்.

மதுவி ராவிய கொன்றையோ னேக்கியுண் மகிழ்ந்தே
எதுவி னுவினு மிறப்பலெனன் றிருத்தியீ தியம்பும். (௧௨)

## இறைவன் அருளிச்செய்யும் விடை.

ஆதி நாளையி னுவலந் தீவுளோ ரளவாக்
கோதின் மூழ்குபு பாவமே புரிதலிற் கொதித்து
மேதி னிக்கொடி நமையடைந் திரந்தனள் வேண்டப்
போதி நீயது மாற்றுது மென்றருள் புரிந்தோம். (௧௩)

தருண மங்கைநல் லாய்நில மகண்மகிழ் தழைப்பக்
கருணை யாற்பல மூர்த்திமுன் மூன்றுமாக் கதித்துப்
பொருண யந்தவர்க் கின்பமே வழங்குதும் பொல்லா
மருண்ம லந்தபு மத்தலங் களுட்சில வகுப்பாம். (௧௪)

## * ஸ்தலங்கள்.

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.)

செங்குன்றூர் கொடிமாடச் செங்குன்றூர் திருவான்மி யூர்நல் வாய்மூர், தங்குஞ்சீர் வெற்றியூ ரொற்றியூர் தேறனூர் தருகன் றூப்பூர், எங்குந்தாழ் பேறனூர் மயிலாப்பூ ராப்பனூ ரிலகு நீடூர், சங்கநீர் நிறையனூர் பிறையனூர் மறையனூர் தகடூர் கச்சூர். (௧௫)

ஆரூர்தண் கடங்களூர் விடங்களூர் நலமலிபே ராவூர் தேவூர்
பேரூர்மெய் வேலனூர் நாலனூர் மூலனூர் பெருவே ளூரம்
கூரூர்வண் மூவலூர் நாவலூ ராமாத்தூர் கோவ லூர்பொற்
றேரூர்மா மதிற்கானப் பேரூர்நற் பூவனூர் தேவ னூரே. (௧௬)

புலியூர்தண் கருகாவூர் குருகாவூ ரெருக்கத்தம் புலியூ ரோமாம்
புலியூர்கோட் டூர்மாட்டூர் காட்டூர்கோ வந்தபுத்தூர் புன்கூர் வானம்

---

௧௩. நாவலந்தீவுளோர் - சம்புத்தீவிலுள்ளோர். அளவா - அளவிடப்படாத. மேதினிக்கொடி - பூமிதேவி.

௧௪. மூர்த்தி முன்மூன்று - மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூன்று. மலம் தபும் - மலம் கெடுதற்குக்காரணமாகிய.

௧௫. சங்கநீர் - சங்குகளையுடைய நீர்வளம்பொருந்திய.

௧௭. வான் அம்புலி ஊர் மாளிகை - வானத்திலுள்ள சந்திரன் தவழப்பெற்ற மாடம். பெரு முதலிற் புல்லி மேவு புலியூர் - பெரும்புலியூர்.

* இங்கே கூறப்படுவன தேவாரம் பெற்றனவும் வைப்புமாகிய ஸ்தலங்கள்.

புலியூர்மா ளிகைத்திருப்பா திரிப்புலியூர் பெருமுதலிற் புல்லி மேவு
புலியூர்மெய்க் கூழையூர் தாழையூர் வாளொளிபுற் றூர்நற் பொன்னூர்.

நல்லூர்பந் தணைநல்லூர் கலையநல்லூ ரறையணிநல் லூர்நற் பொய்கை
நல்லூர்நம் மவளிவணல் லூர்நியம நல்லூர்விண் ணூடு மேம [ணெய்
நல்லூரொண் பறியலூர் கருப்பறிய லூர்துறையூர் நறையூர் வெண்
நல்லூர்கா ணாட்டுமுள்ளூர் வேங்கூர்தேங் கூர்திகழு நாங்கூர் தென்னூர்.

குன்றியூர் பந்தையூர் முந்தையூ ரிடைமருதூர் கொடுங்கோ ளூர்சீர்
நின்றியூர் பயற்றூர்வண் கலிக்காமூர் நாரையூர் நிகழ்மீ யச்சூர்
நன்றிசா லெறும்பியூர் கஞ்சனூர் கண்டியூர் நகுவி ளத்தூர்
பன்றிநா டருமெமது திங்களூர் சேய்ஞலூர் பாசூர் தோழூர். (௧௯)

தேசனூ ரூற்றத்தூர் கோட்டையூர் கருவூர்மெய் திகழு நாலூர்
ஏசிலா வாதவூர் கூந்தலூர் தக்களூ ரெழுமூ ராக்கூர்
மாசிலா வழுந்தூர்தென் கடம்பூர்கீழ் வேளூர்நல் வடுகூர் புத்தூர்
பேசுமா புகழ்க்கடவூ ரிலம்பயங்கோட் டூராவூர் பிடவூர் மற்றும். (௨௦)

மன்னுகருந் திட்டைகுடி தென்பரம்பைக் குடிநலமா குடிமால் போற்றிப், பன்னுமங்க லக்குடிவிற் குடிசெங்காட் டங்குடிவான் பரவி யேத்த, மின்னுபுகழ்த் தனிச்சாத்தங் குடிமாணி குடிவிடை வாய்க் குடியெல் லோரும், உன்னுகுருந் தங்குடிவேள் விக்குடிகற் குடி முதலா வுரைக்கு மற்றும். (௨௧)

ஆயிலருள் வடமுல்லை வாயிறிருப் புனவாயி லழகா ரண்ணல்
வாயின்முல்லை வாயினெடு வாயினெய்தல் வாயில்குட வாயில்போற்றித்
தோயிலது போதருளு நெல்வாயில் குணவாயில் சுரர்கொண் டாட
வேயிலுதித் தேமகிழுந் திருவால வாயிலருள் விளக்கு மற்றும். (௨௨)

பாவுறுசக் கரப்பள்ளி யகத்தியான் பள்ளியிடைப் பள்ளி நாளும்
கரவுதவிர் தருமேலைத் திருக்காட்டுப் பள்ளிகடற் காட்டுப் பள்ளி
வரமுதவு நனிபள்ளி தவப்பள்ளி சிவப்பள்ளி மயேந்த்ரப் பள்ளி
விரவுகொல்லி யறப்பள்ளி சிராப்பள்ளி பரப்பள்ளி மேவு மற்றும். ()

---

௧௯. பன்றி - திருமாலாகிய பன்றி.

௨௨. ஆயில் - தாயைப்போல. வேயில் - மூங்கிலில். உதித்தேம் - உதித்தேமாகிய யாம். கடற்காட்டுப்பள்ளி - கீழைத்திருக்காட்டுப்பள்ளி.

பூம்புகலூர் வர்த்தமா னீச்சரநா கீச்சரமால் போற்றி நாளும்
ஓம்புதல்செய் சேதுவிரா மீச்சரஞ்சோ மீச்சரமோங் காட கே
தேம்புனல்சூழ் பட்டீச மிராப்பட்டீச் சரங்கேதீச் சரம்வே தீசம்
நாம்புகலு மிராமநதீச் சரம்வீரேச் சரமுலகி னகுலேத வீசம். (உச)

முண்டீசம் பட்டினத்துப் பல்லவனீச் சரம்யாரு மொழிந்து போற்றும், கொண்டீச மகத்தீச மக்கீச மத்தீசங் குளிர்காச் சூழ்ந்த, திண்டீசந் திருநந்தி கேச்சரம்பா தாளேசந் திருவ மார்ம, யிண்டீசம் லகுளீச மாகாளே சங்கருணை யிலங்கு மற்றும். (உரு)

கலையாய்வார் சாய்க்காடு பனங்காடு கச்சிநெறிக் காரைக் காடு
தலையாலங் காடுதிரு வாலங்கா டமரர்தொழு தலைச்சங் காடு
குலையாத மறைக்காடு வெண்காடு வேற்காடு கொள்ளிக் காடு
நிலையாக யாமருவுங் கோட்டுக்கா டிவைமுதலா நிகழ்த்து மற்றும். ()

பேணுபெருந் துறைகடம்பந் துறைசோற்றுத் துறைநாளும் பேரா வின்பம், பூணுபெருந் துறைபராய்த் துறைபாலைத் துறையமரர் பொலியும் வைப்பும், நாணுமயி லாடுதுறை யன்பிலா லந்துறையெந் நாளு நீதி, கோணுதலி லாத்திருவா வடுதுறைநற் றவத்துறைமுற் கூறு மற்றும். (உஎ)

பரங்குன்றங் கழுக்குன்ற முதுகுன்ற நெற்குன்றம் பரவு வோர்க்கு, வரங்குன்று தருள்புரியுங் கொடுங்குன்ற முதலாக வகுக்கு மற்றும், திரங்கொளண்ணா மலையீங்கோய் மலைதிருக்கா ளத்திமலை தேவர் போற்றி, இரங்குறுமா ணிக்கமலை மயேந்திரமா மலைமுதலா விசைக்கு மற்றும். (உஅ)

கரபுரநற் சிவபுரம்பாம் புரம்பொலியும் விராடபுரங் கடல்சூழ் தெய்வப், பிரமபுரந் தருமபுரம் வலம்புரஞ்சோ புரமுதலாப் பேசு மற்றும், வரமலியுங் கஞ்சாறு தெள்ளாறு நள்ளாறு வளர்கோட் டாறு, பரவுபுக ழையாறு நாலாறு முதலாகப் பகரு மற்றும். (உகூ)

கோலக்கா வானைக்கா குரக்குக்கா நெல்லிக்கா கோட்டுக் காநீர்
ஞாலத்தார் புகழ்க்கோடி காவைகா முதலாக நவிலு மற்றும்

---

உசு. கலை ஆய்வார் - கலைகளை ஆராய்பவர் நிரம்பிய.

உஎ. அமரர் பொலியும் வைப்பும் - தேவலோகமும்.

சிலத்தார் நிறைமண்ணிப் படிக்கரைகா ரிக்கரைவக் கரைமுன் சேர்த்த
மூலத்தா மிடைத்தான நெய்த்தான முசாத்தான முதலா மற்றும்.()

(க) தலம்.

(ஷை வேறு)

இன்னபல் றலங்க ளுக்கு மேற்றமா மாற்றா ரந்த
நன்னக ரிடத்து நாளு நாம்பிரி யாது வாழ்வேம்
கன்னலும் பாகுந் தேனுங் கனியுங்கற் கண்டும் பாலும்
இன்னமிழ் தமுமுட் கைப்பத் தமிழெனு வினிக்குஞ் சொல்லாய்.

(உ) மூர்த்தி.

ஒருவரு மனைய தானத் தோங்குமந் தார நீழற்
பொருவருஞ் சுயம்பு லிங்க வடிவமாய்ப் பொலியு நம்மைப்
பருவருங் கோடி சன்மப் பாவர்கா ணினுமப் பாவம்
வெருவரு மழலிற் றூல பாரம்போல் விளியு மன்றே. (௩உ)

இன்னுநந் தரிச னத்தா லெய்துவர் ஞானு னந்தம்
மின்னுநம் பூசை யாதி வயக்கியுள் ளுருகிப் போற்றிற்
கொன்னுமற் றவர்தம் பேறு குறித்துரை யாடப் போமோ
பொன்னுமஞ் சலிக்குந் தேமற் புணர்முலைப் பொற்கொம் பன்னாய். ()

(௩) தீர்த்தங்கள்.

கருதுமிக் கயிலை மேய கங்கையே நமக்கு முன்னர்
மருவுபுட் கரிணி யென்னும் வடிவமா வமர்த லாலே
இருவினை தொலைப்போர் யாருங் கயிலாய கங்கை யென்பர்
ஒருசிவ தீர்த்த மென்று முரைப்பர்மற் றதற்கு நாமம். (௩௪)

நீடிய வதிற்ப டிந்தோர் நிகழுமோ ரறுபத் தாறு
கோடிதீர்த் தமும்ப டிந்த பலனெலாங் கொண்டு வாழ்வர்
பாடிய நமக்குத் தென்பாற் பழநதி யொன்றி யங்கும்
சூடிய மலர்மென் கூந்தற் றுடியிடைக் கொடிம டந்தாய். (௩ரு)

---

௩உ. ஒருவரும் - நீங்குதலில்லாத. தூலபாரம் - பஞ்சுப்பொதி.

௩௩. கொன்னும் - பெருமையைச் செய்கின்ற.

௩ரு. பழநதி - பழவாறு.

புராதன நதியு தக்கு முகங்கொடு பொருந்தி மூன்று
விராவிய கடிகை யாற்று வரைவிரைந் தோடி மீண்டு
பராவுறக் குணக்கு நோக்கிப் பார்முழு தகழ்ந்து செல்லும்
குராமலர் மலிந்த வைம்பாற் கோற்றொடிக் கொம்ப ரன்னாய். (௩௬)

அத்தகு நதியு நம்மு னவிர்சிவ தடமு மூழ்கி
வித்தக நம்மைப் போற்றின் மேதகு கல்வி செல்வம்
ஒத்தபே ராயு ளாதி யொருங்கடைந் துய்வா ருண்மை
முத்தவெண் ணகைக்க ருங்கார் மொய்குழற் கொம்ப ரன்னாய். (௩௭)

பொருவற வடபா லோடும் புண்ணிய மண்ணி யாறும்
ஒருவறத் தென்பா லோடு மொருபழ வாறு நம்முன்
வெருவறக் குணபான் மேவி மிளிர்சிவ தடமும் யாரும்
கருவறப் படிவார் முக்க ணமக்கவை கனித்தீஞ் சொல்லாய். (௩௮)

ஆதலா லனைய தான மனைத்தினுஞ் சிறந்த தானம்
ஓதுமந் தார நீழ லெவற்றினு முவப்பா நீழல்
மேதகு மத்தா னத்தே விசேடமா விருப்போ மென்று
மாதர்மா தேவி கேட்ப வகுத்துரைத் தனனெங் கோமான். (௩௯)

மாதவத் துயர்ந்தீ ரந்த மாதலப் பெருமை ஞான
போதக னுரை முக்கட் புனிதனை யுரைப்ப தன்றி
யாதுமுன் புகன்று மந்த விருந்தலத் தொருமண் டூகம்
காதல்கூர் முத்தி பெற்ற காதையு முரைப்பாங் கேண்மின். (௪0)

ஆகத் திருவிருத்தம்—கசரு.

---

௩௬. புராதன நதி - பழவாறு. உதக்கு - வடக்கு. ஐம்பால் கூந்தல்.

௩௮. மூன்று தீர்த்தமும் முக்கண்களாகும்

௪0. மண்டூகம் - தவளை.

# ௬. மண்டூகம் முத்தியடைந்த படலம்.

## கதைச் சுருக்கம்.

[சிவதீர்த்தத்தில் ஒரு தவளை வாழ்ந்து வந்தது. ஒரு மாசி மாதத்தில் மகா சிவராத்திரியன்று பெருமழை பெய்ததனால் அத்தவளை அஞ்சி அத்தீர்த்தத்தின் கீழ்கரையிலிருந்த ஒரு நாவன்மரத்தின் வேரை அடைந்தது. அங்கே பசியால் வருந்தியிருந்த பாம்பொன்று அதனை விழுங்கி விட்டது. அத்தவளை நெடுநாட் சிவதீர்த்தத்தில் வாசஞ்செய்த தன் பயனாக, அதன் உயிர்நீங்குந் தருணத்தில் அஞ்சனாட்சியம்மை எழுந்தருளிவந்து பஞ்சாட்சரமந்திரத்தை உபதேசிக்க அஃது உடனே சிவ சாரூபம் பெற்று அந்தப் பாம்பையே ஆபரணமாகப் பூண்டது. பிறகு அத்தீர்த்தத்தில் மூழ்கிப் பரமசிவனையும் அம்பிகையையும் வணங்கி, வந்த விமானமொன்றிலேறிச் சிவலோகம் சென்று சிவகணத்தைச் சேர்ந்து விளங்கியது.]

## ஒரு மண்டூகத்தின் இயல்பு.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

தாமரை கழுநீர் மல்கிச் சலஞ்சல மாதி செற்றிக்
காமரு முத்த மோர்நாற் கரையுற வலையால் வீசிக்
கோமள வனப்பு வாய்ந்து குளிர்ந்தமை சிவதீர்த் தத்தில்
ஆருயிர் பல்ல வாழு மவற்றுண்மண் டூக மொன்று. (௧)

விரிபுகழ் மகவா னென்ன வெள்ளைவா ரணமேற் கொள்ளும்
பரிதரு பிரம னென்னப் பங்கய மலர்மேல் வைகும்

---

௬. மண்டூகம் முத்தியடைந்த படலம்.

௧. சலஞ்சலம் - ஒருவகைச் சங்கு. செற்றி - நெருங்கி. அலையால் - அலைகளினால். மண்டூகம் - தவளை.

௨. மகவான் - இந்திரன். வெள்ளை வாரணம் - வெள்ளையானை, வெள்ளைச்சங்கு. அரி - திருமால், தவளை. அறல் அகக்கிடக்கை -

அரியெனும் பெயருக் கேற்ப வறலகக் கிடக்கை மேவும்
உரியமோட் டாமை மீன வுருவவா யுகந்து வைகும். (உ)

இடையற முதனு மீறு மியைந்தொரு பொருள்கொள் பாக்கு
நடைகெழு நூற்பா வென்ன நலங்கெழு பாய்த்துச் செய்யும்
மிடைபுன லுண்ண வந்த வேழத்தி னீழல் வேழம்
உடைதரத் தாக்கு மஃதின் பகைப்பெய ருறுதற் கேற்ப. (ங)

நெருங்குமுட் பொருள்க ளெல்லா நீரினுண் மூழ்கி யோர்ந்தாங்
கொருங்குமண் டுக மென்ன வுறுபெயர்ப் பொருள்வி ளக்கும்
அருங்குரைத் தனைய தென்றியா மறைவதெ னரமு ழக்கம்
மருங்குபல் லுயிருங் கேட்ப வியற்கையே வயக்கு மென்னின். (ச)

## மழைபெய்தல்.

இத்தகு தவளை யிவ்வா றியங்கியங் கமரு மேல்லை
உத்தம கும்ப மாதத் துறுசிவ நிசித்தி னத்து
வித்தக முகில்க ளெல்லாம் வேலைவாய் மடுத்து விண்ணிற்
கொத்தெனத் திரண்டு மாருக் குளிர்மழை பொழிந்த வன்றே. (ரு)

---

நீரின்கண்ணே கிடத்தல்; கருமணலின்கண்ணே கிடத்தல். உரு அவாய் - உருவத்தை விரும்பி; உருவத்தையுடைய வாயில்.

ங. பொருள் கொள்பாக்கு - பொருள் கொள்ளும்பொருட்டு. நூற்பா - சூத்திரம்; என்றது தவளைப்பாய்த்தென்னும் சூத்திர நிலையை. பாய்த்து - பாய்தல். மிடைபுனல்-நெருங்கிய நீரை. வேழத்தின் நீழல் - யானையின் நிழலை. வேழம் உடைதர - யானையின் மனம் மெலிய. அஃதின் பகைப்பெயர் - யானையின் பகையாகிய சிங்கத்தின் பெயர்; அரியென்பது. ஏற்பத் தாக்கும். நீதிநெறி. 54.

ச. மண்டுகமென்பதற்குக் குளமுதலியவற்றிற் பிரகாசிப்பதென்பது பொருள். அனையது அருங்குரைத்து. தவளையின் முழக்கம் அரமுழக்கம்போலுமென்பர்: "குவளைப் புனலிற் றவளை யரற்ற, ஈசன் றன்னை யேத்தின வென்று, காசும் பொன்னுங் கலந்து தூவியும்" (பதினோராந். திருவிடைமருதூர் மும்மணி. 28); "தவளை யரமுழக்கந் தான் செய்த தென்று, திவண்மணிபொன் வாரிச் சிதறி" திருவிடைமருதூருலா, 112.

ரு. எல்லை - காலத்தில். கும்பமாதத்து - மாசிமாதத்தில். சிவநிசித்தினம் - சிவராத்திரி.

## ஒருநாகம் அம்மண்டூகத்தை யுண்ணல்.

பருவருஞ் சீத வாத பயத்தினு னீரி னின்றும்
ஒருவருங் கீழ்பாற் கோட்டி லுற்றவோர் நாவன் மூலம்
வெருவருந் திறத்தின் மேவ வெம்பசிப் பிணிக்கோட் பட்ட
பொருவரு மரவொன் றுங்குப் பொருக்கெனக் கவர்ந்த தன்றே. (௬)

அரியெனும் பெயரெ னக்கே யமையுநிற் கமையா தென்று
பரிதர வடர்த்தன் மானப் பற்படக் கவர்த லோடும்
விரியர முழக்க மோவி வெற்றொலி யெழுப்பிற் றத்தீ
வரியரா விழியே லாது மறைப்பது மான மாதோ. (எ)

## மண்டூகம் சிவசாரூபம் பெறுதல்.

உயிர்விடு மமய மேவ வொய்யென வஞ்ச னக்கட்
குயின்மொழி யுமையாள் வந்து கூடியைந் தெழுத்து மோதச்
செயிரக லஃதப் போதே சிவபிரா னுருவம் வாய்ந்து
பயிலணி யாக வந்தப் பாம்பையே யணிந்த தம்மா. (அ)

தவளையடு தொழில்பு ரிந்த சர்ப்பத்தை யணியாப் பூண்ட
கவளைகுரற் றவளை யந்தக் கமழ்சுவைப் புனலுண் மூழ்கி
நவளைமலர்க் கொன்றை வேணி நாயனுர் பதமு மேலோர்
வவளையுமஞ் சனக்கண் ணம்மை மலரடித் துணையுந் தாழ்ந்து. (௯)

## மண்டூகம் சிவலோகஞ் சேர்தல்.

திப்பிய வுருவத் தோடு திப்பிய விமான மேறித்
திப்பிய கணங்கள் சூழத் திப்பிய வியங்க ளார்ப்பத்

---

௬. பருவரும் - துன்பமடையும். கோட்டில் - கரையில். நாவல் மூலம் - நாவல்மரத்தின் வேரில். நாவல்மரத்தின் கீழேயுள்ள பாம்பு அத்தவளையை விழுங்கியது.

எ. அரி - தவளை, பாம்பு. ஓவி - ஒழிந்து. வெற்றொலி - பொருளில்லாத ஒலியை. ஒலியைப் பாம்பு கண்ணுற் கேட்பதாதலின் 'விழியேலாது மறைப்பதுமான' என்றூர். மான எழுப்பிற்று.

அ. அஃது - அந்தத் தவளை. சிவபிரான் உருவம் - சாரூபம். பாம்பால் கவரப்பட்டு இறந்த தவளை சிவசாரூபம் பெற்று அந்தப்பாம்பையே அணியாகப் பூண்டது.

௯. நவளை - தேன்.

௧0. திப்பியம் - தெய்வத்தன்மை.

திப்பிய மென்னே யென்று தேவர்பூ மாரி பெய்யத்
திப்பிய வுலக மாய சிவலோக முற்ற தன்றே. (௧௦)

தவளையா யிருந்த போது சம்புவி னடியைப் பேணும்
அவமில்சா தனத்தி னாலே யம்மையுந் திருமே னிக்கட்
டவளநீ றணியா நின்ற சம்புவி னடியைப் பெற்ற
தவதியில் சிறப்பஃ தென்னிற் சாதன மழகே வர்க்கும். (௧௧)

இழிபிறப் புடைய நீகம் பெற்றபே றிற்றென் றோதிற்
பழிதபு பிறப்போ ரங்குப் பெறும்பேறு பகர்வார் யாரே
மொழியுமத் தலத்தி லின்று முடியுயிர்க் கெல்லா மம்மை
அழிவிலைந் தெழுத்து மோதி யருளுவ துண்மை கண்டீர். (௧௨)

நம்புமத் தீர்த்த மாட லொடோறும் விசேட மேனும்
கும்பமா மதிவி சேட நவிலுமக் கும்ப மாதத்
தம்பிகா பதியி ராநா ளதனினும் விசேட மாமத்
தம்பிரா னொருவி மானந் தடுத்தது முரைப்பாங் கேண்மின். (௧௩)

ஆகத் திருவிருத்தம்—உ௦அ.

---

# ஏ. சொன்னயான நிரோதனபுரப் படலம்.

கதைச் சுருக்கம்.

[சோழநாட்டை ஆண்டுவந்த சோமேந்திரனென்னு மரசன் ஒரு நாள் யானையின் மீதேறி அமைச்சர் முதலியோர் சூழத் தன் நாட்டின் எல்லையைப் பார்த்து வரும் பொருட்டுப் புறப்பட்டான். புறப்பட்டவன் நாடுகளிலுள்ள குடிகளுடையகுறைகளை அறிந்து அவற்றை நீக்கி மகிழ்ச்சியுறச் செய்து பின்பு காட்டுக்குள் புகுந்து அங்குள்ள வளங்களையும் அறிய

---

௧௧. சம்பு - நாவல்மரம். அம்மையும் - மறுபிறப்பிலும். சம்பு - சிவபெருமான். சாதனம் - உபாயம்.

௧௨. நீகம் - தவளை. பிறப்போர் - பிறப்பையுடையவர்கள். அம்மை - அஞ்சனக்கண்ணம்மை.

௧௩. அம்பிகாபதி இரா - சிவராத்திரி.

எண்ணி அதனுட்களிற்றைச் செலுத்தினன். அக்களிறு அதனுட் செல்ல வியலாமல் நின்று விட்டது. அதனை யறிந்த அரசன் அக்காட்டுக்கு மேலே பறந்து செல்வதற்குரிய பொன் விமானமொன்றை அமைப் பித்து அதன்மேல் ஏறி அக்காட்டின் மேலே செல்ல, அங்கே உள்ள ஒரு மந்தார விருட்சத்தினருகிற் செல்கையில் அவ்விமானம் தடையுண்டு நின்றது. அப்பொழுது அது மேலே செல்வதற்குரிய பலவகை உபா யங்கள் செய்தும் அது நின்றபடியே இருந்தது. உடனே மன் னன் சிவபெருமானை நினைந்து இரங்கி, "எந்த விருட்சத்தினடியில் இவ் விமானம் தடைப்பட்டு நின்றதோ அத்தருவின் அடியில் ஏதேனும் அதி சயம் இருக்கவேண்டும்" என்று கூறி, உடனே கீழிறங்கிப் பார்க்கை யில் அத்தருவினடியில் ஒரு புற்று இருப்பக் கண்டான். அதனைத் தோண்டிப் பார்க்கையில் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருப்ப தைக் கண்டறிந்தான். கண்டவுடன் மனம் உருகி வணங்கி நின்றான். பிறகு அங்கே திருக்கோயில் அமைக்க எண்ணினன்; காட்டையழித்துப் பலவகை மண்டபங்களோடு அழகிய கோயிலை அமைத்துப் பல தேவர் களைப் பிரதிஷ்டை செய்வித்தான். அன்றியும், பல திருவீதிகளை உண் டாக்கி நித்தியநைமித்திகங்கள் நடைபெறச் செய்வித்தான். நாள் விழா மாதவிழா முதலியன அவன் முயற்சியால் நிகழ்ந்தன. தன்னுடைய சொன்னயானத்தைத் தடுத்தருளிய காரணத்தாற் சிவபிரானுக்குச் சொன்னயான நிரோதரென்னும் திருநாமத்தையும் இத்தலத்திற்குச் சொன்னயான நிரோதனபுரமென்னும் திருநாமத்தையும் சூட்டினன். பிறகு அத்தலத்திற்குத் தென்கிழக்கே ஒரு மாளிகையை அமைத்து அங்கே இருந்து பலருக்கும் கல்யாணம் (பொன்) வழங்கி வரலானன்; அதனல் அன்றுமுதல் அவ்விடத்திற்குக் கல்யாணசோழபுரமென்னும் பெயர் வழங்கலாயிற்று.]

---

### சோழேந்திரன் பெருமை.

(கலிவிருத்தம்)

நிலையாவெழு கதிரோன்வழி நிலவும்படி தோன்றிக்
குலையாவர மதுகைக்கொடு குலவும்புகழ்ப் பெருமான்
உலையாவள மிகுதண்புன லுயர்நாடு புரப்போன்
தொலையாவரு டழைபத்தழை சோழேந்திர னென்போன். (க)

---

எ. சொன்னயான நிரோதனபுரப் படலம்.

க. கதிரோன்வழி - சூரியகுலம். புனல் உயர்நாடு = புனல்நாடு - சோழநாடு.

மாசற்றெழு மதியேயென வயங்குங்குடை யுடையான்
பூசப்பொலி வருணீறு புனைந்தேமகிழ் பூப்போன்
வாசத்தொடை மிலையாவிரு மலையாவெழு தோளான்
பேசப்பெரு குஞ்சீருடைப் பெரியோனருட் குரியோன் (உ)

மாற்றாருயிர் கவர்ந்தேவரு வாளான்கதிர் வாளான்
பாற்றார்பல புனைந்தேயெழு படையான்பிழை படையான்
போற்றார்முடி யிடறுங்கழற் பூணான்பழி பூணான்
ஊற்றார்மத களிற்றுப்படை யுடையான்வலி யுடையான். (௩)

கலையாவையு முணர்ந்தேகரை கண்டான்மடம் விண்டான்
மலையாவொரு பரமாதரை மருவானரு ளொருவான்
நிலையாமையை மதியான்பெரு நிதியான்புகழ் முதியான்
சிலையாவெழு கொடிஞ்சித்தடந் தேரான்விறற் றூரான். (ச)

அனையானலை யெழுகாவிரி யணிநாடு புரந்து
நினையாதவர் வலிமாற்றுபு நிரம்பப்பொரு டெவ்விக்
கனையாவற மெழுந்தோங்கிடக் கண்ணேடுபு காத்துத்
தனையாவரும் புகழ்ந்தேத்திடத் தழையாவளர் நாளில். (ரு)

சோழேந்திரன் தன்நாட்டெல்லையைப் பார்க்கச் செல்லுதல்.

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

குனிசிலை மதவே ளன்ன குரூஉக்கதிர் மருமா னுண்மைத்
தனிமதி யமைச்ச ராதித் தானைகா வலர்தற் சூழ
முனிகளிற் றிவர்ந்து மீது முத்தவெண் குடைநி ழற்றப்
பனிபடு தன்னாட் டெல்லை சூழுபு பார்ப்பான் சென்றான். (சு)

---

உ. பூசப்பொலிவு அருள்நீறு : 'பூசப் பூசப் பொன்னிறம்' என்பதொரு பழமொழி. மிலையா - அணிந்து. மலையா - மலையைப்போல. பெரியோன் - சிவபெருமான்.

௩. கதிர்வாளான் - கிரணத்தோடு கூடிய ஒளியை உடையவன். பால் தார் பலபுனைந்து - பக்கத்திற் பல மாலைகளை அணிந்து. படையான் - சேனைகளையுடையவன். பிழைபடையான் - குற்றங்கள் அடையாதவன். கழற்பூணான் - வீரக்கழலாகிய ஆபரணத்தையுடையவன். ஊற்று - ஊறுதல். வலி உடையான் - வன்மை கெடாதவன்.

ச. மடம் - அறியாமை. சிலையா - முழங்கி.

ரு. தெவ்வி - கைக்கொண்டு.

சு. கதிர்மருமான் - சூரியன் வழித்தோன்றல்.

அரசன்பார்ப் பானு யுற்ற வன்னபோ தத்தாங் காங்கு
விரவுபல் குடிப் மேவி யடியுறை விழைய வைத்துக்
கரதலங் குவித்துத் தாழ்ந்து கருதுதங் குறைகள் கூறி
வரமிக நிரம்பப் பெற்று மகிழுமா மகிழ்ச்சி செய்வான். (எ)

சோழேந்திரன் காட்டுவேளங் காணப்புகுதல்.

நாட்டக முழுதுஞ் சூழ்ந்து குடிக்குறை நலியச் சாடிக்
காட்டகம் புகுந்தாங் குள்ள வளனெலாங் காண வுட்கொண்
டேட்டகத் தடங்காச் சீர்த்தி யிறையவன் களிற்றை யுந்தக்
கோட்டகக் களிறக் காட்டுட் புகாமையுட் குறித்தா னன்றே. (அ)

அரசன் பொன்விமானம் அமைத்து ஊர்ந்துசெல்லல்.

எய்தவம் பிடைசெ லாம னெருங்கிய விக்காட் டுடு
பெய்மதக் களிநல் யானைப் பெருமலை யெங்ஙன் செல்லும்
வெய்துமேற் செல்லு மாறோர் விமானம்யாம் பெறுவோ மென்று
மொய்தவப் பொருதோ ளண்ணன் முன்னிறு னன்ன போதே. (கூ)

வினைவல மயனைக் கூவி விழைபொருள் வெறுப்ப வீசிப்
புனைதரு விமான மொன்று பொலிந்துமேற் படரு மாறு
துனைதர வியற்று கென்றான் றொழுதனன் புத்தியென்று
கனைகதிர்க் கடவு ளென்னக் கண்டனன் பொன்னு லன்றே. (க0)

வடதிசைத் தலைவ னூர்வி மானமுஞ் சமழ்ப்புக் கொள்ளச்
சுடரிளங் கதிரோ யென்னத் தோன்றுபொன் விமான நோக்கி
மடன்முறுக் கவிழுந் தாரான் மகிழ்ந்துமந் திரர்முன் னுய
படர்பெருஞ் சுற்றத் தோடு மிவர்ந்தனன் பலரும் வாழ்த்த. (கக)

---

எ. அரசன் பார்க்கும்பொருட்டுச் சென்ற; அரசன் பிராம்மணனாக அடைந்த என்று வேறொரு பொருள் தொனிக்கின்றது. அடியுறை-காணிக்கை. மகிழுமா - மகிழும்படி.

அ. உந்த - செலுத்த. கோட்டு அகம் - திரும்பிய மனத்தையுடைய.

கூ. வெய்து - விரைவில்.

க0. துனைதர - விரைவாக புத்தியென்றல் : தாழ்ந்தோர் கூறும் உடம்பாட்டுக் குறிப்பு. கண்டனன் - இயற்றினன்.

கக. வடதிசைத்தலைவன் - குபேரன். சமழ்ப்பு - நாணம். மந்திரர் - அமைச்சர்.

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

ஒள்ளிய புனல்வீக் கஞ்சா லுபயகா விரிக்கு நாப்பண்
நள்ளிய வடவி மேலா னக்கபொன் விமானஞ் செல்ல
வள்ளிய வமைச்சர் தொக்க மரவள மனைத்துங் காட்ட
வெள்ளிய விலைவேன் மன்ன னேக்கியுள் விழைந்து செல்வான். (கஉ)

## விமானம் தடையுறல்.

மரவள மனைத்து நோக்கி மகிழ்ந்துசெல் வளவர் கோமான்
உரவள வமைச்ச ரோடு மூர்ந்துசெல் பொன்வி மானம்
புரவளந் தபந கைத்த புண்ணிய னருளி னாலா
தரவள மலிமந் தார தருவின்பாற் றடையுண் டன்றே. (கங)

தழையுமந் தார நீழற் றடைபட்டு நின்ற தோர்ந்து
விழையுமந் திரர்முன் னானோர் வேறுவே றுபாயஞ் செய்தும்
மழையும்வந் திறைஞ்சுங் கண்ட வள்ளலார் பதமுட் கொண்டு
குழையும்யோ கியர்ம னம்போ லாயது குலப்பொன் மானம். (கச)

## சோழேந்திரன் இரங்கல்.

பொன்செய்த விவ்வி மானம் புட்பக விமான மன்று
மின்செய்த மலரித் தாரு வெள்ளியங் கயிலை யன்று
கொன்செய்த மதியீர் யானுங் கொடியவா ளரக்க னல்லன்
தென்செய்த மான நின்ற காரணந் தெரியே னென்பான். (கரு)

அருமக மியற்றி நாளு மவியுண வருத்த லாலே
பெருமகிழ் சிறக்கும் வானோர் பேணுமெற் கீது செய்யார்
வெருவரு மாற்றா ரென்பார் மேதினி யிடத்தி னில்லைத்
திருவளர் விமானந் தங்குங் காரணந் தெரியே னென்பான். (கசு)

---

கஉ. புனல்வீக்கம் - நீர்ப்பெருக்கு. நள்ளிய - செறிந்த.

கங. உரவளம் - அறிவின் சிறப்பு. புரவளம் தப - முப்புரங்களின் வளப்பம் கெடும்படி. ஆதரவளம் - அன்பாகிய செல்வம். தடையுண்டன்று - தடையுண்டது.

கச. யோகியருள்ளம் நிற்றலைப்போல விமானமும் நின்றது.

கரு. புட்பகவிமானம் - இராவணன் ஊர்ந்துவந்த விமானம். மலர் இத்தாரு - மலரையுடைய இந்த விருட்சம். அரக்கன் - இராவணன். மானம் - விமானம்.

கசு. மகம் - யாகம். நான் தேவர்களைக் குறித்து வேள்விசெய்து அவிர்ப்பாகத்தைத் தருதலால் அவர்கள் இங்ஙனம் செய்யார்.

### அரசன் கீழிறங்கி ஆராய்தல்.

எத்தரு வடியிம் மானந் தடைபட்ட தினிய சான்றீர்
அத்தரு வடியின் கண்ணே ரதிசய மிருக்க வேண்டும்
முத்தரும் விழையங் குற்று முயன்றுள துணர்வோ மென்றான்
கொத்தரும் பளாவு தண்டார்க் குவவுத்தோட் குரிசி றனே. (கஎ)

நரபதி வார்த்தை கேட்டு நன்றெனை வமைச்ச ராதி
விரவிய பலருஞ் சொன்ன விமானநின் றிழிந்தா ரந்தப்
புரவல ரேறுங் கூடப் போந்தனன் விமான நீழல்
பரவிய கவிகை நீழ லாகவண் பாரை யுற்றான். (கஅ)

திசையெலாங் கமழப் பூத்துச் செழித்தமந் தார தாரு
வசைவிர வாத பாத மருவிலே றென்றுங் காணான்
இசைகெழு செஞ்சொன் மாலை யேந்திய தடந்தோ ளண்ணல்
அசைவரு மொருவன் மீக மாயிடை யிருப்பக் கண்டான். (கக)

கண்டவன் மீகத் துள்ளே கருதிறம் பூதுண் டாங்கொல்
மூண்டல மதிக்குஞ் சான்றீர் வல்லைநா மகழ்வோ மென்றான்
குண்டலம் வயங்கு கோலச் செவியுடைக் குரிசில் வார்த்தை
தண்டலி லவர்கேட் டற்றே யாகெனச் சாற்றி னரே. (உ0)

### அரசன் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல்.

மண்டொடு கருவி யாரை வரவழைத் தகழு மென்று
விண்டொடு கொடுஞ்சித் தேரா னேவலும் விரைந்த கழ்ந்தார்
வண்டொடு பெடைவீழ் செந்தா மரைமுனி யொடுநே மிக்காக்
கண்டொடு மாலுங் காணுக் கடவுளைக் கண்டா னன்றே. (உக)

### அரசன் கூற்று.

கண்டன னன்பு பொங்கிக் கரைகடந் தெழவு வப்புக்
கொண்டனன் சிரமேற் செங்கை குவித்தனன் கொடிய பாசம்

---

கஎ. முத்தர் - துறவிகள். உள்ளதை உணர்வோம்.

கஅ. நரபதி: சோழனுக்குரிய பெயர். கவிகை - குடை.

கக. அண்ணல் - சோழன். வன்மீகம் - புற்று.

உ0. இறும்பூது - அதிசயம்.

உக. மண்தொடுகருவி - மண்வெட்டி முதலியன. அகழும் - தோண்டும். செந்தாமரை முனி - பிரமதேவர். நேமிக்காக் கண் தொடு - சக்கராயுதம பெறும்பொருட்டு விழியைத் தோண்டிவைத்த.

விண்டனன் பிறவி யேழும் வீட்டின னயன்மால் காணு
அண்டனன் றெனக்குக் காட்சி யருளிய திறத்தா லென்பான். (உஉ)

ஆடுவ னங்கை கொட்டி யரகர சம்பு வென்று
பாடுவன் சூழ்ந்து சூழ்ந்து பரவுவன் புளகப் போர்வை
மூடுவன் றொண்டு பூண்டு மூடுவெம் பாச முற்றும்
சாடுவ னென்வி மானந் தடுத்தவா ரருளா லென்பான். (உங)

பண்டைநான் மறையும் வானோர் பகுதியும் வான வேந்தும்
இண்டைமா மலரின் மேய விறைவனு மாலுங் காணுக்
கண்டைமால் விடையான் மோகக் கடலகங் கலந்து சற்றும்
தொண்டையாற் றுநா யேற்குந் தோன்றிய தெவனோ வென்பான். ()

அகன்றிடு கடும்பி னோரா யடவிபுக் கருந்த வஞ்செய்
துகன்றிடு மவர்க்குச் சற்றுந் தோன்றிலான் றொழுஞ்சன் மார்க்கத்
திகன்றிடு மெனக்குத் தோற்ற மெய்தினன் பித்த னென்று
புகன்றிடு மொருநா மத்தைப் புதுக்கினன் கொல்லோ வென்பான். ()

புறம்பொலி கழனி யெல்லா மான்மதத் துவம்புண் மாச்சூழ்
திறம்பொலி கான கம்வித் தியாதத்து வஞ்சி றந்து
நிறம்பொலி தருவன் மீக நிகழ்சிவ தத்து வங்கொல்
அறம்பொலி சிவபி ரானே யான்கடந் தெய்த வென்பான். உசு)

முனிவருங் கொடிய வாய மூன்றையுந் தடுப்பா ரந்தோ
இனிவரு பிறவி தீர விரண்டையுந் தடுப்பா ருள்ளத்
துனிவருந் தாமன் மூலத் தொன்றையுந் தடுப்பா ரீங்குத்
தனிவரு மென்வி மானந் தடுத்தகா ரணத்தா லென்பான். (உஎ)

அண்ணிய தத்து வங்க ளனைத்தையுஞ் சடமாக் கண்டேன்
திண்ணிய வினையுங் கண்டேன் றிருவருட் பொலிவுங் கண்டேன்
எண்ணிய பிறவி வேலை யிரியுமின் பமுங்கண் டேனிக்
கண்ணிய சுயம்பு லிங்கங் கண்டகா ரணத்தி னானே. (உஅ)

---

உங. புளகம் - மயிர்க்கூச்செறிதல்.

உச. இண்டை - தாமரை. கண்டை - மணி. தொண்டை ஆற்று - கைங்கரியம் செய்யாத.

உரு. அகன்றிடு கடும்பினோர் - சுற்றத்தை நீங்கினவர். தவஞ் செய்து கன்றிடும்.

உசு. புள்ளும் மாவும்; மா - விலங்கு.

உஎ. மூன்று - மலம மூன்று. இரண்டு - வினை இரண்டு. மூலத் தொன்று - மூலப்பகுதி.

என்றுபன் முறையுங் கூறு மெதிர்சென்று தழுவிக் கொள்ளும்
நன்றுநெட் டுயிர்க்குந் தெய்வ நறுமணங் கவர்வான் மோக்கும்
துன்றுமா னந்தந் தேங்கச் சூழ்ந்திமை யாது நோக்கும்
என்றுந்தான் கொண்ட வன்புக் கெல்லையி லாத சோழன். (உகூ)

அரசன் திருக்கோயிலும் திருநகரும் அமைத்தல்.

இருகணீ ரருவி பாய விங்ஙன முருகா நிற்கும்
பொருவரு கழற்கால் வேந்தன் புந்திசா லமைச்ச ராதி
ஒருவருந் தமரை நோக்கி யுறந்தவிக் காடு மாய்த்துத்
திருவளர் கோயில் செய்வான் செய்வன செய்மி னென்றுங. (௩௦)

தாரணி தோளான் வார்த்தை தாழ்ந்துதந் தலைமேற் சூடிப்
பாரணி யமைச்ச ராதிப் பலருமோ ரிடத்திற் கூடிக்
கூரணி நவியம் வெள்வாய்க் குயங்கொள்வன் றொழிலோர்க் கூவி
நீரணி காடு வெட்டித் திருத்துமி னிலத்தை யென்றார். (௩க)

அவருரை கேட்ட போதே யனையரத் தொழிலின் மூண்டார்
கவர்வழி தோறுஞ் சென்று கருங்கண்மா விரைந்த டுத்த
பவர்படு காடு புக்க பல்வழிச் செலுநீத் தங்கள்
உவர்பயி லாழி மேவி யொடுங்குதன் மான மாதோ. (௩உ)

இடருற நட்டோர் தம்மை யிரித்தகல் கொடியார் மானப்
படர்தரு பறவை யெல்லாம் பறந்தன கான நீங்கித்
தொடர்புடை நல்லோர் போலச் சூழ்ந்தபைங் கொடிக ளெல்லாம்
அடர்மரம் வீழ வீழ்ந்து சோர்ந்தன வலக்க ணுற்ற. (௩௩)

பரிந்தமெய்ஞ் ஞான மொன்றே பாரிக்கப் பலவே றாகி
விரிந்ததத் துவங்க ளெல்லாம் வேறறக் களைவார் போல
புரிந்தமந் தார மொன்றே பொலியமற் றுள்ள வெல்லாம்
சரிந்தன கவிழ வெட்டிச் சாய்த்தனர் தொழில்செய் வோரே.

---

௩௦. உறந்த - மிக்க.

௩க. நவியம் - கோடரி. குயம் - அரிவாள்.

௩உ. மா - விலங்குகள். அடுத்த - பக்கத்திலுள்ள. பவர் - கொடி. நீத்தங்கள் - வெள்ளங்கள்.

௩௩. அலக்கண் - துன்பம்.

௩௪. பரிந்த - அன்புற்ற. பாரிக்க - பரவ.

காமமுஞ் சினமுந் தீரா மயக்கமுங் களைந்த போதே
மாமனஞ் செம்மை வாய்ந்த வண்ணமே பொருவ வெவ்வே
ருமரங் கொடிபுன் னீங்க வகனிலஞ் செம்மை யாய
தேமமா ரமைச்சர் காணூஉ விறைவனுக் குணர்த்தி னாரே. (௩௫)

இறையவன் காடு மண்ணி விருந்தமே டவலு நீங்க
நிறைமகிழ் பூப்ப நோக்கி நிகழ்பொருள் வெறுப்ப வாரி
மறைபுகல் சிற்பம் வல்ல வளத்தப தியர்க்கு வீசி
முறைபுரி நகரங் கோயின் முதலிய வியற்று மென்றான். (௩௬)

பொறிவரிச் சுரும்பு மூசப் பொழிமது மலர்த்தார் மார்பன்
நிறைமொழி தலைமேற் கொண்டு நேரேரெனப் பணிந்தெ ழுந்து
குறையற வின்னே யெல்லாங் கூறிய படிசெய் வேமென்
றறைவலித் தபதி மார்க ளத்தொழி லாற்ற லுண்டார். (௩௭)

(ஷை வேறு)

பொன்செய் கருப்ப கிரகமே பொலியு மத்த மண்டபமே
மின்செய் மணிமா மண்டபமே மேவு நிருத்த மண்டபமே
கொன்செய் விழாக்கோண் மண்டபமே குலவு மூர்தி மண்டபமே
தென்செய் வசந்த மண்டபமே திகழ்சித் திரஞ்சான் மண்டபமே. ()

அருள்கூ ரெங்க ளஞ்சனக்க ணம்மை யமரு மாலயமே
பொருள்கூ ரொற்றைக் கொம்பரயிற் புலவர் மருவுங் கோயில்களே
தெருள்கூர் நடனப் பெருமானார் திகழ நடிக்கு மம்பலமே
வெருள்கூர் சூல கபாலத்தன் மேவி யமருஞ் சினகரமே. (௩௯)

கற்றோர் பரவும் புகழ்ச்சோமாக் கந்தர் மருவும் பெருந்தளியே
மற்றோ ராய வாவரண வானோர் மருவு மிடங்களே
உற்றோர் விரும்பு மடைப்பள்ளி யோவா யாக சாலையே
செற்றோ ரஞ்சு மணிமதிலே சேணு டளக்குங் கோபுரமே. (௪௦)

---

௩௫. புல் - புறத்தே வயிரமுடையவை.

௩௬. காடும் மேடும் அவலும்; அவல் - பள்ளம். தபதியர் - சிற்பியர்.

௩௭. பொறி - புள்ளி. மூச - மொய்ப்ப.

௩௮. ஊர்தி மண்டபம் - வாகன மண்டபம்.

௩௯. ஒற்றைக்கொம்பர்-விநாயகர். அயிற்புலவர் - முருகக்கடவுள் அயில் - வேல். சூல கபாலத்தன் - வயிரவக் கடவுள். சினகரம்-கோயில்.

௪௦. தளி - கோயில். ஆவரண வானோர் - பரிவார தேவர்கள்.

காமர் மருவு கயிலாய கங்கைக் கிழிசோ பானமே
ஏம மிருபே ராலயத்துக் கியைந்த மற்ற யாவுமே
தூம மளாய குழன்மடவார் தொக்குப் பயிலு நான்மறுகே
நாம மறையோர் முதலாக நால்வர் மருவுங் கிரகமே. (௪௧)

ஆதி சைவர்க் குறையுளே யான்ற முனிவர் திருமடமே
ஓதி யமரும் பள்ளியே யும்பர் சூழு மறப்புறமே
நீதி யமைய மற்றுள்ளோர் நீடு வாழும் பன்மனையே
ஓதி யமையாப் பிறவும்விரைந் துஞற்றி யரசன் பதந்தொழுதார். (௪௨)

கண்டா னரசன் பெருமானைக் கண்ட காலத் தினுமுவப்புக்
கொண்டா னுலகத் தரசரெலாங் குழுமி யாங்கு வரச்செய்து
விண்டா னெனவத் திருநகர மேன்மேற் பொலியப் பொலிவித்துத்
தொண்டா னுவப்போ ரகத்துவகை துளும்ப முகமன் பலசெய்து. ()

நிலவு மணிமங் கலமுழங்க நிகழு மியங்கள் பலமுழங்கப்
பலவு மறைகள் முழக்கெடுப்பப் பல்லாண் டிசைப்ப நன்னாளிற்
குலவு மாதி சைவர்களாற் கும்பப் புனலு மாட்டுவித்துக்
கலவு பூசை விதியினறு காலங் களுநன் குற்றுவித்து. (௪௪)

நிலமே பொழிலே பாத்திரமே நீடு விருதா வளியேபொற்
கலமே சிறந்து விளங்குமணிக் கலமே காம்பு முதலாக
நலமே யமைந்த வட்டமே நாடு மிடப முதலூர்திக்
குலமே பிறவு மினிதமைத்துக் கோலம் பொலியும் படிகொடுத்து. ()

தினமே பக்க மேமதியே சிறந்த வயன மேயாண்டே
மனமே விழையும் படிவிழவு வயங்கு மாறு செய்வித்துக்
கனமே மலியு மாசிவிழாக் காண்பார் மகிழச் சிறப்பித்துத்
தனமே நிகருஞ் சிவதீர்த்தந் தனிலத் திரரை யாட்டுவித்து. (௪௬)

---

௪௧. கயிலாய கங்கை - சிவதீர்த்தம். சோபானம் - படி. நால் மறுகு - நான்கு திருவீதிகள். நால்வர் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.

௪௨. ஓதி அமரும் பள்ளி - வேதம் முதலியன ஓதியிருக்கும் இடம்.

௪௩. விண்தானென - தேவலோகத்தைப்போல.

௪௪. மங்கலம் - மங்கலவாத்தியங்கள்.

௪௫. வட்டம் - ஆலவட்டம்; விசிறி.

௪௬. அத்திரரை - அஸ்திர தேவரை.

அனைய ராடு மாமகத்தி லன்பிற் றானு மதிற்றோய்ந்து
புனைய வாய்ந்த வஞ்சனக்கட் பொன்னந் திதலை முலையாட்கும்
துனைய மானந் தடுத்தாண்ட தோலா வருண்மா தேவனுக்கும்
நினைய முடியாப் பேருவகை நிரம்பச் சிறப்புப் பலசெய்வான். (௪எ)

சொன்ன யானந் தடுத்தாண்ட தோலா வருளா விறையவர்க்குச்
சொன்ன யான நிரோதரெனத் துதிக்கு மொருநா மஞ்சூட்டிச்
சொன்ன யான நிரோதபுர மென்று நகர்க்கும் பெயர்சூட்டிச்
சொன்ன யான முன்னூர்ந்த சோழேந் திரனுண் மகிழுவான். (௪அ)

மறையோர் முதலோர் நால்வர்களு மற்று மொருமூ வகையாரும்
குறையா வ்வப்பி னங்நகரங் குடிகொண் டமரும் படிசெய்து
முறையே யவர்க்கு வேண்டுவன முற்ற வமைத்துக் கொடுத்திட்டான்
பொறைசார் வளவர் கோமானப் புரத்தை யகலத் துணியானாய். (௪௯)

கலியாணசோழபுரம்.

மன்னு மனைய நகர்த்தென்கீழ் வளமா ளிகையொன் றமைத்தமர்ந்து
மின்னு மளவாக் கலியாணம் வேட்டோர்க் களித்தான் கலியாணம்
துன்னுந் திறத்தாற் கலியாண சோழ புரமா கியதவ்வூர்
இன்னு மறிஞர் காரணப்பே ரென்னப் பொலியு மந்நகபே. (௫௦)

ஆகத் திருவிருத்தம்—உ௫௮.

---

௪எ. மாமகம் - சிறந்த மகநட்சத்திரத்தில்.

௪அ. நிரோதர் - தடுப்பவர்.

௪௯. மூவகையார் - அநுலோமர், பிரதிலோமர், சங்கரர். அப்புரத்தை - அந்த நகரத்தை.

௫௦. கலியாணம் - பொன் ; விவாகமெனினும் பொருந்தும்.

# அ. நடனப் படலம்.

## கதைச் சுருக்கம்.

[கலியாணசோழபுரத்தில் இனிது வாழ்ந்திருந்த சோழேந்திர னென்னும் மன்னன் ஆற்றூர்சென்று சிவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து திருக்கோயில் புகுந்து சிவபெருமானுக்கு அபிடேகம் அருச்சனை முதலி யன செய்வித்து முறைப்படியே தரிசனம் செய்தான். பின்பு அன்பு மீதூர்ந்து சொன்னயான நிரோதனப் பெருமானைப் பலவகையாகத் தோத்திரஞ்செய்து மனமுருகி நின்றான். அவனுடைய பேரன்பைத் திருவுள்ளங் கொண்ட சிவபெருமான் மகிழ்ந்து திருநடனம் செய்தனர்; அந்நடனத்தைத் தரிசித்து உள்ளங் குழைந்து, "இத்தரிசனம் எளி யேன் பெறத்தக்கதோ!" என்று உருகி, "எம்பெருமானே! இந்த ஆனந்த நடனத்தை எல்லா வுயிரும் இத்தலத்திற் கண்டு களிக்கும் படி இத்திருக்கோலத்தோடே எழுந்தருளி யிருக்கவேண்டும்; இந்தத் தலம் நடனபுரமென்னும் திருநாமத்தையும் அடையவேண்டும்" என்று வேண்டினன். அங்ஙனமே சிவபிரான் அருளிச் செய்தனர். இங்ஙனம் மந்தாரவனமாகிய இத்தலம் சொன்னயான நிரோதபுரமென்னும் நாமத் தோடு சோழனுக்காகச் சிவபிரான் நடனஞ் செய்தமையால் நடனபுர மென்னும் திருநாமத்தையும் பெற்றது.]

---

### சோழேந்திரன் ஆற்றூர்சென்று சிவபிரானைத் தரிசித்தல்
### (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

கன்னலொடு செந்நெலும்வண் டாழையும்வா ழையும்பொலிந்து கலந்தி யார்க்கும், இன்னலறுத் தோங்குபெருங் கலியாண சோழபுர மினிது வாழும், மன்னவனன் புருவாகி வயங்குசோ ழேந்திரனுண் மகிழ்ச்சி மேவ, முன்னவன்மா னந்தகைந்த நகர்புகுந்தான் சிவதீர்த்த மூழ்கி னனே. (க)

புண்ணியமா தீர்த்தம்விதிப் படிமூழ்கி மறைபுகல்வி பூதி பூசி, நண்ணியகண் மணிபூண்டு மனத்துறவைந் தெழுத்தழுத்தி நாகத் தெல்லை, அண்ணியகோ புரவாயில் பணிந்தெழுந்து நந்திபிரா னனுஞை பெற்றுக், கண்ணியநா யகன்கோயில் வலஞ்சூழ்ந்து முன்புகுந்தான் கைகள் கூப்பி. (உ)

---

அ. நடனப் படலம்.

க. மானம் தகைந்த - விமானத்தைத் தடுத்த. [டனை.

உ. நாகத்து எல்லை - ஆகாயத்தின் எல்லையை. அனுஞை - கட்

TIRUVANMIYUR, MADRAS-41.

பொருந்துமணத் தயிலமுத லாம்பலபி டேகமுநெய் பொதிசோ றுதி, மருந்துநிக ரின்சுவைப்ப னிவேதனமு மடுக்கியொளி மாட்சி மேவத், தருந்துகளி றீபமுதற் பற்பன்முக மனுமன்பு தழைந்து பொங்கத், திருந்துபல வியங்கலிப்ப மறைமுழங்கப் பெருஞ்சிறப்புச் செய்வித் தானே. (ந)

ஓங்குசொன்ன யானநிரோ தனப்பெருமான் றிருவருளு மொருபான் மேய, பாங்குபுனை யஞ்சனக்க ணம்மைதிரு வருளுநனி பாரித் தோங்கி, நீங்குதலி லாதுனக்கு மேன்மேலுண் டாகவென்று நிமல ஞானம், வீங்குசிவ மறையவனீ றளிப்பவேற் றணிந்துதுதி விள்ளு வானே. (ச)

## சோழேந்திரன் செய்த துதி.

பொருவிலிரா சதவியற்கை செயற்கையுமைந் தமர்விதியாய்ப் புவன மாக்கி, மருவியதா மதவியற்கை சத்துவத்தஞ் செயற்கையுடை மாலாய்க் காத்துத், திருவளர்சத் துவவியற்கை தாமதத்தின் செயற்கையுருத் திரனுப் போக்கி, ஒருவருமம் மூவருக்கு மதீதமாய் நின்றொளிரு மொருவ போற்றி. (ரு)

தண்டுழாய் மாலிரப்ப நான்முகனை மகவாகத் தந்தாய் போற்றி, குண்டுநீர் மரைக்கிழவ னிரப்பமா யனைமகவாக் கொடுத்தாய் போற்றி, பண்டுநா டியவவருக் கறிவரிதாய் நிமிர்ந்தெழுந்த பரமா போற்றி, தொண்டுபூண் டமைவார்பால் வலியவடைந் தளவிலருள் சுரப்பாய் போற்றி. (சு)

எச்சமே மாயையே விச்சுவமே வனிதையே யென்னு மாயோன், இச்சைமே வுறமுறைமே நாயகனே யாள்பவனே யிருக்கு

ந. துகள் இல் தீபம் - குற்றமில்லாத தீபம். மூகமன் - உபசாரம். இயம் கலிப்ப - வாத்தியங்கள் ஒலிக்க.

ச. சிவமறையவன் - அருச்சகர்.

ரு. சத்துவத்து அம்செயற்கை. பிரமதேவருக்கு இராசத குணம் இயற்கையும் செயற்கையுமென்றும், திருமாலுக்குத் தாமதகுணம் இயற்கை சத்துவம் செயற்கையென்றும், உருத்திரமூர்த்திக்குச் சத்துவகுணம் இயற்கை தாமதம் செயற்கை யென்றும் கூறுவர். போற்றி - பாதுகாத்தருள்க.

சு. மரைக்கிழவன் - பிரமதேவர்; மரை - தாமரை.

எ. எச்சம் முதலிய நான்கிற்கும் நாயகன் முதலிய நான்கனையும் நிரல்நிறையாகக் கொள்க: எச்சநாயகன், மாயையை ஆள்பவன், விச்சு

முற்றும், மெச்சவோர்ந் தவர்பரவு மதிகனே புருடனே யென்று மேலோர், உச்சமார் தரத்துதிப்ப வோங்கொளியா யெங்குநிறைந் துள்ளாய் போற்றி. (எ)

எவ்வணக்கம் யாரொருவ ரெவ்விடத்தி யாரைமதித் தியற்று கின்றார், அவ்வணக்க மனைத்துமேற் றவ்வவருக் கவ்வவரா யருள்வாய் போற்றி, தெவ்வணக்கம் புரிந்தேத்தச் சிலைவணக்கந் தேர்ந்தெடுத்த செல்வா போற்றி, நவ்வணக்க மவ்வணக்கச் செவ்வணக்க மறிஞர்நவி னம்பா போற்றி. (அ)

வேதமுடி வெனப்புகலு முபநிடதங் காணரிய விளக்கம் போற்றி, ஏதமுயிர்த் தொகையொழிய வேகமொரு பஃதாய வின்பம் போற்றி, போதமொழிந் தவரிறுமாந் தேகமாய்ப் புசிக்குமுயர் போகம் போற்றி, ஓதரும்வித் தைகளனைத்தும் விளக்கியிறை யாயமரு முண்மை போற்றி. (௯)

எண்ணிலுயிர்க் கருள்புரிவான் பல்லுருக்கொண் டைந்தொழிலு மியற்றி யெங்கும், பண்ணிசையு மலர்மணமும் பழச்சுவையும் போலமரும் பண்பு போற்றி, அண்ணல்கெழு சத்தியமாய்ப் பரப்பிரம மாய்ச்சாந்த மாயே கம்மாய்க், கண்ணநந்த ரூபமா யுத்தமமாய் வயங்குபெருங் காட்சி போற்றி. (௧௦)

---

வாதிகன், வனிதைக்குப் புருடனென இயைக்க. எச்சம் - யாகம். விச்சுவம் - எல்லாம். உச்சம் - உயர்வு.

அ. நாட்டுப்படலம், ௯-ஆம் செய்யுளையும் அதன் குறிப்புரையையும் பார்க்க. ந வணக்க - திரோதானத்தை வணங்கச்செய்யவும். ம வணக்க - ஆணவமலத்தை வணங்கச் செய்யவும். செவ்வணக்கத்தை நவிலுகின்ற.

௯. உயிர்த்தொகை ஏதம் ஒழிய; ஏதம் - குற்றம். ஏகம் - ஞானம். ஒருபஃதாகிய இன்பம் - தசகாரியமாகிய இன்பம்; அவை தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகமென்பன; இதனை, "ஏகம்பத்தானை" (கம்பரந்தாதி, 81) என்னும் செய்யுளாலும் உணர்க. இறுமாந்து: "இறுமாந்திருப்பன் கொல்லோ" (தேவாரம்.) வித்தைகள் அனைத்தும் - பதினெண்கு வித்தைகளையும்; அவை வேதம் நான்கு, அங்கம் ஆறு, மீமாஞ்சை, தருக்கம், தருமசாஸ்திரம், புராணம் என்பன.

௧௦. ஏகமாய், கண் அனந்தரூபமாய் - எண்ணப்படும் அளவில்லாத வடிவமாய்.

ஒளிக்குமொளி யாய்ப்பரமாய்ச் சாந்தமா யாதியந்த மொன்றி லாதாய், அளிக்குமளி யாயொன்று யானந்த மயமாய வறிவே போற்றி, தெளிக்குமொரு சத்துமாய்ச் சித்துமாய்ச் சதசத்தின் செயிரொ ழிந்து, களிக்கும்வகை யின்பமிக வளர்த்தருளு மழிவில்பெருங் கருணை போற்றி. (கக)

நீந்தரிய வுக்கிரமாய்க் கோரமாய் நிகழ்தநுவை நீத்து மாறுச், சாந்தமாய் மங்கலமாய் நிகழ்தநுக்கொண் டெனக்கருளுஞ் சம்பு போற்றி, பாய்ந்தபதி பசுபாச மப்பாசம் பசுபதியா காமற் றீர்த்து, வாய்ந்துதுரி யாதீதத் தலத்தின்ப மயமேயாம் வண்ணம் போற்றி. ()

பொல்லாத பெருங்குடும்பச் சேற்றழுந்தி மற்றதுவே பொரு ளாக் கொண்டங், கொல்லாத சாக்கிரமு ஊனந்தவத்தை தொறுமோடி யுழன்று மற்றோர், செல்லாத தீநரகத் தழுந்துதற்கே செயற்கெளிய செய்து நிற்கும், கல்லாத முழுமூட னுயவெனைத் தடுத்தாண்ட கருணை போற்றி. (கஙூ)

நின்னடிக்கன் பில்லாதா ரென்குலத்துப் பிறவாது நீங்க நீங்கா, தன்னவர்வந் துதித்தனரே லப்பொழுதே யிறந்தொழிக வதான்று நாயேன், என்னபிறப் புற்றிடினு நின்னடிக்கன் பொழியாமை யியல்பே யாகப், பொன்னசலங் குழைத்தாயிவ் வரம்பெறுவா னுனைத்தொழுதேன் போற்றி போற்றி. (கச)

பொன்பூத்த சடாமகுடம் போற்றியலை யெறிந்தருளே பொழி கண் போற்றி, மின்பூத்த நுண்ணிடையஞ் சனக்கணுமை யொரு பாதிமேனி போற்றி, பொன்பூத்த வேதண்ட கோதண்டம் போற்றி துழாய்க் கொடுங்கோல் போற்றி, தென்பூத்த மந்தார நிழல்போற்றி மேயவருட் செல்வம் போற்றி. (கரு)

---

கஉ. "பதிபசு பாசத்தைப் பாசம் பசுபதி யாக்கியொரீஇ" பஞ்சாக்கரதேசிக ரந்தாதி, 1.

கச. "வையமிசைத் தோற்றமுதற் சாங்காறு மன்றவுனைத், தெய்வ மெனப் பேணாத் திருவிலிக ளென்குலத்தில், எய்தி யொருஞான்றும் பிறவற்க வெய்துறினும், வெய்தெனமற் றாங்கே விளிந்தொழிக வெம் மானே" (காஞ்சிப். தழுவக்குழைந்த. 236) என்பதன் கருத்தைப் பின் பற்றி வந்தது இச்செய்யுள்.

கரு. வேதண்ட கோதண்டம் - மலையாகிய வில். கோல் - அம்பு.

## சிவபெருமான் திருநடம் புரிதல்.

என்றுதுதித் திருகணீர் மழைவாரக் குழைந்துமன மிளகா நிற்பத், துன்றுநிலத் திடைப்பல்காற் பணிந்தெழுந்து நிற்குமொரு தூயோன் காணக், குன்றுகுழைத் தரவநாண் கொளீஇமாயக் கோலினரண் கொன்ற கோமான், நன்றுமகிழ்ந் தெழுந்துசபை நின்றுபேரானந்த நடனஞ் செய்வான். (கசு)

தும்புருநா ரதரிசைபா டிடமுனிவர் கரங்குவித்துத் துதியா நிற்க, வம்புருவப் பரவுதுழாய் மாலைமான் முழவதிர்க்க மலரின் மேயோன், பம்புருவத் தாளமதிர்த் திடவடியா ரரவென்று பாடிப் போற்ற, நம்புருவத் தெழுந்தகதி ரிருள்பருக வானந்த நடனஞ் செய்வான். (கஎ)

தண்ணியபா லுமைமேற்கட் கடைகூடத் தமருகமோர் தடங்கை யார்ப்ப, எண்ணியவோர் கரத்தழல்பொங் கிடக்கவிய வொருகை யமை வெய்த வோர்கை, மண்ணியமைந் நிறக்குறள்வெந் நழுந்த வொரு தாளன்றி மற்றோர் பொற்றாள், நண்ணியகுஞ் சிதமாக வீசி யெடுத் தானந்த நடனஞ் செய்வான். (கஅ)

திசைமுழுதுஞ் சடைதடவ வெண்பிறைதண் புனறுள்ளித் திகழக் காதின், அசைதரவொண் குழைகுறிய நகையரும்பப் புருவ முரி வமைந்து மேவ, வசையிறலைத் தொடையரவம் புயந்துயல வொருபுற்றோன் மருங்கிற் சீர்ப்ப, நசைகொண்மறைச் சிலம்புகல கலவொலிப்ப வானந்த நடனஞ் செய்வான். (கக)

வேதமுமற் றதன்முடிவு மற்றுமுள கலையனைத்தும் விரிந்த பஞ்ச, பூதமுநாற் கரணமுமைம் பொறிகளுமற் றவற்றொளியாய்ப் பொலியா நின்ற, பேதமுமுக் காலமுமுட் போதமுமப் போதமெழப் பிறங்கு விந்து, நாதமுமிற் றென்றுணர முடியாத வானந்த நடனஞ் செய்வான். (உ0)

---

கக. கொளீஇ - பொருத்தி. மாயக்கோல் - மாயனாகிய அம்பு ; மாயன் - திருமால்.

கஎ. வம்பு - மணம். மால் - திருமால். உருவத்து - திருமேனிக்கண்.

கஅ. பால் - பக்கம். குறள் வெந் - முயலகனது முதுகில். குஞ்[சிதம் - வளைவு.

கக. பிறையும் புனலும். குழை அசைதர. முரிவு - வளைவு. தலைத்தொடை - தலைமாலை. துயல - அசைய.

உ0. போதம் - ஞானம். இற்று - இத்தன்மையது ; இதனை வேதம் முதலியவற்றோடு தனித்தனியே கூட்டுக.

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்து மப்பாற் கூறும், பிஞ்செழுத்து முதலாக மூன்றெழுத்தென் றுரைத வமை பேரெ ழுத்தும், நெஞ்சழுத்து மீரெழுத்து மோரெழுத்து மெனப்புகலு நிலையோ ரெட்டாய், நஞ்சழுத்து மணிகண்டத் தெம் பெருமா னானந்த நடனஞ் செய்வான். (உக)

சிகரமலர் முகநகர மடிமகரந் திருவுதரந் திகழுந் திண்டோள்
வகரமொளிர் முடியகரஞ் சிகரமொரு துடிகவிகை வகர மேலோர்
பகரபய கரம்யகர மகரமுய லகனொருகைப் பதியுஞ் செந்தீ
நகரமுயர் பிரணவம்வா சிகையாக வானந்த நடனஞ் செய்வான்.(உஉ)

கூடுதம ருகம்படைக்க வபயகரந் திதிக்கவழல் கொல்ல வூன்று, நீடுபத மறைக்கவினி தெடுத்தபத மருள்புரிய நிகழு மாயை, மூடு தலி லாதுதறிக் கருமநீற் றுபுசமல முனிந்தி ருத்தி, நாடுமுயர் சுக வடிவம் புரிந்தருளா லானந்த நடனஞ் செய்வான். (உ௩)

மருவுதவப் பதஞ்சலியும் புலிமுனியு முளங்களிப்ப மன்று ணின்று, பொருவுதவிர் பெருமானு ரியற்றுமா னந்தநடம் போற்றி நோக்கி, உருவுமுள முங்குழையக் கட்புனல்வார் தரக்கொடியே னுறலோ வென்று, வெருவுழுவப் பும்பெருகப் பணிந்தெழுந்து வள வனிது வேண்டு மாலோ. (உச)

## சோழேந்திரன் வேண்டிக்கோள்ளல்.

இன்னவா னந்தநட மெவ்வுயிரு நோக்கியீ டேறும் வண்ணம், முன்னவா வெஞ்ஞான்றும் புரிந்தருள வேண்டுமிந்த மூதூர்க் கென் றும், அன்னவா தரம்பெருக நடனபுர மெனும்பெயரு மமைய வேண்டும், மின்னவா வுஞ்சடிலப் பெருந்தகா யருடியென வேண்டி னானால். (உ௫)

---

உஉ. "ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே, நாடுந் திருவடியி லேநகரம்—கூடும், மகர முதரம் வளர்தோள் சிகரம், பகருமுகம் வாமுடி யப் பார்" (உண்மை விளக்கம், 33) என்பதனாலும் இது விளங்கும்.

உ௩. திதிக்க - காக்க. இலாது உதறி. நீற்றுபு - சாம்பராக்கி. சமலம் - மலத்தோடுகூடி யிருக்கை.

உச. உறலோ - அடியேன் பெறுதற்கு உரியதோ. வெருவு- அச்சம்.

உ௫. மின் அவாவும், பெருந்தகாய் - பெருந்தகையையுடையவரே.

சிவபெருமான் சோழன் விருப்பத்தை அருளுதல்.

நாட்டமொரு மூன்றுடைய நம்பிரான் வளவர்பிரா னயந்து தாழ்ந்து, வேட்டவர முழுதுதவி யவ்வாறே நடநவின்று மேவா நின்றான், கோட்டமிலத் தலத்தடைந்தந் நடனதரி சனஞ்செய்யாக் குருட்டு மூடர், வாட்டமிலாப் புண்ணியமாண் பினரெனினும் பயனடையார் மதியான் மிக்கீர். (உகூ)

மந்தார வனஞ்சொன்ன யானநிரோ தனபுரம்பின் வளவற் காக, நந்தார மூலபாகர் நடஞ்செயலா னடனபுர நாமம் பெற்ற, தந்தார மென்மொழியார் பயிலவ்வூ ரனையர்மறை யவர்தம் மோர் பெண், தந்தார மெனமணந்த திப்பியகா தையுமெடுத்துச் சாற்று வோமே. (உஎ)

ஆகத் திருவிருத்தம் - உ௪டு.

# கூ. கயற்கண்ணியார் திருமணப்படலம்.

கதைச் சுருக்கம்.

[சொன்னயான நிரோதனபுரமாகிய இத்தலத்தில் நெறிமுறை தவறாமல் வாழ்ந்திருந்த பல அந்தணர்களுள் மிகச்சிறந்த நல்லொழுக்க முடைய ஓரந்தணருக்கு முற்பிறவிகளிற் செய்த தவப்பயனால் ஒரு புதல்வியார் அவதரித்தார். அவருக்குக் கயற்கண்ணியார் என்னும் திருநாமமிட்டு அவ்வந்தணரும் அவர் பத்தினியாரும் பாராட்டி வளர்த்து வரலாயினர். கயற்கண்ணியார் அவ்வப்பருவத்துக்குரிய விளையாடல்களைப் புரிந்து தம் பெற்றோருவப்ப வளர்ந்தனர். இங்ஙனம் வளர்ந்து குழவிப் பருவம் கடந்து பேதைப்பருவம் அடைந்தார்.

அக் காலத்தில் அவருக்குப் பிரபஞ்சத்தினிடத்தில் விரக்தியும் பதியாகிய சிவபெருமானிடத்தில் விருப்பும் உண்டாயின. அதனால் நல்ல உணவுகளை உண்பதும் ஆபரணங்களையும் பட்டாடைகளையும் அணிதலும் நீங்கிச் சித்திரத்தினைப்போல இருந்தார். அதனையறிந்த பெற்றோர்கள் மிகவருந்தி, "நீ என் அம்மா இப்படி இருக்கின்றாய்?" என்று வினவினார்கள். கயற்கண்ணியார், "நான் மந்தாரவனத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை மணஞ்செய்துகொள்ள நினைத்திருக்கின்றேன். நீவிர் என்னைத்

உஎ. தாரம் - வல்லிசை. அனையரென்றது சிவபெருமானை; எழுவாய். தாரம் என - மனைவியென.

... ADYAR ... LIBRARY, TIRUVANMIYUR, MADRAS-41.

துன்புறுத்தாமற் செல்லுங்கள்" என்றனர். அதனைக் கேட்ட தாய், "மகளே! உனக்கு என்ன வந்துவிட்டது!" என்று புலம்பினுள். தந்தையார் புதல்வியாரை நோக்கி, "யாராலும் அறிதற்கரிய பரம்பொருளாகிய சிவபெருமான் உன்னை வந்து மணப்பாரா? நான் இமவானல்லேன்; ஒரு பிராமணன். உன்னைப் பெற்றவள் மேனையல்லள்; ஒரு பார்ப்பனி. நீ உமாதேவியல்லை. இங்ஙனம் இருப்ப அவர் உன்னைவந்து மணப்பது எங்ஙனம்? மந்தாரவனேசரைப் பணிந்து பிரார்த்திப்பவர்கள் இந்திர பதவி, பிரமபதவி, விஷ்ணுபதவி முதலியவற்றைப் பெறும்படி அருள் புரிக வென்று வேண்டுவதைக் கண்டிருக்கிறேன்; எம்மை மணம்புரிந்து கொள்ளவேண்டுமென்பவர்களை நான் கண்டதில்லை. சித்தி முதலியவற்றை வேண்டி இத்தலத்தில் வந்து பிரார்த்திப்பவர்களையன்றிக் கல்யாணம் செய்து கொண்டருள்க வென்று விரும்பி வந்தவர்களைக் கண்டதில்லை. ஆதலின் மந்தாரவனேசரை, நல்ல கணவனும் நல்ல செல்வமும் நல்ல புதல்வரும் நல்லொழுக்கமும் வேண்டுமென்று வேண்டிக்கொள்; அவற்றை அவர் அருள்புரிவார்" என்றார். தம்மைப்பெற்ற தந்தையார் கூறியவற்றைக் கேட்ட கயற்கண்ணியார் அவரைநோக்கி, "பயனில்லாத முதுமையை அடைந்தீர்! மந்தாரவனேசர் அன்பர்களுடைய அன்பின் வழியே வருவார்; இதனை அறியாமல் மயக்கவறிவால் இங்ஙனம் உரைத்தீர்" என்று சொல்லத் தந்தையார், "இனி யாம் சொல்வதென்!" என்று நீங்கினுர்.

'பிறகு தாய் வந்து, சிவபெருமானுடைய முரண்பட்ட கோலத்தையும் அருமையையும் கூற அப்புதல்வியார், "அறிவற்றீர்! இனி என் நிலைமையை அறியாமல் பேசுதலை ஒழிக" என்று சினந்து கூற அவளும் அடங்கினுள். இங்ஙனமே சுற்றத்தார் தமக்குத் தோற்றியவற்றைச் சொல்லிப் பயனின்றி நீங்கினர்.

கயற்கண்ணியார் சிவபிரானை நினைந்து, "எம் இறையவரே! நீர் முன்பு மதுரையரசன் மகளாகிய மீனுட்சியம்மையாரையும் வலையர் குலத்துதித்த பெண்ணையும் மலைமகளையும் மணந்ததுபோல என்னையும் வந்து மணம்செய்து என் துன்பத்தை அகற்றியருளவேண்டும்" என்று வேண்டினுர். பின்பு தம்கையில்வந்து வீற்றிருந்த கிளியையும் அன்னம் நாரை முதலியவற்றையும் விளித்துச் சிவபிரான்பாலுள்ள அன்புமிகுதியால் அவரது புகழ்களையும் பிறவற்றையும் எடுத்துக்கூறி உருகினுர்; "மந்தாரவனேசர் திருவருளைப் பெறுவது எப்போது!" என்று ஏசற்றுக்கிடந்தார்.

இங்ஙனம் இருத்தலையுணர்ந்த சிவபெருமான் ஆற்றூருக்கு எழுந்தருளிக் கயற்கண்ணியாரை மணம்புரியத் திருவுளங்கொண்டருளினுர்; தம்

கருத்தை நந்திகணத்தார் மூலமாக எல்லாத் தேவர்களுக்கும் அறிவித்ததோடு கயற்கண்ணியாருடைய தந்தையார் முதலியவர்க்கும் சோழேந்திரனுக்கும் அறிவிக்கச்செய்தனர். அதனைக் கேட்ட அந்தணர் மிக வியந்து யாவருக்கும் இச்செய்தியைத் தெரிவித்தனர். பிறகு தம் மனைவியாரோடு, "இப்பெண்மணி தெய்வமேயன்றி மானிடமகளல்லள்; நம் மகளென்று நினைத்தல் குற்றம்" என்று சொல்லித் தம் புதல்வியர்பாற் சென்று, "நாங்கள் தெரியாமற்செய்த குற்றமனைத்தையும் பொறுத்தருளவேண்டும்" என்று முகமன் கூறித் திருமணத்துக்குரியவற்றைச் செய்யலானார். சோழேந்திரனென்னும் மன்னனும் நகரை அலங்கரித்தல் முதலியவற்றைச் செய்வித்தான்.

சிவபெருமான் ஒரு பிரமசாரியுருவம் பூண்டு தேவர் புடைசூழத் தைமாதத்தில் வெள்ளிக்கிழமையன்று ஆற்றூர்க்கு எழுந்தருளிக் கயற்கண்ணியாரை மணம்புரிந்தருளினார். திருமணம் நிகழ்ந்தபின்பு சிவபிரான் கயற்கண்ணியாரோடு திருக்கோயிலுக்கு எழுந்தருளினார். அங்கே கயற்கண்ணியார் ஸ்ரீ அஞ்சனாட்சியம்மையாரை வணங்கி அருள் பெற்றனர். அன்று முதல் அஞ்சனக்கண்ணியம்மைக்குரிய சிறப்பெல்லாம் கயற்கண்ணியம்மைக்கும் நிகழலாயின.]

---

### மறையவர் இயல்பு.

(தரவுகொச்சகக் கலிப்பா)

ஏனமுணா ராமலர்த்தா ளிறைவர்மகிழ் தருசொன்ன
யானநிரோ தனபுரத்தி லெங்குமிட மறத்துவன்றும்
ஊனமிலா வெண்ணீற்றி னுருத்திராக் கத்தினபி
மானமிகு வைதிகமா மறையவர்தங் குடிகள்பல. (௧)

நலம்பொலிசிற் றரைமுஞ்சி நாண்பொலிய நற்றூனை
அலம்பொலியுஞ் செருக்கொருபா லாய்த்தூங்க வங்கையினிற்
புலம்பொலியும் பலாசேந்திப் பூணூன்மான் றோன்முடிந்து
வலம்பொலியா ரணமோது மறைச்சிறார் கிடையெங்கும். (௨)

---

௯. கயற்கண்ணியார் திருமணப் படலம்.

௧. குடிகள் பல துவன்றும்; துவன்றும் - நிறைந்திருக்கும்.

௨. முஞ்சிநாண் - தருப்பையாலாகிய நாண்கயிறு. அலம் - நிறைவு. செருக்கு - செருகியிருப்பது. கிடை - சாலை.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

புண்ணியநீர் மூழ்குபுபின் போக்குகோ வணத்தோடு
நண்ணியவீ ரப்புடைவை நன்றுசூழ் தருமருங்கிற்
கண்ணியபொற் குடமேந்திக் கடிமனைபுக் கதிதியர்கள்
உண்ணியவின் னமுதாக்கு மொண்மடவார் குழாமெங்கும். (௩)

சடைகிரமம் பதமுதலாச் சாற்றுபல வுங்கலக்க
உடையமறை முழுதுணர்ந்தா ரோங்குநியா யமுந்தெரிந்தோர்
அடையிதிகா சங்களுமே லாயபுரா ணங்களுமோர்ந்
திடையறவி லொழுக்கமைந்தா ரெண்ணில்பல வேதியரும். (௪)

தேற்றமிகு மம்மறையோர் செய்யாத யாகமிலை
மாற்றரிய வம்மகத்து வாராத தேவரிலை
ஆற்றவரு வானவரு ளகமகிழா தவரில்லை
போற்றமகிழ்ந் தவருளவர்ப் புகழாத பேருமிலை. (௫)

காரணமே னோக்குதலிற் காரியமு மற்றென்னப்
பாரணவு மந்நகரப் பார்ப்பார்செய் மகத்தூமம்
ஏரணவ மேனோக்கி யெழுவதிற்றோய் தலினன்றோ
சீரணவு வானவர்க டிருந்தநீட் டித்துறைதல். (௬)

விரிமகத்தீத் தொழிலன்றி வேறுதீத் தொழிலிலராங்
குரியபசுக் கொலையலதோர் கொலையுமுளூற் றுருலகம்
பரியுமறை மொழியன்றிப் பரியுமறை மொழிபகரார்
தெரிபிரம வுணர்வன்றித் திரிபிரம வுணர்வடையார். (௭)

வருபுனலாற் புறச்சுசியும் வாய்மையா லகச்சுசியும்
பொருவறக்கொண் டதற்கேற்பப் பொங்குபெருஞ் சுசிவளர்த்து

---

௩. உண்ணிய - உண்ண.

௪. சடை, கிரமம், பதமென்பன வேதம் ஓதும் முறைகள்.

௫. மகம் - யாகம்.

௬. காரணம்: அக்கினி. காரியம்: புகை. அக்கினி மேனோக்கும் இயல்புடையது. அதில் - அப்புகையில்.

௭. தீத்தொழில் - அக்கினி காரியம், கெட்ட தொழில். மறை மொழி - வேதமந்திரம், வஞ்சகமொழி. பிரமவுணர்வு - பிரமஞானம், மயக்கவுணர்ச்சி.

௮. சுசி - தூய்மை, "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை, வாய்மையாற் காணப் படும்" (குறள், 298.) சுசி வளர்த்து - நெருப்பை வளர்த்து. சுசிக்கைவிமலன் - நெருப்பைத் திருக்கரத்திலேந்திய சிவ பெருமான்.

வெருவிலத னிடைச்சுசிக்கை விமலனைக்கண் டிறைஞ்சுதலால்
ஒருபிறப்பு மிலராவ ரிருபிறப்பு முடையாரே. (௮)

இடுகுறிகா ரணமிரண்டு மேற்புறவந் தணரெனும்பேர்
நெடுமறைதேர் தமக்கேயாய் நிலவநில வுவர்நாளும்
கடுவமர்கந் தரப்பெருமான் காமர்திரு வுருவன்றிப்
படுபிறவா னவருருவம் பாராரப் பார்ப்பாரே. (௯)

வழுவிலொரு பிறப்பகத்தே யிருபிறப்பின் மாண்படைந்து
செழுவியமுத் தழல்வளர்த்துத் திருந்துநான் மறையுணர்ந்து
பழுதமையைம் பொறியவித்துப் பகருமறு பகையுமொழிந்
தெழுபிறப்பு மிலராகி யெண்குணச்செல் வனையடைவார். (௧0)

## கயற்கண்ணியார் திருவவதாரம்.

அன்னமறை யவருளுய ரதிசீல ரொருமறையோர்
பன்னரிய பெருங்குணத்துப் பத்தினியா ரொடும்வாழ்நாள்
முன்னரருந் தவவலியான் முதல்வரருள் செயவவர்பாற்
பொன்னனைய ரென்னவொரு புத்திரியா ரவதரித்தார். (௧௧)

## திருநாமம் இடல்.

மயற்கண்ணி யார்படினு மகன்றுபடார் மருவினவர்
செயற்கண்ணி யார்மகிழுஞ் செல்வியார்க் கம்புயநல்
இயற்கண்ணி யார்மகிழ்வி னியற்றுவவெ லாமியற்றிக்
கயற்கண்ணி யாரென்றோர் திருநாமங் கட்டுரைத்தார். (௧௨)

## திருக்காப்பணிதல்.

தேயாவொண் மழுப்படைக்கைத் தேவதே வன்றிரடோள்
தோயாவெப் புவனத்துந் தொக்கமர்பல் லுயிர்கட்கும்
தாயாகுந் தகையாரைத் தம்மகளா ரெனக்கருதி
மாயாவண் டிருநீற்றுக் காப்பணிந்தார் மாமறையோர். (௧௩)

---

௯. கடு - விடம்.

௧0. இருபிறப்பு - உபநயனத்திற்கு முன்னுள்ள பிறப்பும் அதன் பின் உள்ள பிறப்பும். முத்தீ - காருகபத்தியம் ஆகவனீயம் தட்சிணாக்கினி. ௧௧. பொன் - திருமகள்.

௧௨. மயற்கண்ணி - மயக்கமாகிய வலையில். அகன்றுபடாராய் மருவின். அண்ணியார் - நெருங்கியவர்; சிவபெருமான். அம்புய நல் இயற்கண்ணியார் - தாமரையாலாகிய மாலையையுடைய அந்தணர்.

௧௩. தோயா - தோய்ந்து.

### செங்கீரையாடுதல்.

கந்தையார் கரடமதக் காய்சினவெங் களிறுரித்த
முந்தையா ரலதுபிறர் முகநோக்கா துணர்த்தலெனத்
தந்தையார் பயந்தெடுத்த தாயார்முன் மகிழ்சிறக்குஞ்
சிந்தையார் தலையசைத்துச் செங்கீரை யாடுவார். (கச)

### தாலாட்டுதல்.

மையலார் மனத்தொளிக்கு மாதேவர் தமைச்சிதம்பு
செய்யலார் மனத்தொட்டில் சேர்த்துவக்க வல்லாரை
மொய்யலார் மணியிழைத்த முழுத்தொட்டி லிடைச்சேர்த்துத்
தையலார் புடைநின்று தாலோதா லெனவுவப்பார். (கரு)

### சப்பாணி கொட்டுதல்.

ஆக்கன்முத லைந்தொழிலா லாருயிர்கட் கறியாமை
நீக்கல்புரி பெருமானார் நிலவநடம் புரிபோது
போக்கல்புரி யாதருகு பொலிதரநின் றிசைதாளம்
தாக்கல்பயி லுதல்பொருவச் சப்பாணி கொட்டுவார். (கசா)

### முத்தந் தருதல்.

அவிமுத்தம் யாம்வேண்டே மமைந்தபல பொருளிடத்தாம்
குவிமுத்தங் களும்வேண்டேங் கோகனகத் தவிசொருவிச்
சவிமுத்த மெனவெமது தடமனைபுக் காயுனது
செவிமுத்தந் தருகவெனச் செவ்வாய்முத் தந்தருவார். (கஎ)

### வருகை.

பூமேவு பொற்கொடியே பொன்மேவு பூங்கொம்பே
தேமேவு தெள்ளமுதே சீர்மேவு பைங்கிளியே
காமேவு கருங்குயிலே கார்மேவு மாமயிலே
மாமேவு கண்மணியே வருகவரு கெனவருவார். (கஅ)

---

கச. கந்தை ஆர் - கட்டுத்தறியைப் பொருந்திய. முந்தையார் - முதல்வர்; சிவபெருமான்.

கரு. சிதம்பு - தீமை. செய்யலார் - செய்யாதவராகி.

கசா. "மதமத்தர் சுத்தநிர்த்த, வட்டத்தினுக்கிசைய வொற்றிக் கனத்ததன வட்டத்தை யொத்திட்டதோர், தாளவட் டங்கொட்டு கைப் பாணியொப்பவொரு சப்பாணி கொட்டியருளே" மீனாட்சி. பிள்ளைத். சப்பாணிப். 1.

கஎ. அவிமுத்தம் - காசி. சவி முத்தம் - ஒளிபொருந்திய பிரியமான இடம். செவ்வி முத்தம்.

## அம்புலியழைத்தல்.

நீடவா வொருவர்மே னிரப்புநா ளவர்பிறரைக்
கூடவா தரித்தன்முதற் கோள்பலவு மெளிதுணர்வான்
நாடவான் வருமதியை நன்கழைத்து நட்புறல்போல்
ஆடவா வம்புலியே யம்புலியே யென்றழைப்பார். (௧௯)

## அம்மனையாடல்.

அம்மனையா தவமாற்கோர் கூறுமகி லமுமீன்ற
அம்மனையாட் கொருகூறு மன்பினளித் தினிதுவந்த
அம்மனையா தரித்தடைவா ரம்மநையா வகையமர்ந்தே
அம்மனையா டுவர்தவஞ்செய் தீன்றார்தம் மகங்களிப்ப. (௨௦)

## நீராடல்.

சந்தமணி வளைகலிப்பத் தண்டைசிலம் புகளொலிப்பப்
பந்தமுறு காஞ்சிசிறு பட்டுடைமேற் கிடந்தொலிப்பக்
கந்தமலர்க் குழற்றுயர் கைக்கமல மலர்பற்றி
அந்தளிர்ச்சிற் றடிகள்பெயர்த் தருந்துறைநீ ராடுவார். (௨௧)

## ஊசலாடல்.

தண்ணியவா வியின்மலர்ச்செந் தாமரைப்பூ மிசையமர்கை
நண்ணியவெள் ளோதிமம்போ னற்றரளப் பணிபூண்டு
மண்ணியமா மணிப்பூணார் வாழ்த்தெடுப்ப வினிதேறிப்
புண்ணியப்பூங் கொம்பன்னார் பொன்னூச லாடுவார். (௨௨)

## கயற்கண்ணியார் விரக்தியுற்றிருத்தல்.

**(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)**

பிள்ளைப் பருவமிவ் வாறு நிகழ்தரு பேதைப் பருவம்
வள்ளைக் குழைச்செவி யார்க்கு வந்து மருவிய காலை

---

௧௯. ஒருவர்மேல் அவாவை நிரப்பும்நாளில்; ஒருவரென்றதும், அவரென்றதும் சிவபெருமானை. கோள் - கொள்கை.

௨௦. அம் மனை யாதவ மாற்கு-நீரை இருப்பிடமாக வுடைய யாதவனாகிய திருமாலுக்கு. அம்மனையாள் - தாய். அ மன்னை ஆதரித்து; மன் - சிவபெருமான். அம்ம : அசை.

௨௧. கலிப்ப - முழங்க. காஞ்சி - ஒருவகை மேகலை.

௨௨. மோலி - முடி. தொள்ளை - தொல்லை. பவஞ்சவிரத்தி - உலகின்மேலுள்ள வெறுப்பு; பவஞ்சம் - பிரபஞ்சம்.

வெள்ளைப் பிறைச்சடை மோலி வித்தகர் பேரரு ளாலே
தொள்ளைப் பவஞ்ச விரத்தி தோன்றிய தாலள வற்றே. (உ௩)

பசுக்கள் பசுக்கட் புணரும் பண்புமுக் காலத்து மின்று
பசுக்கள் பதியைப் புணரும் பண்புள தாலெந்த ஞான்றும்
பசுக்கள் புணரும் பதியைப் பசுபதி யென்பவெந் நூலும்
பசுக்கள் பதியரு ளூற்றல் வேறல வென்றும் பகர்வார். (உ௪)

இருவினைக் கோட்பட் டுடம்பே யானெனன் றிருளின் முழுகி
ஒருவிய வத்தை களைந்து மாலும் பசுவைப் புணரேன்
மருவியு ரைத்த வனைத்து மோரங்கொளி யாயெங்கு மாய
பொருவில் பதியைப் புணர்வேன் போற்று மவனரு ளாலே. ()

என்றுது ணிந்த கருத்தி னேங்கெழிற் பூங்கொம்ப ரன்னார்
நன்றுண லென்பது வேண்டார் நக்க மணிப்பணி பூணார்
ஒன்றுபட் டாதியு டாரா யோவிய மான விருந்தார்
அன்றுப யந்தவர் மற்றோர் நோக்கி மயங்கி யழைவார். (உ௬)

## பெற்றோர் வருந்திக் கூறல்.

பித்த முதிர்ந்தனள் கொல்லோ பேய்க்கோட் பட்டனள் கொல்லோ
சித்தந் திரிந்தனள் கொல்லோ திருக்கே றுண்டனள் கொல்லோ
மத்த மடைந்தனள் கொல்லோ மாற்றமொன் றும்புக லாளென்
றொத்தன வொத்தன சொல்வா ரொன்றுந் தெரிந்தில மென்பார். ()

பயந்தவர் பாங்க ரடுத்துப் பாங்கியர் சூழ விருந்தார்
நயந்த பசுங்கிளி பேசு நறுமலர் வல்லி மலரும்
வியந்த கெடவரற் காய பல்கல மும்மிங்கு மேவும்
அயர்ந்து வருந்திய தென்னே யாடகப் பூங்கொம்ப ரன்னாய். (உ௮)

---

உரு. அவத்தைகளைக் களைந்து. மாலும் - மயங்கும். உரைத்த அனைத்தையும் ஒருவி.

உ௬. பட்டு ஆதி. உடாராய் - உடுத்தலிலராய். பயந்தவர் - பெற்றவர்.

உஎ. திருக்கேறு - கண்ணேறு; திருக்கு - கண். ஒத்தன ஒத்தனசொல்வார்: "மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினை வில், ஒத்தன வொத்தன சொல்லி" திருவா. திருச்சதகம், 3.

உ௮. பேசும், மலரும்: முற்று. கெடவரல் - விளையாட்டு.

### கயற்கண்ணியார் கடிந்துரைத்தல்.

என்று வினவுறு மேல்வை யீன்றவர் தம்முக நோக்கி
ஒன்றும் வினவிலிர் நீயி ரும்பரெ லாந்தொழ நின்று
மன்றுண டிக்குமந் தார வனத்து முதலை மணப்பான்
இன்று கருதி யிருப்பே னேகுமி னீர்புறத் தென்றார். (உகூ)

வாய்ந்த குலக்கொடி சொற்ற மாற்றஞ் செவியிற் புகலும்
ஆய்ந்த மலர்க்குழற் றாய ரங்கை நெரித்திது வென்னே
ஏய்ந்த துனக்கு மகளே யென்று வருந்தி யிருந்தார்
தோய்ந்த புகழ்த்தந்தை யார்தா நகைத்திது சொற்றிட லுற்றார். (௩0)

### தந்தையார் கூறல்.

முத்தொழி லாளரை யீவார் முத்தொழி லாளரு மாவார்
முத்தொழி லாளர்க்கு மெட்டார் மூலமு மீறுங் கடந்தார்
சித்தர்மந் தார வனத்து மேவிய செல்வர்கொ லுன்னைச்
சித்த முவந்து மணப்பார் செல்வக் குலமலர்க் கொம்பே. (௩க)

வேதமும் வேத முடிவு மேவு பொறியும் புலனும்
போதமும் போத நிகழுப் பொற்பிற் பொலிபர விந்து
நாதமுங் காணரி தாய நம்பர்மந் தார வனேசர்
ஆதரத் துன்னை மணப்பா ரற்புத மற்புத மின்னே. (௩உ)

கால மனைத்துங் கடந்தார் கற்பனை யாதொன்று மில்லார்
ஓல மிடுமறைக் கெட்டா ருள்ளொளி யாய வொருவர்
ஞாலம் புகழ்ந்துகொண் டாடி நாடுமந் தார வனேசர்
சால வுவந்து மணப்பார் சாற்றிய தென்னிது பேதாய். (௩௩)

பாதல மேழுங் கடந்து பாதார விந்தம் படரும்
மீதல மேழுங் கடந்து வெண்பிறை மாமுடி நீளும்
பூதலஞ் சூழ்ந்துகொண் டாடிப் புகழுமந் தார வனேசர்
மாதர் மடப்பிடி நல்லாய் வந்து நினையு மணப்பார். (௩ச)

---

௩க. முத்தொழிலாளர் - படைத்தல் முதலிய தொழில்களை யுடைய மூவர். மணப்பார் : குறிப்புமொழி ; மணவாரென்பது கருத்து.

௩உ. ஆதரம் - அன்பு.

௩ச. "பாதமிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற், சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை", "பாதாள மேழி னுங்கீழ் சொற்கழிவு பாதமலர், போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே" திருவா. குயிற்பத்து, திருவெம்பாவை.

கட்டு முடைதிசை யெட்டாங் காமரு தோள்களு மெட்டாம்
சட்ட வுருவமு மெட்டாஞ் சாற்று குணங்களு மெட்டாம்
மட்டு விரியுமந் தார வனத்து மகிழ்ந்துறை யீசர்
கட்டு மலர்க்குழற் கோதாய் காதலின் வந்து மணப்பார். (௩௫)

ஐந்தொழின் மூல மெனவே யறையுமோ ரொன்பா னுருவும்
மைந்து பெறுமெட் டுருவு மற்றுமோ ராறு முடையார்
நந்துமந் தார வனத்து நாளு மகிழ்ந்தமர் நாதர்
கந்த மலர்க்குழற் கோதாய் காதலின் வந்து மணப்பார். (௩௬)

மறையவன் யான்மலை மன்ன னல்லன் மகிழ்ந்துநிற் பெற்றாள்
நிறைகுணப் பார்ப்பனி கண்டாய் நேரிழை மேனையு மல்லள்
உறையொரு நீயுமை யல்லை யோங்குமந் தார வனேசர்
கறைகெழு வேற்கருங் கண்ணாய் காதலின் வந்து மணப்பார். ()

ஓங்குமந் தார வனத்து ளும்பர் பிரான்றிரு முன்பு
தாங்குந் திருநெடு மாலாய்த் தாமரை மேலுறை வாணாய்
வாங்குபொன் னுடை வேந்தாய் வரவருள் செய்யென் றடைவார்
ஈங்கு மணம்புரி யெம்மை யென்றடை வார்களைக் காணேன். (௩௮)

சித்தியை வேண்டியு மோவாச் சீர்த்தியை வேண்டியுந் தீராப்
புத்தியை வேண்டியு மேலாம் போதத்தை வேண்டியு மின்ப
முத்தியை வேண்டியுஞ் செல்வார் மூர்த்திமந் தார வனத்தில்
ஒத்தியை மன்றல்செய் வாயென் றுரைத்தடை வார்களைக் காணேன்.

நல்ல கொழுநனும் வேண்டு நல்ல திருவமும் வேண்டும்
நல்ல புதல்வரும் வேண்டு நல்லொழுக் கம்வேண்டு மென்று
நல்லமந் தார வனத்து நல்லவ ரைவேண்டிக் கோடி
நல்ல முவந்தவந் நாதர் நல்லன வென்றருள் வாரே. (௪0)

---

௩௫. "எட்டுக் கொலாமவ ரீறில் பெருங்குணம், எட்டுக் கொலா மவர் சூடு மினமலர், எட்டுக் கொலாமவர் தோளிணை யாவன, எட்டுக் கொலாந்திசை யாக்கினர் தாமே" தே. திருநா.

௩௬. ஒன்பான் உரு - நவந்தருபேதம். எட்டு உரு - அட்ட மூர்த்தம். ஆறு - அத்துவாக்கள் ஆறு.

௩௭. மலைமன்னன் - இமவான். மேனை - இமவான் மனைவி.

௩௯. சீர்த்தி - மிக்கபுகழ். புத்தி - போகம். போதம் - அறிவு.

௪0. திருவம் - செல்வம். நல்லம் - ஒருதலம்.

## கயற்கண்ணியார் கூறுதல்.

(ஷை வேறு.)

ஈன்ற தந்தை யுரைத்தமொழி யெல்லாங் கேட்ட கயற்கண்ணாள்
ஆன்ற வுணர்வீர் பயனின்மூப் படைந்தீ ரன்ப ரன்பின்வழி
தோன்ற வருவார் மந்தார வனத்து வாழுஞ் சுந்தரர்நீர்
மான்ற வுணர்வா லிதுபகர்ந்தீர் மற்றும் பகரீ ரெனமொழிந்தார். (சக)

## தாய் அறிவுறுத்தல்.

என்னே யினியாம் புகலுதலென் றேங்கித் தந்தை யடங்குதலும், முன்னே மொழியா மையின்வருந்து தாய்பாங் கடைந்து மொழியுமிது, பொன்னே குலக்கோ மளக்கொழுந்தே பூத்த கொடியே பூங்கிளியே, மின்னே யென்ன மால்கொண்டாய் வீணா சையினெனன் னையும்வெறுத்தாய். (சஉ)

கொள்ள வரியா ளொருதிங்கட் குடையோ னினுங்கட் டழகுடையான், விள்ள வளவாப் பெருந்திருவான் வேண்டுங் கலமா டைகளளிப்பான், தள்ள முடியா தவனுரிமை சற்று முளங்கொண் டிலைபேதாய், கள்ள மலர்மந் தாரவனக் கடவுட் புணர்வா னுளங் கொண்டாய். (சங)

சாந்த நீறு வெள்ளெலும்புஞ் சர்ப்பக் குழுவுந் தலைத்தொடையும்
ஏந்த வரிய கலமுணவு நஞ்ச மரையின் யாத்தவுடை
போந்த புலிதந் திடுதோன்மேற் போர்க்கும் போர்வை யானைத்தோல்
சேந்த விழியொன் றதுமுழுதுந் தீக்குஞ் சிறிது சினமுறினும். ()

அன்றிச் சிறிது நகைத்தாலு மந்தோ வுலக முழுதழியும்
கன்றிப் புவியா வையுமிடந்து கடந்து முயன்ற கருந்துழாய்ப்
பன்றிக் கரிய பாதமலர் படர்நம் முன்றிற் படுங்கொல்லோ
வென்றிப் பெருமந் தாரவன விமலற் புணரு நசைவிடுக. (சரு)

இன்னு முரைப்ப தொன்றுண்டா லிமய முதவு மகளொருபால், மன்னு மொருஞான் றம்பிரியாண் மற்று மொருபெண் முடிய

---

சக. பயனின் மூப்பு: "பயனின் மூப்பிற் பல்சான் றீரே" (புறநா. ௧௯௫ : 3.) சக. மான்ற - மயங்கிய.

சங. திங்கட்குடையோன் - மன்மதன். கள்ள - தேனையுடைய.

சச. கலம் - ஆபரணம். அரை - இடை. சேந்த - சிவந்த.

சரு. நசை - விருப்பம்.

மர்வாள், துன்னு மலர்மந் தாரவனச் சோதி தனைவேட் டிடமதித்
தல், கொன்னும் பெரும்பே தைமையுரைத்தேன் குதலை யஞ்சொற்
கோற்றொடியே. (சசு)

பரவு வான்றோய் கோட்டுமதுப் பங்க ரவாவி வருந்துதலும்
விரவு வானஞ் செலுமதியை வேண்டி மழவு வருந்துதலும்
கரவு தவிர்மந் தாரவனக் கடவுட் பெருமான் றோள்புணர
உரவுதவிர்நீ வருந்துதலு மொக்கு மொளிர்கோ மளக்கொழுந்தே. ()

தக்க முயன்ற போதுமது தான்முற் றுதலு மரிதாகும்
மிக்க முயன்று மனவருத்த மேவ லடுக்கு மோபெண்ணே
பொக்க மகன்ற தந்தைமொழி போற்று திகந்தா யாயினுமுட்
டுக்க மொழிவா யென்மொழியைப் போற்றிக் கோடி சுடர்த்தொடியே.

ஈன்றார் கருத்தின் வழிச்செலவே யியம்பு நினக்கல் லாதெவனுண்
டான்றார் மதிக்குங் கனவகத்து மரியர் திருமந் தாரவனச்
சான்று ரொளிய ராய்நினக்குத் தார்சூட் டிடுவான் வருவர்கொலோ
தோன்று ருணர்தி மடமகளே யென்று தாயர் சொற்றிடலும். (சகூ)

## கயற்கண்ணியார் கூறுதல்.

தீரா முனிவு தலைக்கொண்டு தீரா மடமை யீரென்னை, ஓரா துரைத்தல் பயனுகா தொழிக வெனத்தா யருமகன்றார், ஆரா வன்பிற் றமராளு ரமைந்த பலவு மெடுத்தோதிப், பேரா நாணந் தலைக்கொண்டார் தனித்தா ரொருபெண் ணமுதனையார். (ருo)

## கயற்கண்ணியார் சிவபிரானை வேண்டல்.

(ஷை வேறு)

ஓங்குமந் தார வனத்துமேவு முத்தம னேயிஃ தொன்றுகேணீ
வாங்கு மதிலுயர்ந் தோங்குகூடன் மன்னன் மகளை மணம்புரிந்தாய்

---

சஎ. கோட்டுமது - கொம்புத்தேனை. பங்கர் - முடவர். மழவு - குழந்தை; "வானுந்து மாமதி வேண்டி யழுமழப் போலும்", "விசும்புக் குற்ற, திங்கட் கழுமழப் போன்று" திருச்சிற். 147, 198.

சஅ. தக்க - தக்கனவாகிய முயற்சிகளால். மிக்க - மிக்கவை. பொக்கம் - வஞ்சகம்.

சகூ. கனவகத்து மரியர் : சிவனென்னும் துணையாய் நின்றது.

ருo. முனிவு - சினம். பேரா நாணம் - நீங்காத நாணம்.

ருக. மன்னன் - மலையத்துவச பாண்டியனுடைய. பாங்கு - அழகு. பையுள் - துன்பம்.

ஈங்கொரு பூசுரன் பெற்றபெண்யா னென்பது நீயறி யாததன்றே பாங்கு மலியவென் றோளின்மாலை சூட்டியென் பையு ளகற்றுவாயே.

திருந்துமந் தார வனத்துமேவுஞ் சிவபெரு மானிஃ தொன்று கேணீ, பொருந்து கலவர் குலத்துதித்த பூவையை யும்மண மாலையிட்டாய், அருந்தவர் சங்கர னென்பருன்னை யன்ன பெயர்ப் பொருண் மாறுறுமே, வருந்துமென் றோளணி மாலைசூட்டி மருவிய பையு ளகற்றுவாயே. (ருஉ)

நாடுமந் தாரவ னத்துமேவு நாயக னேயிஃ தொன்றுகேணீ, மாடு மிசையு முகிலுலாவு மலைக்கு மகளை மணம்புணர்ந்தாய், ஆடுநின் றாளென்றும் போற்றிசெய்வே னன்புக் கிரங்கி யெழுந்தருளிச், சூடுநின் மாலையென் றோளிற்சூட்டித் தொக்கவென் பையு ளகற்றுவாயே. (ருங)

ஒருகிளிவந்து கயற்கண்ணியாரின் கரத்தில் அமர்தல்.

யாவரும் போற்றித் துதிக்குஞ் சொன்ன யான நிரோத புரத் தளிக்கண், மேவி யமர்ந்தரு டம்பிரானை வெள்விடை மேலிவ ரெம்பிரானைப், பூவமை கூந்தற் கயற்கணல்லார் பொற்பமர் மாலிகை சூட்டு கென்றே, ஓவற விங்ஙனம் போற்றும்போதி லொண்கிளி யங்கை வந் துற்றதன்றே. (ருச)

போற்றி வளர்த்த பசியகிள்ளை பொற்ப வெழுந்து பறந்து வந்து, கோற்றொடி யங்கை யமர்தலோடுங் கொண்ட வுவப்பிற் கயற்கணல்லார், ஏற்ற மிகுமலை மங்கைக்கபோ லென்கையு மேவிய தென்னையென்று, சாற்றி யதன்சிறை தைவந்தொன்று சாற்றுதுங் கேளெனச் சாற்றலுற்றார். (ருரு)

---

ருஉ. சிவபெருமான் : விளி. கலவர் - வலைஞர் ; கப்பற்கு உரியவர் என்றபடி. மாலைசூட்டியதை, திருவிளையாடற் புராணத்துள்ள வலைவீசிய படலத்தால் அறியலாகும். சங்கரன் - சுகத்தைக் கொடுப்பவன்.

ருங. மாடும் மிசையும் - பக்கத்தும் மேலும். மலை - இமயமலை. மகள் : பார்வதி தேவியார்.

ருச. தளி - கோயில். ஓவற - ஒழிதல் நீங்க.

ருரு. உமாதேவியின் திருக்கரத்தில் கிளி உண்டென்பர். தைவந்து - தடவி.

## கயற்கண்ணியார் கிளியைநோக்கிக் கூறுதல்.

(கலிவிருத்தம்)

ஆலால மயின்றான்முடி யாற்றான்பிறைக் கீற்றான்
நாலாரணப் பரியான்மன்று ணடத்தானுமை யிடத்தான்
மாலார்தொழு மந்தார வனத்தான்பத்த சனத்தான்
மேலானருட் பாலனெனை விள்ளாய்சிறைக் கிள்ளாய். (ருசு)

உடையான்மழுப படையான்களி றுரித்தான்புனல் பரித்தான்
சடையானத ளிடையான்வனச் சரத்தான்சிதம் பரத்தான்
அடையாருமந் தாரப்பொழி லாள்வான்வினை கீள்வான்
விடையானந்த மடையானென்று விள்ளாய்சிறைக் கிள்ளாய். (ருஎ)

ஒளியாயுல கெங்கும்பொலி யொருத்தன்பெருந் திருத்தன்
தெளியாதவ ருளத்தேயென் றுஞ்சேரான்புவித் தேரான்
அளியார்பொழின் மந்தாரத்தி னடியான்கரத் துடியான்
வெளியார்தர நடிப்பானென்று விள்ளாய்சிறைக் கிள்ளாய். (ருஅ)

(ஷை வேறு)

இன்னணங் கிள்ளையை யெய்த நோக்குபு
தன்னமர் காதலிற் சாற்று மாதரார்
கன்னலு மமுதமுங் கைப்ப வாய்மலர்ந்
தன்னமுற் பறவைகட் கறைகின் றாரரோ. (ருகூ)

## கயற்கண்ணியார் பிற பறவைகளை நோக்கிக் கூறல்.

(தரவு கொச்சகக் கலிப்பா)

நீர்பாயுங் கொழுவுண்டு நேர்செல்லு மோதிமங்காள்
கார்பாயுங் கந்தரத்தான் கண்ணுதலான் காபாலி

---

ருசு. ஆரணப்பரி - வேதமாகிய குதிரை. அருட்பாலான் - அருளாகிய சக்தியை ஒருபங்கில் உடையவன்.

ருஎ. பரித்தான் - தாங்கினான். அதள் - தோல். வனச்சரத்தான் - திருத்துழாய்மாலையை அணிந்த திருமாலை அம்பாக உடையவர்; வனம் - முல்லைநிலமெனினுமாம். அடை - இலை. கீள்வான் - கிழித்துவிடுபவன். அந்தம் அடையான் - முடிவை அடையாதவன்.

ருஅ. திருத்தன் - தூயவன். அளி - வண்டு. துடி - உடுக்கை. வெளி - ஆகாசம்.

ருகூ. கன்னல் - கரும்பு.

சுO. கொழு - கொழுமீனை. ஓதிமம் - அன்னம். பருவரல் - துன்பம்.

ஏர்பாயுஞ் செஞ்சடையான் யானநிரோ தனபுரத்தான்
பார்பாயும் விடையாற்கென் பருவரல்சற் றுரையீரே. (௬0)

பெட்டினிய விரையுண்டு பெடையொடுசே லோதிமங்காள்
கட்டுசடைப் பெருமான்விண் ணுலகளித்த கறைக்கண்டன்
மட்டுவிரி மந்தார மன்னுபெருங் கோயிலமர்
எட்டுருவ முடையாற்கெ னெண்ணஞ்சற் றுரையீரே. (௬௧)

ஒண்டுவி மடநாரா யும்பரெலாஞ் சாம்புவது
கண்டோத நஞ்சுண்டான் கால்கா லன்பொறிப்பல்
வண்டூது மந்தார வனங்கோயில் கொண்டருளும்
எண்டோண்முக் கண்ணனுக்கெ னெண்ணமெலா முரையாயே. (௬௨)

பெட்டார்வத் திரையுண்டு பெடையொடுசென் மடநாராய்
முட்டாத பேரருளான் மூவாத முழுமுதல்வன்
மட்டாரு மந்தார வனக்கோயில் கொண்டுமரிக்
கெட்டாத பெருமாற்கெ னெண்ணமெலா முரைபபாய்ய. (௬௩)

திருந்துபெடை யோடுவக்குஞ் செங்கால்வெண் மடநாராய்
கருந்துழாய்க் கண்ணியனுங் காணாத சேவடியான்
மருந்தனையான் மந்தார வனங்கோயில் கொண்டருளி
இருந்தருளும் பெருமாற்கெ னெண்ணமெலா முரைப்பாயே. (௬௪)

## கயற்கண்ணியார் சிவபிரானை எண்ணி ஏங்குதல்.

(கலிவிருத்தம்)

அன்ன மாதி யனைத்தையு நோக்கியே
இன்ன வாறியம் புங்கயற் கண்ணியார்
மன்னு நாதன் மணவிருப் போங்கிட
உன்னு வார்த முளத்தருண் முற்றவே. (௬௫)

தேச ணூர்வெஞ் சினங்கொ டிரிபுர
நாச னூர்நறி தாயமந் தாரத்து
வாச னூரன்பர் மாநிதி யாகிய
ஈச னூரரு ளென்று பெறுவதே. (௬௬)

---

௬௧. பெட்டு - விரும்பி. மட்டு - நறுமணம். எட்டுருவம் - ஐம் பூதம், இருசுடர், வேள்வித்தலைவன்.

௬௨. சாம்புவது - அழிவது. ஓதம் - கடல். பொறி - புள்ளி.

௬௩. பெட்டு ஆர்வத்து இரை உண்டு.

௬௬. தேசனூர் - ஒளியையுடையவர். நறிது - மணமுடையது.

போற்றி ஞர்தம் பிறவி புதைபட
மாற்றி ஞர்நெடு மாமறை யாகமம்
சாற்றி ஞர்தனி யாயமந் தாரம்வாழ்
ஏற்றி ஞாரரு ளென்று பெறுவதே. (சுஎ)

நண்ணு வார்கட ஞனில மேத்துபு
கண்ணு வார்கவின் காட்டுமந் தாரத்தார்
அண்ணு வார்துன் பகன்றின் படையவே
எண்ணு வாரரு ளென்று பெறுவதே. (சுஅ)

சீறு வார்மதின் மூன்றுஞ் சிதைத்தவர்
நாறு வார்குழ னங்கையோர் பங்கினர்
ஊறு வார்மது ஆற்றுந் துழாயெரு
தேறு வாரரு ளென்று பெறுவதே. (சுகூ)

## சிவபிரான் கயற்கண்ணியாரை மணக்கத் திருவுளங் கூர்தல்.

என்று முன்னி யெழிற்கயற் கண்ணியார்
கன்று முள்ளத்து வைகுமக் காலையில்
மன்று ளாடுமந் தார வனத்திஞர்
நன்று ளெண்ணினர் நல்லருள் செய்யவே. (எ0)

## சிவபிரான் தம் திருவுள்ளக்கருத்தை யாவருக்கும் அறிவிக்கச் செய்தல்.

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

அருள்வலைப் பட்டா ரன்பு வலைப்பட்டே யகலா ஞய
பொருண்மலி சொன்ன யான நிரோதன புரத்துப் பெம்மான்
இருண்மலி கூந்த லாரை யியன்மணஞ் செய்வா னெண்ணித்
தெருண்மலி நந்தி யாதிச் செல்வரை நோக்கிக் கூறும். (எக)

வடதிசைத் தலைவி கொங்கை மணந்திடக் கதிரோன் செல்லும்
தொடர்புடை மதியுண் முன்னை மதியிற்சுக் கிரவா ரத்துப்
படர்பெரு கன்பு சான்ற பார்ப்பன மாதை யாஞ்சென்
றிடர்தபு மணஞ்செய் தோம்ப வெண்ணின மாத லாலே. (எஉ)

---

சுஎ. தனி ஆய - ஒப்பற்றதாகிய.

சுஅ. கடல் நானிலம்.

சுகூ. துழாயை அணிந்த இடபம்.

எ0. அருள் செய்ய உள் எண்ணினர்.

எஉ. உத்தராயணத்துள், தைமாதத்தில் வெள்ளிக்கிழமையில்.

யாவரு மறையோ ராகி யெம்முடன் போது மின்கள்
மேவரு மறையோ னாகி வெளிப்படு கின்றும் யாமும்
பூவரு மயன்மா லாதிப் புலவரை யொருங்கு கூவும்
தாவரு மறையோன் பாலுஞ் சாற்றுமிப் பொழுதே யென்றான். (எஙு)

தூதர் யாவருக்கும் அறிவித்தல்.

என்றலு நந்தி யாதி கணத்தவ ரேவுந் தூதர்
மன்றலங் துளவோ னாதி வானவர் பலர்க்கு மோதிக்
கன்றலின் மறையோன் பாலுங் கடிமண மெடுத்துக் கூறி
ஒன்றிய சோழ னாதி யாவர்க்கு மொருங்கு சொற்றார். (எச)

கயற்கண்ணியாருடைய தந்தையார் மணத்திற்கு
வேண்டியன செய்தல்.

ஈன்றமா மறையோ னென்பா னிம்மொழி கேட்ட போதே
ஆன்றபே ருவகை பொங்க வளவில்பல் வேதி யர்க்கும்
பூன்றகா தலியா ருக்கும் புத்திரி யார்க்கு மற்றைச்
சான்றவர் பலர்க்குங் கூறித் தவாதவா னந்த முற்றான் (எரு)

மங்கையார் நினைத்த வாறே மாதேவர் நினைத்தா ரிந்த
மங்கையார் தெய்வ மேநம் மகளென நினைத்தல் குற்றம்
சங்கையா தென்று காதற் றலைவியா ரோடுஞ் சென்று
சங்கையா தரிக்கு மங்கைத் தனையையார் திருமுன் மேவி. (எசு)

அறிதரா தியாங்கள் சொற்ற வனைத்தையும் பொறுப்பீ ரென்று
நெறிதரு முகமன் கூறி நிரம்புற வுவப்புச் செய்து
மறிவரு மன்றல் செய்வான் வருபவர் தகுதிக் கேற்பக்
குறிபடு பலவு மீட்டுங் கொள்கையிற் றலைநின் றாரே. (எஎ)

---

எஙு. கூவும் - அழைமின். மறையோனென்றது கயற்கண்ணியாரின் தந்தையை.

எச. சோழன் - சோழேந்திரன்.

எரு. பூன்றவென்பதற்கு நிரம்பியவென்று பொருள் கூறுவர் இந்நூலாசிரியர்.

எசு. தெய்வமே - தெய்வந்தான். சங்கை யாது; சங்கை - சந்தேகம். தலைவியாரென்றது கயற்கண்ணியின் தாயை. சங்கை - வளையல்களை.

எஎ. திருமணம் செய்துகொள்பவர் தகுதிக்கேற்றபடி.

சோழேந்திரன் மணத்திற்குரியன செய்தல்.

திண்ணிய வலிசால் சோழேந் திரனுமங் கடுத்து மிக்க
புண்ணிய மறையி ரும்மைப் போலபவர் யாவ ரென்று
தண்ணிய முகமன் கூறித் தாழ்ந்தெழுந் தனையா ருள்ளம்
கண்ணிய வனைத்து நேர்ந்து கடிமணச் சிறப்புச் செய்வான். (எஅ)

திருமணத்திற்காக நகரை அலங்கரித்தல்.

காவணா மெங்கு மிட்டுக் கதலியுங் கழையு மார்த்துப்
பூவணா மாலை யோடு பொன்னரி மாலை நாற்றி
மாவணக் கமுகு தெங்கு வயங்குகா ரூறுந் தூக்கி
ஆவணா மாதி மற்று மலங்கரித் திடுவா ரானார். (எகூ)

தோரணந் தொடுக்கின் றாருந் தூகத மிரதத் தோடு
வாரணம் விடுக்கின் றாரும் வாசநீ ரிறைக்கின் றாரும்
பாரணா வோங்கு வாசம் படுபொடி யிடிக்கின் றாரும்
காரணா வுயர்ந்த மாடங் கவின்பெறப் புனைகின்றாரும். (அ0)

புத்தணி யணிகின் றாரும் புத்துடை யுடுக்கின் றாரும்
முத்தவெண் சுண்ணங் கூட்டு பாகடை முகக்கின் றாரும்
வித்தமு மணியுந் தூசும் வேண்டுவார்க் களிக்கின் றாரும்
ஒத்தபல் சுவையு ணுக்க ளுறவமைத் தூட்டு வாரும். (அக)

புண்ணிய மகர மாதம் போந்தது பிருகு வாரம்
அண்ணுவ தென்றென் பாரு மடுத்தது காணென் பாரும்
எண்ணுமந் தார மேய விறையவ னுளை யிங்கு
நண்ணுமென் றுவக்கின் றாரு மாயினர் நகரத் தோரே. (அஉ)

---

எஅ. நேர்ந்து - கொடுத்து.

எகூ. கதலி - வாழை. கழை - கரும்பு. கால் - பந்தற்கால். ஆவணம் - கடைத்தெரு.

அ0. பொடி - சுண்ணம். கார் அணா - மேகத்தை நெருங்க.

அக. புத்தணி - புதிய ஆபரணங்கள். சுண்ணம் - சுண்ணும்பு. கூட்டு - கலவைச் சந்தனம். பாகு அடை - பாக்கும் வெற்றிலையும். வித்தம் - பொன். உற - மிகுதியாக.

அஉ. மகரமாதம் - தைமாதம். பிருகுவாரம் - வெள்ளிக்கிழமை. அடுத்ததுகாண்; காண்: அசைநிலை.

இவர்செய வின்ன தாக விமையவர் வான வேந்தர்
பவளமுண் டகத்து மேய பனவர்சங் காழி மாயர்
கவலருந் திசைகாப் பாள ருருத்திர கணங்க ளாதி
எவரும்வந் திறுத்தா ரென்ப வெம்பிரான் செம்பொற் கோயில். (அ௩)

## தேவர் சிவபெருமானை எழுந்தருள வேண்டுதல்.

வந்தவா னவருந் தெய்வ முனிவரு மற்று ளோரும்
கந்தமா மலர்க டூவிக் கண்ணுத லடியிற் றாழ்ந்து
சந்தமா ரஞ்ச னக்கட் டையருள் பணிந்து நேர்சென்
றெந்தைநீ தெய்வ மன்றற் கெழுந்தரு ளுகவென் றாரே. (அ௪)

என்றுநன் கிரந்த யார்க்கு மின்னகை முகம்வ ழங்கித்
தன்றுணைத் தேவி யாரோ டளவளாய்த் தனித்துப் பேசி
நன்றவ ரநுஞை பெற்று நான்மறை முடிவுந் தேறாக்
குன்றவில் லாளி யங்கோர் திருவுருக் கொள்ளு மாதோ. (அ௫)

## சிவபிரான் பிரமசாரிவேடம் பூணுதல்.

நாவலூர் நாவ லோனை யாட்கொள நயந்த ஞான்று
பூவன்மால் படைக்கக் காக்கப் புகுதரு கருவி வேண்டா
தோவியுந் தண்ட மாய வொருபெருங் கருவி கொண்டு
மேவிய வுருப்போ லாது வேறுமோ ருருவங் கொள்வான். (அ௬)

அண்மைசால் குறுக்கை மேய வைங்கணைக் கிழவன் மேனி
வெண்மைசால் பொடியே யாக விழிமலர் திறந்த தானே
வண்மைசா லனையான் செய்யுந் தொழில்செய மதித்து மாண்போர்
உண்மைசா லுருக்கொண் டென்ன வொளிருமோ ருருவங் கொள்வான்.

---

அ௩. வானவேந்தர் - இந்திரர். பனவர் - பிரமதேவர். என்ப : அசை.

அ௪. கந்தம் - நறுமணம்.

அ௫. தன் தேவியாரென்றது அஞ்சனக்கண்ணம்மையாரை. அநுஞை - உடம்பாடு. குன்றவில்லாளி - மலையை வில்லாக ஆள்பவர் ; மலையாகிய வீட்டை ஆள்பவரெனினும் பொருந்தும்.

அ௬. நாவலோன் - சுந்தரமூர்த்தி நாயனார். பூவன் படைக்க, மால் காக்க ; நிரனிறை. பூவன் : "புலமும் பூவனு நாற்றமுநீ" (பரி. க : 46.) தண்டம் - ஊன்றுகோல். கிழவடிவம்போலன்றி.

அஎ. குறுக்கை - ஒருதலம் ; இது மன்மத சங்கார க்ஷேத்திரம் ; ஆற்றூருக்கு அருகிலுள்ளது.

கடைசூழன் றிருண்ட வைம்பாற் கவுரியார் முன்ன முன்னாள்
இடையுறக் கொண்ட கோல மிதுநிக ராமோ வென்னப்
புடைவளர் மாயோ னோக்கிப் போற்றுதன் னுண்மை யெள்ளி
அடைதரு பெண்மை மேவ வலங்குமோ ருருவங் கொள்வான். ()

ஒத்தமா மறையோ னென்னத் தனைமறை யுரைத்த லாலே
பத்தினி யிடப்பான் மேவப் படாழ லங்கை யோங்க
வைத்தனன் பிரம சாரி யென்னவும் வகுத்த லாலே
இத்திரு வுருவங் கொண்டா னென்னவோ ருருவங் கொள்வான். (அகூ)

தாழ்தர முடிந்து விட்ட தழைகருஞ் சிகையு நத்தம்
போழ்தர வெழுவான் மானப் பொங்கொளி மெய்யு மாசு
வீழ்தர மதியுற் றென்ன மிளிர்திரு முகமுங் கொண்டு
வாழ்தரப் பிரம சாரி மறையவ னுரு வனயன். (கூ௦)

திருவளர் முஞ்சி நாணுந் திகழ்வெண் டூசு கொய்து
பொருவரு முன்பு தூங்கும் படிபுனை செருக்கு நீறு
மருவுபுண் டரமுங் கையில் வயங்குறு பலாசத் தண்டும்
ஒருவில்புத் தகமும் வேத வுருக்கிளர் பாதக் காப்பும். (கூக)

ஒருகரத் திருந்த மானை யுரித்தெடுத் ததுசு ருட்டிப்
பொருவரக் கொண்டா லென்னப் பொலியுமான் றோற்சு ருட்டும்
மருவிய விடத்தோண் மூலத் திடுக்குபு மறைமு ழங்கப்
பெருகுபல் லியங்கள் யாவும் பிறங்குமா முகிலி னேங்க. (கூ௨)

அரகர சம்பு வென்று முனிவா ரங்கை கூப்பக்
கரதலங் குவித்து மாயோன் கண்ணுரு நோக்கி மேவ

---

அஅ. இச்செய்யுளிற் கூறப்பட்ட வரலாற்றைத் திருவிளையாடலி லுள்ள விருத்தகுமார பாலரான படலத்திற் கண்டுகொள்க. இடையுறக்கொண்ட கோலம் - குமாரக்கோலம். புடைவளர்.....பெண்மை மேவ : "ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்" (தாடகை வதைப். 24) என்றார் கம்பரும்.

அகூ. "வேள்விப், பாகமுண்ட பைங்கட் பார்ப்பான்" (பரி. ரு : 26 - 7) ; "பிராமண னீயே" காஞ்சிப் புராணம்.

கூ௦. நத்தம் - இருட்டை. எழுவான் - சூரியனை. வாழ்தர - யாவரும் மகிழ.

கூக. முஞ்சிநாண் - முஞ்சிப்புல்லாலாகிய கயிறு. பலாசத் தண்டு - புரசத் தண்டு. பாதக் காப்பு - பாதரட்சை.

கூ௨. ஏங்க - முழங்க.

வரமிகு நந்தி யாதி கணத்தவர் மறையோ ராகிப்
பரவினர் போற்றிச் சூழ வெளிவந்தான் பரம யோகி. (௧௩)

## சிவபிரான் வருகை.

திருமலி புகழ்சால் சோமேந் திரமக ராச னிட்ட
பெருநடைக் காவ ணத்துப் பிறங்குதம் பதம்பெ யர்த்து
மருவுமந் தார நீழல் வதிதரும் பிரம சாரி
வெருவரு மரியே றென்ன நடந்தனன் மெல்ல மெல்ல. (௧௪)

மறைசிறி துந்தே ராத மாண்புடைப் பிரம சாரி
நிறைதர வருவ தோர்ந்து நெடுநகர் மறையோர் யாரும்
உறைசுவை மதுவ ருக்க முபாயன மேந்தி வந்து
நறைகெழு மலர்தூய்ப் போற்றி நல்லருள் பெற்று வாழ்ந்தார். (௧௫)

மறையவர் வாழ்த்து மல்க மங்கல மடவார் பல்லோர்
நிறைகுடந் தீப மேந்தி நேர்வர நடந்து சென்று
முறைமணம் புணரு மாதர் முழுமணிக் கருகோர் மாடம்
குறையற வமர்ந்தா னெங்கள் குலமுழு தடிமை கொள்வோன். (௧௬)

நிகழ்புகழ்ச் சொன்ன யான நிரோதன புரத்து நாளும்
திகழ்தர வமர்வோன் காசி செல்லுவோ மென்று சென்றான்
புகழ்தரு வுருவ மாறிப் புன்மையே மலமா செல்லாம்
அகழ்தரு பிரம சாரி யந்தண னுய கள்வன். (௧௭)

மருகனார் சென்ற போது மாமனா ரெதிர்போய்த் தேசு
பெருகனா ரடியிற் றாழ்ந்து பெண்கொடுத் திடுவே னென்ன
உருகனா ரன்பின் மீண்டார் போமென வுரைத்திட் டாலும்
முருகனார் தந்தை யார்க்கு முனிவுமந் தாரத் துண்டோ. (௧௮)

---

௧௪. நடைக்காவணம் - நடைப்பந்தர்; இக்காலத்தில் 'நடவானம்' என்று வழங்கும்.

௧௫. மதுவருக்கம் - பால் பழம் சர்க்கரை நெய்யென்பன கலந்து வைத்த உணவு. உபாயனம் - கையுறை.

௧௮. பெருகு அன்னார் அடியில். உருகு அன்னார். முனிவு மந் தாரத்து உண்டோ - மந்தார விருட்சத்தினிடம் வெறுப்புண்டாகுமோ? முனிவும் அம் தாரத்து உண்டோ - வெறுப்பும் அழகிய மனைவியினிடம் உண்டோ? சிலேடை.

## சிவபிரான் திருமணமண்டபத்திற்கு எழுந்தருளல்.

புகழ்மண மாளி கைக்கட் புகுந்துபன் மறையோர் சூழத்
திகழ்சமா வர்த்த னத்துச் செய்தருள் கிரியை முற்ற
நிகழ்தரு மிருபத் தேழு நிரம்பிழை கொண்ட பூணூல்
அகழ்தரல் செய்தி ரட்டி யலங்குற மார்பிற் பூண்டு. (கூகூ)

குலவரை யிடைப்பின் போக்கு கோவண வுடைபு னைந்து
நலமலி சிகழி சூழ நறுமலர்த் தொடைவ னைந்து
நிலவுமஞ் சனக்க ணம்மை கொடுப்பது நிகர தாய
பலர்சொல்வெள் ளடையும் பாகும் பவளவாய் நிரம்ப மென்று. (க00)

அஞ்சுடர் நிறைநீர்க் கும்ப மணிமுளைப் பாலி யாதி
விஞ்சுமங் கலநி றைந்து மிளிர்மண வறைக்கண் முத்தம்
துஞ்சுபல் கலனுந் தாங்கிச் சூழ்ந்தவர் வாழ்த்த வுற்றுன்
மஞ்சுமெய் மான்முன் னோர்க்கு மங்கல மருளும் பெம்மான். (க0க)

## கயற்கண்ணியார் வருகை.

விரைதுவ ரப்பி நன்னீர் மேதக வாட்டி யொற்றிப்
புரைதபு செம்பட் டாடை பொற்புறப் புனைந்து பொற்பூண்
கரைதபு மணிப்பூண் யாவுங் கைபுனைந் தழகு செய்து
திரையமு தன்னார் தம்மைக் கொடுவந்து மருங்கு சேர்த்தார். (க0௨)

எண்ணிய வெண்ணி யாங்கே யெய்திய கயற்க ணல்லார்
கண்ணிய பெருமான் மேனி கடைக்கணித் தொருங்கு நோக்கித்

---

கூகூ. சமாவர்த்தனம் - பிரமசரிய விரதத்தை ஒழிக்கும்போது செய்யும் கிரியை. இருபத்தேழு நிரம்பு இழைகொண்ட பூணூல் : "ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண் ஞாண்" (முருகு. 183) என்பதும், 'முந்நூல் கொண்டு முப்புரியாக்குதலின், ஒன்பதாகிய நூலைத் தன்னிடத்தே கொண்ட ஒருபுரி மூன்றாகிய நுண்ணிய பூணூல்' என்னும் அதனுரையும் இங்கே அறிதற்பாலன.

க00. குலவு அரையிடை. சிகழி - மயிர்முடியை. வெள்ளடை-வெற்றிலை. பாகு - பாக்கு.

க0க. அஞ்சுடர் - தீபம். மஞ்சு - மேகம்.

க0௨. விரை: "கொட்டந் துருக்கந் தகர மகிலாரம், ஒட்டிய வைந்தும் விரை" (சிலப். ௬ : 76, அடியார். மேற்.); பத்துத்துவர் : "பூவந்தி திரிபலை புணர்கருங் காலி, நாவ லோடு நாற்பான் மரமே" (சிலப். ௬ : 76 - 7, அடியார். மேற்.) பொற்பு - பொலிவு. அமுதன்னாரென்றது கயற்கண்ணியாரை.

தண்ணிய வுவகை யுற்றுத் தனதட னனிபூ ரிப்ப
அண்ணிய பேரா னந்தத் தப்பொழு தேழும் குற்றார். (௧0௩)

அரும்புமந் தார நீழ லாண்டவன் மருங்கு மேய
விரும்புமங் கயற்கண் ணாரை மேதக நோக்கி னோர்கள்
சுரும்புபண் பயிலுங் கூந்தற் றேகையஞ் சனக்கண் ணாரென்
றிரும்புவன் மனங்க ரைந்தா ரிருகரங் குவித்து மாதோ. (௧0௪)

## சிவபிரான் கயற்கண்ணியாரை மணத்தல்.

வேதியர் சூழ்ந்து கொண்டு வெந்தழற் குண்ட நாப்பண்
தீதிய லாத வானெய் சிருக்கினன் மொண்டு வாக்க
ஓதிய வனைய செந்தீ யுதரம்வீங் கிடுமா றுண்டு
நீதியின் வலஞ்சு ழித்தாங் கெழுந்தது நிகரொ ழிந்தே. (௧0௫)

பைந்தொடி யாரை யீன்ற பனவர்பாரப் பனியோ டுற்று
மந்திர விதியா னுற்ற வலஞ்சுழித் தெழுதீ முன்னர்
முந்தைமந் தார நீழன் முதல்வனார் தமக்கியான் பெற்ற
கொந்தலர் குழலி னாரைக் கொடுத்தன னெனநீர் வார்த்தார். (௧0௬)

எழுகடன் முழக்கங் காட்ட வியங்கண்மங் கலவாழ்த் தோங்கப்
பழுதின்மங் கையர்க ளோதும் பரந்தபல் லாண்டு விம்ம
முழுமுத றிருக்க ரத்தான் முற்றிழை யார்கண் டத்து
வழுவின்மங் கலநாண் பூட்டி மகிழ்ச்சிசெய் தனன்யா வர்க்கும். (௧0௭)

தனிமயில் செங்கை யங்கை பற்றுபு தானே யாய
கனியழல் வலஞ்சூழ்ந் தம்மி கயற்கணார் மிதிக்கச் செய்து
முனிமகிழ் சாலி காட்டிச் சடங்கெலா முற்று வித்து
நனிமகிழ் திளைப்ப யார்க்கு நல்கினு னங்கள் கோமான். (௧0௮)

## கயற்கண்ணியார் தெய்வ மாதராதல்.

கடவுண்மங் கலநா ணம்மை கந்தரத் தணிந்த போதே
படர்விழி யிமைப்பு நீத்த பன்மலர் வாட்டந் தீர்ந்த
தொடரளிக் குலமு மூசா தொழிந்தன துகடீர் மேனி
அடர்தரு வெயர்வு மாறிற் றடிநிலந் தோய்த நீர்ந்த. (௧0௯)

௧0௫. ஆன்நெய் - பசுநெய். சிருக்கு - அத்திமரத்தால் செய்யப்பெற்று நெய் வார்ப்பதொரு கரண்டி.

௧0௮. முனி - வசிட்ட முனிவர். சாலி - அருந்ததியை.

௧0௯. நீத்த, தீர்ந்த: முற்று. கயற்கண்ணியார் தெய்வத்தன்மையைடைந்தார்.

## சிவபிரான் சோழேந்திரனுக்கு அருள்புரிதல்.

அவரவர் தகுதிக் கேற்ப வரும்பெறன் முகமன் செய்து
கவலரு விடையும் நல்கி யனுப்பிய பின்பு காதற்
சிவபரன் றெழுத சோழேந் திரனைவேண் டியதெ தென்றான்
உவமையி லடிக்க ணொன்று தோன்றலே வேண்டு மென்றான். (ககO)

அன்னவற் கதனை நல்கி யணியிழை யாரை யீன்ற
பன்னருந் தவத்தோ ராதிப் பலர்க்கும்வேண் டுவவ ளித்து
முன்னரு நந்தி யாதி கணத்தவர் மொய்த்துச் சூழத்
தன்னமர் கோயில் புக்கான் றையலோ டைய னம்மா. (ககக)

## திருக்கோயில் புகுதல்.

அஞ்சனக் கண்ணி யாரை யங்கயற் கண்ணார் தாழ
மஞ்செனக் கறுத்த கூந்தன் மாதேவி யெடுத்துப் புல்லி
நெஞ்சிடைக் குறித்த வாறே நிரம்பிய தன்றோ வென்றார்
உஞ்சனே னடியே னுங்க ளாங்கருட் டிறனு லென்றார். (ககஉ)

நீர்மலி சொன்ன யான நீரோதன புரத்துப் பெம்மான்
நார்மலி கயற்க ணாட்கு நாளுமஞ் சனக்க ணாள்போல்
ஏர்மலி சிறப்பு நல்க வியைந்தொரு கோயில் கொண்டு
பார்மலி பலர்க்கும் வேட்ட பாலித்து வைகு நாளும். (ககங)

அறைதரு பிரம சாரி யந்தண னுய வையன்
மறையவர் குலத்து மாதை மணந்தொரு கிருகி யானான்
பிறைமுடி யனையான் வானப் பிரத்தனு மாவான் கொல்லோ
கறையின்மா தவத்தீர் யாரே கரைபவ ரனைய னுடல். (ககச)

## பயன்.

மகரமா மதியி லிந்த மணவிழா நடத்து வோரும்
பகருமிவ் விழாக்கூ றிந்தப் படலத்தை வாசிப் போரும்
நிகரருஞ் செல்வ மேவி நிறைபெரும் போகந் துய்த்துப்
புகரினம் பெருமான் பாதம் புணர்ந்துவாழ்ந் திருப்ப ரன்றே. (ககரு)

ஆகத் திருவிருத்தம்—சOO.

---

ககO. ஒன்றுது ஒன்றல் - முத்தி. ககஉ. உஞ்சனேன் - உய்ந்தேன்.
ககங. வேட்ட பாலித்து - விரும்பியவற்றைக் கொடுத்தருளி.
ககச. கிருகி - இல்வாழ்வான். கரைபவர் - சொல்லுவோர்.
ககரு. மகரமாம்தியில் - தைமாதத்தில். வாழ்ந்திருப்பர் - மகிழ்ந்திருப்பர்.

# கல. ஆற்றூர்ப் படலம்.

## கதைச் சுருக்கம்.

[தேவர்களுக்குப் பகைவனாகிய சூரபன்மனை அழிப்பதற்காக முருகக்கடவுள் திருவவதாரம் செய்தார். சிவபெருமான் தேவர்களுடைய வேண்டுகோட்கு இணங்கி அக்கடவுளுக்கு வேற்படை முதலியவற்றை அளித்து, "சூரசங்காரம் செய்துவருக" என்று விடைகொடுத்தனுப்பினார். முருகவேள் கைலாயத்திலிருந்து புறப்பட்டுப் பல சிவஸ்தலங்களைத் தரிசித்து அங்கங்கேயுள்ள சிவபிரானை வழிபட்டுச் சொன்னயான நிரோதனபுரம் அடைந்தார். அங்கே பூசைபுரிய எண்ணிப் பக்கத்தில் ஒரு நதியை உண்டாக்க நினைந்தார். உடனே கொள்ளிடத்தின் தென்கரையிலிருந்து ஓர் ஆற்றை உண்டாக்கி வருமாறு தம் வேலாயுதத்தை விடுத்தார். அஃது அங்ஙனமே செய்ய, ஒருநதி திருக்கோயிலுக்கு இடப்பக்கத்து வழியே சென்று கடலிடைக் கலந்தது. அது கண்ட குமரவேள் அதன்கண் நீராடிச் சிவபிரானுக்கும் அஞ்சனாட்சியம்மைக்கும் அத்தீர்த்தத்தால் அபிடேகஞ் செய்து பூசைபுரிந்து அருள் பெற்றுச் சென்றார். சுப்பிரமணியக் கடவுளால் உண்டாக்கப்பட்டதால் அந்நதி சுப்பிரமணிய நதி யென்று பெயர்பெற்று இக்காலத்தில் மண்ணியென மருவி வழங்குகின்றது; கந்தவேளால் அழைக்கப்பெற்றமையின் கந்த காவேரி எனவும் ஒரு பெயர் அதற்குண்டு. அத்தகைய புண்ணிய ஆறு உற்ற விசேடத்தால் இத்தலத்திற்கு ஆற்றூரென்ற பெயர் வழங்கலாயிற்று].

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மறையவர் குலத்துத் தோன்றி வளர்கயற் கண்ணி யார்தம்
கறைதபு மன்றல் கேட்டுக் களித்தன மாற்றா ரென்று
நிறைதரு நாம மொன்று நிகழ்ந்தகா ரணங்கூ றென்று
முறைமையின் முனிவர் கேட்க மொழிகுவன் சூத மேலோன். (க)

---

கல. ஆற்றூர்ப் படலம்.

க. கறைதபும் - குற்றம் நீங்கிய. மன்றல் - கலியாணத்தை. நாமம் - பெயர்.

THIRUVARUR, MADRAS.

### முருகக்கடவுள் திருவவதாரம்.

உடல்சினத் தவுணர் கோமா னுறுவலிச் சூர னென்போன்
மடன்முறுக் கவிழுந் தண்டார் மார்பமும் வஞ்ச வெற்பும்
கடலுமுட் டுணுக்குற் றேங்கக் கடவுளர் செய்த வத்தால்
அடலுடைக் குமரப் புத்தே ளவதரித் திருந்த காலை. (உ)

### தேவர்கள் சிவபெருமானிடம் முறையிடல்.

நிறைவலிக் கொடுஞ்சூர் தாக்க நெஞ்சுடைந் துட்கி மாழ்கும்
மறையவன் றுளவத் தாண்டார் மாயவன் மகவான் முன்னோர்
கறைதப விளங்குந் தெய்வக் கயிலையை யடைந்து தங்கள்
குறைதெரித் திடவ டுக்கிக் கூவொலி யெழுப்பி னாரே. (ங)

கூவொலி செவியிற் கேட்ட கொண்டலங் கண்டத் தெண்டோட்
சேவகன் முறையிட் டாரீங் கடைகெனச் செப்பி விட்டான்
காவல்செய் நந்திப் புத்தேள் புகுத்திடக் கண்டு தாழ்ந்து
தேவர்தம் பிரானே வெஞ்சூர்க் கொடுமைதீர்த் தருள்வா யென்றார். ()

### சிவபெருமான் முருகக்கடவுளை விடுத்தல்.

வாய்திறந் தரற்று மேழை வானவர்க் கிரங்கி யீன்ற
தாய்பொருங் கருணை மூர்த்தி சண்முகப் பிரானைக் கூவிக்
காய்வலி யவுணர்ச் சாடிக் கடவுளர் சிறையைச் சீத்து
வேய்தரு வாகை கோடி யென்றுவெள் வேலு நல்கி. (ரு)

படர்தரு கொடிய வைவாய்ப் படைபல பிறவு நல்கித்
தொடர்தரு வலிய பூதப் படைகளுஞ் சூழக் கூட்டி
அடர்தரு காதல் பொங்க வணைத்துமார் புச்சி மோந்து
சுடர்தரு மேனிப் பெம்மான் சொற்றனன் போய்வா வென்றே. (சூ)

---

உ. உறுவலி - மிக்கவன்மையையுடைய. மடல் - பூவிதழ். வஞ்ச வெற்பு - கிரௌஞ்சகிரி; சூரனுக்கு உதவியான ஒருமலை யெனினும் அமையும். துணுக்குற்று - நடுக்கமடைந்து.

ங. மறையவன் - பிரமதேவர். மாயவன் - திருமால். மகவான் - இந்திரன்.

ச. கொண்டல் - மேகம். நந்திப்புத்தேள் - திருநந்திதேவர்.

ரு. தாய்பொரும் - தாயை ஒத்த. அவுணர்ச்சாடி - அசுரர்களைக் கொன்று. சீத்து - நீக்கி. வாகை கோடி - வெற்றியைக் கொள்வாயாக.

சூ. வை வாய் - கூர்மையான வாயையுடைய.

### முருகக்கடவுள் சிவதலங்களைத் தரிசித்துச் செல்லுதல்.

விடைகொடுத் தருளும் வெள்ளை விடையுடைப் பிரானைத் தாழ்ந்து
படைபல சூழ்ந்து மொய்ப்பப் பங்கயன் மாயோன் போற்ற
உடைதிரைக் கங்கை மைந்த னொய்யெனத் தேர்மேற் கொண்டு
தடைதபத் தென்பா லுள்ள தலமெலாம் போற்றிச் செல்வான். (எ)

வளமலி தருநொ டித்தான் மலைநின்று போந்த செவ்வேள்
பளகறு மகவா னீலப் பருப்பதம் பருப்ப தந்தேன்
உளர்பொழி லனேக தங்கா வதமுயர் வார ணாசி
அளவறு மிவைமுன் னாங்காங் கடுத்தடுத் திறைஞ்சிச் செல்வான்.

தொண்டைநன் னாடு நண்ணித் துதிமலி திருக்கா ளத்தி
இண்டையஞ் சடையான் கச்சி யேகம்ப மாலங் காடு
பண்டைநான் மறையே யென்று பகர்கழுக் குன்றம் போற்றி
வண்டையா தரிக்குஞ் சோலை வளர்நடு நாடு புக்கான். (கூ)

இருவர்தஞ் செருக்கு மாய வெழுந்தழ லாய வெற்பும்
பொருவரு விருத்த வெற்பும் புரம்பொடி படுத்த வைப்பும்
திருவமுன் னினருஞ் சேர்பா திரிப்புலி யூரும் போற்றித்
துருவரும் வளமை சான்ற சோழநன் னாடு புக்கான். (கO)

### முருகக்கடவுள் ஆற்றூரை அடைதல்.

புகழ்தரு தில்லை காழி புள்ளூர் வெண் காடு செங்கா
டகழ்புடை யுடுத்த வாரூ ராவடு துறைது ருத்தி

---

எ. பங்கயன் - பிரமதேவர். கங்கைமைந்தன் - காங்கேயன்; முருகக் கடவுள். ஒய்யென - விரைவாக.

அ. நொடித்தான்மலை - கைலைமலை; நொடித்தல் - அழித்தல். பளகு அறு - குற்றம் அற்ற. மகவான்நீலப் பருப்பதம் - இந்திர நீல பர்வதம். பருப்பதம் - ஸ்ரீசைலம். வாரணாசி - ஸ்ரீ காசி.

கூ. பண்டை......கழுக்குன்றம்: இத்தலம் வேதத்தின வடிவ மென்பது இதற்குரிய வேதாசலமென்னும் பெயராலும் விளங்கும்.

கO. இருவர் - பிரமதேவரும் திருமாலும். தழலாய வெற்பு - திருவண்ணாமலை. விருத்தவெற்பு - விருத்தாசலம். புரம்பொடி படுத்த வைப்பு - திருவதிகை வீரட்டானம். துருவரும் வளமை - தேடுதற்கரிய அருட்செல்வம்.

கக. தில்லை - சிதம்பரம். காழி - சீகாழி. புள்ளூர் - வைத்தீசுவரன் கோயில். துருத்தி - திருத்துருத்தி (குற்றாலம்.)

இகழ்தபு குறுக்கை முன்னு வினையபஙீ றலமும் போற்றி
நிகழ்தரு சொன்ன யான நிரோதன புரம்வந் துற்றுன். (கக)

### முருகக்கடவுள் பூசைபுரிய எண்ணுதல்.

அந்நக ரடைந்த போதே யஞ்சனக் கண்ணு ளோடு
தன்னமர் மைந்தன் காணத் தம்பிரான் காட்சி நல்க
மின்னகு வெள்வே லையன் விருப்பொடு கரங்கள் கூப்பிப்
பொன்னடித் துணைமேல் வீழ்ந்து பூசிக்கு மெண்ணங் கொண்டான்.()

### முருகக்கடவுள் மண்ணியாற்றை உண்டாக்குதல்.

அருகமர் நதிநீர் காணு னணித்தலா மையினுற் றென்பாற்
பெருகுமா நதிநீர் கண்டும் பெட்டிலன் வடகா வேரிப்
பொருவிலாத் தென்பாற் கோடு கீண்டுபூ மியினுங் கீண்டு
விரிதர நன்னீர் கொண்டு வருகென வேலை விட்டான். (கங)

### ஆற்றின் வரவு.

கடியவேல் விரைந்து சென்று காவிரிக் கோடு கீண்டு
நெடியபூ மியையுங் கீண்டு நின்மலன் கரத்தை யுற்ற
தடியவா யொருவ ராக மன்றுமண் முழுதி டந்த
படியதா மெனமண் கீண்டு வருவது பரவு நீத்தம். (கச)

மூத்தவ னழைத்த ஞான்று முடுகிய கதியை மந்த
மாத்தமி ழறிஞர் கூற வடுநூனை வசிவெள் வேல்கொண்
டேத்தரும் புகழின் மிக்க விளையவ னழைத்த ஞான்று
சோத்தமென் றடையா நிற்குந் துனைதர முடுகி நீத்தம். (கரு)

---

கஉ. மின்நகு - மின்னலைப் பரிகசிக்கின்ற. வீழ்ந்து - விரும்பி.

கங. அணித்து அலாமையினுல் - சமீபத்திலுள்ளது அல்லாமை யால். பெட்டிலன் - விரும்பிலன்: வடகாவேரி - கொள்ளிடம். கோடு கீண்டு - கரையைக் கிழித்து.

கச கோடு - கரை. நின்மலன் - முருகக்கடவுளுடைய. அடி அவாய் - சிவபெருமான் திருவடிகளைக் காண விரும்பி. ஒரு வராகம் - ஆதிவராகம். நீத்தம் - வெள்ளம்.

கரு. மூத்தவன் - விநாயகக்கடவுள். வசி - கூர்மை. சோத்தம் - அஞ்சலி.

குசையொடு சத்தி யேவந் தொருநமை யழைத்த லாலே
திசைபுகழ் கங்கை யாய நாம்விரைஇச் செல்லா விட்டால்
வசைதபு முடிமேற் பாதத் துதைநனி வாய்க்கு மென்றுள்
இசையவெண் ணுபுவி ரைந்து வருவது மேய்க்கு நீத்தம். (கசு)
தவலருங் கங்கை யாய தான்பல நாட்பி ரிந்த
நுவலரும் வருத்தந் தீர நோன்மைசான் மகனைக் கண்டு
கவலருங் களிப்பு மேவக் கடுகுபு வருதன் மானும்
அவலரு மேடென் றெண்ணு தளாய்விரைந் தடையு நீத்தம். (கஎ)
நீர்மலி சொன்ன யான நிரோதன புரத்துப் பெம்மான்
காருறழ் குழலோர் மாதைக் கடிமணஞ் செய்த தெண்ணிப்
போர்வலி யனையாண் மீது பொங்குவெஞ் சினங்கொண் டெய்தும்
ஓர்திறம் பொருவும் பொங்கி யுராய்விரைந் தடையு நீத்தம். (கஅ)
தெய்வமந் தார நீழற் சிவபிரான் வேறோர் மன்றல்
செய்ததை யுணர்ந்து பாகச் சேயிழை தனையு யிர்த்த
மொய்கொள்வெற் பினமுங் கூடக் கொடுமுடி கியது நேரும்
ஓய்யென வரைக ளெல்லா முடன்பெயர்த் தடையு நீத்தம். (கசு)
பிணங்குறேல் தங்கா யென்று பிரான்சடைக் கொன்றை மாலை
அணங் குதீர் தரமுன் னேவ வதைச்சிதர்த் தெய்தன் மான
மணங்குலா யெதிர்நேர் கொன்றை மரமெலா முறித்துச் சாடி
இணங்குவான் கரையிற் றள்ளி யெய்தும்வெய் தெழுந்த நீத்தம்.(உ0)
வாமத்தே யொருத்தி வைக மற்றுநாஞ் சடைமேல் வைகக்
காமத்தா லொருபெ ணீந்தான் கடும்பிவ ரெனவுட் கொண்டாங்
கேமுற்று மறையோர் வேட்கு மெரிமுழு தவித்தன் றுரும்
நாமுற்றே யிரியச் சோலை நடந்துராய் வருமந் நீத்தம். (உக)
என்னைநீ யீன்ற தாயா யிருந்துமென் கொழுநன் மற்றோர்
பொன்னைவேட் டிடவு நீயே பொலிந்துடம் பட்டா யன்றே

கசு. சத்தி - வேல், அம்பிகை. விரைஇ - விரைந்து.
கஎ. அவல் - பள்ளம். அளாய் - அளாவி; கலந்து.
கஅ. அனையாள்மீது - கயற்கண்ணியம்மையின்மேல்.
உ0. ஏவ - சிவபெருமான் ஏவ.
உக. ஒரு பெண் ஈந்தானென்றது கயற்கண்ணியாரின் தந்தையை. கடும்பு - சுற்றத்தார். ஏமுற்று - விருப்பமுற்று. நாம் உற்று - அச்சமுற்று. உராய் - பெயர்ந்து.
உஉ. என்னை நீ ஈன்ற தாயாயிருந்துமென்றது, அக்கினியிலிருந்து நீருண்டாகுமென்னும் வேத வழக்கை நினைந்து.

உன்னையான் சிதைப்ப லென்று னினைப்பது மொக்கு மையர்
முன்னையாற் றிடுவேள் வித்தீ முழுதழித் தெழுமங் கீத்தம். (உஉ)

மாசிகந் திடப்பால் வைகு மலைமக டன்னைக் கண்டு
பேசிமற் றதன்மேற் செய்யப் படுவது பெட்டா லென்ன
வாசமிக் கெழுமந் தார வனப்பெருங் கோயில் வைகும்
ஈசனுக் கிடப்பா லாக வெய்தும்வெய் தெழுந்த கீத்தம்.

உலகெலா முன்ன மீன்ற வொருத்தியைக் கண்டு பேசக்
கலகநீ செயலி னுருங் கருமமென் னெனவுட் கொண்டு
நிலவுதன் வெகுளி யாற்செய் செயலின்மை நினைந்து வெய்ய
புலவுநா ருழி யூடு பொருக்கெனப் போய்வீழ்ந் தன்றே. (உச)

## முருகக்கடவுள் அந்நதியில் மூழ்கிப் பூசித்தல்.

### (கலிவிருத்தம்)

இன்னணம் வருபுன லெய்த நோக்குபு
கொன்னவில் வேலுடைக் குமர நாயகன்
பன்னரு மகிழ்ச்சியுட் பரவ மூழ்கினன்
தன்னமர் நீறுகண் மணித ரித்தனன். (உரு)

அப்புனன் மொண்டுமொண் டையற் காட்டுபு
திப்பியச் செங்கழு நீருஞ் சூட்டுபு
தப்பில்பன் முகமனுந் தவாம லாற்றுபு
வெப்பில்பல் றுதிமொழி விழைந்து சாற்றுபு. (உசா)

சூர்முத றுமித்திடத் தொடங்கி யாற்றுவெம்
போர்கெழு வீரமும் புகழு ஞானமும்
ஆர்வமிக் குறப்பொலி யாவும் பெற்றனன்
ஏர்கெழு விடையும்பெற் றெய்தி னனரோ. (உஎ)

## மண்ணியாற்றின் பெயர் வரலாறு.

மண்ணிய மணியென வயங்கு சுப்பிர
மண்ணிய னழைத்தலால் வையஞ் சுப்பிர

---

உஙு. மேற் செய்யப்படுவது - இடப்பக்கத்திலிருப்பதை. வெய்து-விரைவாக.

உச. என் என - என்னவென்று அஞ்சனக் கண்ணம்மை அருளிச்செய்ய.

உஅ. மண்ணிய - கழுவிய.

மண்ணிய நதியென மருவு மிற்றைநாள்
மண்ணியந் நதியென வயங்க நின்றதே. (உஅ)

சீரிய கந்தவே டெரிந்த தைத்தலாற்
சீரியர் காரணச் சிறப்பிற் கந்தகா
வேரியென் றொருபெயர் விளம்பப் பெற்றது
வேரிய நறுமலர் மிடையு மண்ணியே. (உகூ)

புண்ணிய வனையவா றுற்ற பொற்பினால்
உண்ணில வறிஞராற் றாரென் றோதுவார்
நண்ணிய நதிப்புனன் மூழ்கி நாதனைக்
கண்ணியேத் தெடுப்பவர் கலப்பர் முத்தியே (௩0)

ஆகத் திருவிருத்தம் - ௪௩0.

---

# கக. திருமால் இடங்கொண்ட படலம்.

### கதைச் சுருக்கம்.

அசுரர்களால் தேவர்கள் மிக்க துன்பப்படுகையில் அவ்வசுரர் களை அழிக்க எண்ணிய திருமால் அதற்குரிய வழி சிவபிரானது திருவருள் பெறுதலென்றும் அங்ஙனம் பெறுதற்குரிய தலம் ஆற்றூரென்றும் எண்ணி இத்தலத்தை அடைந்தார். அடைந்து, மண்ணி நதியில் நீராடி அபிஷேகம் அருச்சனை நைவேத்தியம் முதலியன செய்து சொன்னயான கிரோதனபுரேசரையும் அஞ்சனாட்சியம்மையையும் பூசித்தார்; பிறகு சிவபிரானைப் பலபடியாகத் துதித்தார். அவருடைய துதிக்கு இரங்கிய சிவபெருமான் அவர்முன் தோன்றி, "உமது விருப்பம் யாது?" என்று வினவினார். திருமால், "தேவர்கள் தம் பகைவர்களால் வருந்துகின்றார்கள்; அதனை அடியேன் போக்கும்வண்ணம் அருள்புரிதல் வேண்டும். அன்றியும் இந்தத் தலத்தில் அடியேன் என் பரிவாரத்தோடும் இடங்கொண்டு சுகமாக இருக்கவேண்டும்" என்று வேண்டினார். சிவபெருமான் அங்ஙனமே அசுரரையழிக்கும் ஆற்றலை அவருக்களித்து, "நீர் இங்கே சுகமாக இருக்கவேண்டுமென்று விரும்பினமையின் சுகாசீன நாராயணரென்னும் பெயரோடு நமது கோயிலுக்கு

---

உஅ. மருவும்: முற்று. அந்நதி மண்ணியென.

உகூ. கந்தகாவேரி - ஸ்கந்தகாவேரி; ஸ்கந்தர் முருகக்கடவுள

அக்கினி மூலையிலே கோயில் கொண்டு வாழ்வீராக " என்று அருளினர். திருமால் மிக மகிழ்ந்து சிவபிரான்பால் விடைபெற்றுப் போய் அசுரர்களை அழித்துத் தேவர்களுடைய துன்பத்தை நீக்கியபின்பு ஆற்றூர்வந்து சிவபிரான் கட்டளையிட்டவாறே தம்முடைய பரிவாரங்களோடும் திருக்கோயில்கொண்டு விளங்கலானர்.]

---

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

கலங்கொண்டு பணைத்து விம்மிக் கனங்கொண்டு திதலை பூத்து
நலங்கொண்டு விளங்குங் கொங்கை நகங்கொண்டு விமலை தாக்க
உலங்கொண்டு நிமிருந் திண்டோ ளுரங்கொண்டு மகிழ்பெம் மானை
வலங்கொண்டு நெடிய மாயோ னிடங்கொண்டு வாழ்தல் சொல்வாம்.

திருமால் எண்ணுதல்.

எழுதுசித் திரமே யன்ன விலக்குமி பணைத்த கொங்கை
உழுதுழு தழக்குந் தோறு முறந்தபன் முகையும் விண்டு
கொழுநற வுவட்டெ டுத்துக் கொப்புளித் தருவி பாயும்
செழுவிய துளவத் தண்டார் திகழ்மறு மார்பத் தண்ணல். (௨)

தானவ ரென்னுந் தீய சழக்கர்மே லிடுத லாலே
வானவர் வருந்து கின்றார் மற்றவர் வருத்தந் தீர்ப்பான்
கானவர் வேடங் கொண்டு காண்டிப னுடுமற் செய்தோர்
ஆனவ ரிணையி லாத வருள்பெரி தடைய வேண்டும். (௩)

அருளடை குதனு மெல்லாத் தலத்துஞ்சென் றடைதன் முற்று
திருளடை யாது மேலா யிருக்குமோர் தலத்தைச் சார்ந்தப்
பொருளினி தடைதல் வேண்டும் பொருந்திய தலமொன் றேரின்
வெருளடை யாத வாற்றூ ரன்றிவே றில்லை யெங்கும். (௪)

---

கக. திருமால் இடங்கொண்ட படலம்.

௧. திதலை - தேமல். உலம் - உருண்ட கல்.

௨. உறந்த - மிகுந்த. மறு - ஸ்ரீவத்ஸம்.

௩. கானவர் வேடம் - வேடர்வடிவம். காண்டிபன் - காண்டீபமென்னும் வில்லையுடைய அருச்சுனன்.

அத்தகு தலத்தைச் சார்ந்தே யமலனைப் பூசை யாற்றி
வித்தக வருளைப் பெற்று வெய்யதா னவரை மாட்டி
உத்தம குணத்த ராய வும்பரைக் காப்ப னென்று
சித்தம்வைத் தெழுந்தா னாழிச் சேக்கையை யொருவி மாதோ. (ரு)

## திருமால் ஆற்றூரை அடைதல்.

திருமகள் விடுவச் சேனன் செய்யபுள் வேந்தன் முன்னோர்
ஒருவல ராகிச் சூழ வுவந்துவந் தாற்றூ ருற்றான்
பெருகிய வளங்க ளெல்லாம் பிறங்குகண் விடுத்து நோக்கி
மருவரு மகிழ்ச்சி பூத்து மாறில்விம் மிதத்த னானான். (சு)

## திருமால் சிவபெருமானைப் பூசித்தல்.

அருவியங் குன்ற நின்று மகலிடங் குழியப் பாய்ந்து
மருவிவன் கோட்டு மேயும் வளைகருங் கோட்டு மேதி
வெருவியோட் டெடுக்க வாரி வெள்ளிய வயிரம் வீசும்
பொருவில்வண் டரங்க மண்ணிப் புனல்படிந் தாடி னானே. (எ)

தாவரு மன்பு பொங்கச் சங்கற்பஞ் செய்து கொண்டு
மூவருஞ் சிவதீர்த் தத்து மூழ்கிமா தவமி லாரை
மேவருந் தெய்வ மேன்மை வெள்ளிய நீறு பூசிப்
பாவரும் புகழ்சால் பாசு பதப்பெரு விரதம் பூண்டு. (அ)

வானளாஞ் சிகரி வாயின் மார்பமண் டோயத் தாழ்ந்து
தேனளாந் துளபத் தண்டார்ச் செம்மலுட் புகூஉமந் தாரக்
கானளாங் கடவு டன்னைக் கண்களிப் படையக் கண்டே
ஊனளா முயிரு நெஞ்சு முருகிட வலஞ்செய் வானே. (கூ)

எண்ணியைந் தெழுத்துஞ் செங்கை யிரண்டுமேற் குவித்துக்கொண்டு
நண்ணியுட் பலகாற் சூழ்ந்து நாயக னருகு சார்ந்து
மண்ணிமஞ் சனநீ ராட்டி மாமல ராதி சூட்டிப்
பண்ணியின் னமுத மூட்டிப் பரந்தபஃ றீபங் காட்டி. (க0)

மற்றுள முகமன் யாவும் வழாவகை விதியி னாற்றிக்
கற்றையஞ் சடில மோலிக் கண்ணுத லருள்கொள் பாக்கு

ரு. ஆழிச்சேக்கை - கடலிற் படுத்திருத்தல்.
சு. புள்வேந்தன் - கருடன்.
எ. வன்கோட்டு - வலியகரையில். கருங்கோடு - கரியகொம்பு.
அ. மூ அரு - மூத்தல் இல்லாத. தவமில்லாரைமேவுதல் இல்லாத.
கூ. சிகரிவாயில் - கோபுரவாயில்.

TIRUVANMIYUR, MADRAS-41

வெற்றியந் திருமு னின்று மெய்ம்மையிற் குடந்தம் பட்டு
முற்றிய வன்பு பொங்கத் தோத்திர மொழிய லுற்றான். (௧௧)

## திருமால் செய்த துதி.

(கலித்துறை)

உற்று வெள்ளியங் கயிலையை யெடுத்தவ னுரன்முற்
றற்று வீழ்ந்தவ னலறிட வடர்த்ததா ளுதியோய்
செற்று மைந்தன்மேல் வருமொரு கூற்றுயிர் சிதையச்
சற்று மோதிய தாளடி யோய்சர ணடைந்தேன். (௧௨)

செருக்கு மூழ்கிய மலரவ னடுச்சிரஞ் சிந்த
முருக்கு முண்டக முழுமலர் வென்றகைந் நகத்தோய்
தருக்கு வாள்வலிச் சலந்தர னுருயிர் தடிந்துள்
உருக்கு கானகத் தோயுனைச் சரணமென் றுற்றேன். (௧௩)

உற்ற மூவருங் குளிர்ப்புற வுவக்கும்வெண் ணிலவாய்
மற்ற யாவரும் வெதுப்புற வருத்துசெந் தழலாய்க்
கொற்ற வெள்ளிபொன் னிரும்பெனக் குலாயமும் மதிலைச்
செற்ற புன்னகைத் தேவநின் றிருவடி சேர்ந்தேன். (௧௪)

கொடிய வாணன்வந் திரந்திடப் பெருவரங் கொடுத்துக்
கடிய மற்றவன் றழன்மதில் வாயிலுங் காத்தாய்
அடிய னேன்பணிந் தேத்திட வவன்வலி யழிக்கும்
படிய வாம்வரங் கொடுத்தநின் பாதமுட் பதிப்பேன். (௧௫)

எங்க ணுஞ்சிர மெங்கணு முகமெங்க ணுங்கண்
எங்க ணுஞ்செவி யெங்கணு நாசியெங் கணும்வாய்
எங்க ணும்புய மெங்கணு மிதயமெங் கணுங்கை
எங்க ணும்பத மாயநிற் றொழுதெழா நின்றேன். (௧௬)

---

௧௧. குடந்தம்பட்டு - கைகூப்பி உடல்வளைந்து நின்று.

௧௨. எடுத்தவன் - இராவணன். மைந்தன் - மார்க்கண்டேயர்.

௧௩. முருக்கும் - கெடுத்த. கால்நகத்தோய் - கால்நகத்தை யுடையாய்.

௧௪. திரிபுரத்திலிருந்த தலைவராகிய மூன்று அசுரரையும் கொல்லாமல் விடுத்தமையால் சிவபெருமான் நகையை அம்மூவர்திறத்தில் நிலவென்றார்.

௧௫. தழல்மதில் - நெருப்பாகிய மதில். அவன் - அந்த வாணாசுரனுடைய.

ஓங்கு மீதலஞ் சென்னிபா தலம்பத முவக்கும்
பாங்கு மேனியா காயமெண் டிசையுமெண் படர்தோள்
வீங்கு காலுயிர்ப் பமைந்தமுச் சுடருமூ விழியா
நீங்கு றுதுகொண் டமரொரு நின்னையே நினைவேன். (௧௭)

அரிய மாதவப் பிருகுசா பத்தினு லடியேற்
குரிய வாகிய பத்துளோ ரைந்தினிற் றண்டம்
பரிய வாற்றியோர் நான்கினவ் வாறன்றிப் பணிகொண்
டிரிய மாசுநல் லருள்புரி யுனைத்தொழு திருப்பேன். (௧௮)

கரிய மாமுகி லுருக்கொடு தாங்கவுங் கழியா
உரிய வெள்விடை யுருக்கொடு தாங்கவு முழவம்
தெரிய மன்றிடை முழக்கவும் புல்லிய சிறியேற்
கரிய பேரருள் செய்தநின் பொன்னடி யடைந்தேன். (௧௯)

அடிய னேனின தடிமலர் காணமண் ணகழ்ந்து
முடிய நேடியெய்த் ததுமுண ராதவன் மூடர்
கொடிய நீரரா யெனைப்பர மென்பரக் குற்றம்
மிடிய வென்னதாக் கொளாதருள் பவநினை விள்ளேன். (௨0)

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

திகழுமைம் முகங்கள் போற்றி செஞ்சடா மோலி போற்றி
நிகரில்வெம் மழுமான் போற்றி நிகரிலா விழிகள் போற்றி
அகழ்மலத் தவரேத் தோர்பா லஞ்சனக் கண்ணி போற்றி
புகழ்மிகு மாற்றூர் மேய புநிதநின் பாதம் போற்றி. (௨௧)

எண்ணிய வெண்ணி யாங்கே யினியவர்க் கருள்வாய் போற்றி
கண்ணிய தொருநா யேனுங் கைக்கொளத் தருவாய் போற்றி
அண்ணிய விடப்பான் மேவு மஞ்சனக் கண்ணி போற்றி
புண்ணிய வாற்றூர் மேய புநிதநின் பாதம் போற்றி. (௨௨)

---

௧௭. கால் உயிர்ப்பு - ஐந்துபூதத்துள் ஒன்ருகிய காற்றே சுவாசம்.

௧௮. பிருகு - ஒருமுனிவர். பத்தினில் - தசாவதாரத்துள். ஐந்து - மச்சாவதாரம் முதலிய ஐந்து. பரிய - வருந்த. நான்கு - பரசுராமாவதாரம் முதலியன. மாசு இரிய - குற்றம் நீங்க.

௧௯. ஒரு கற்பத்தில் திருமால் மேக உருக்கொண்டு சிவபெருமானைத் தாங்கினரென்றும் அது மேகவாகன கற்பமென்று கூறப்படுமென்றும் காஞ்சிப்புராணம் முதலியன கூறும்; "மேகநல் லூர்தியர்" தே. திருநா. திருப்புகலூர்.

௨0. மிடிய - வறுமையையுடைய.

தெருண்மலி யோகச் செல்வர் சிந்தைநீங் கரியாய் போற்றி
வெருண்மலி கபால சூல வித்தக வீர போற்றி
அருண்மலி யிடப்பான் மேய வஞ்சனக் கண்ணி போற்றி
பொருண்மலி யாற்றூர் மேய புநிதநின் பாதம் போற்றி. (உ௩)

காரண பரமா னந்த கனககோ தண்ட வெள்ளை
வாரண கிருபா நோக்க மந்திர வுருவ வாசி
ஆரண சுயம்பு நாத வஞ்சனக் கண்ணி பாக
பூரண வாற்றூர் மேய புநிதநின் பாதம் போற்றி. (உ௪)

தேவமந் தார வாச தேவேச வியோம கேச
ஆவவென் றியாங்கண் முன்னு ளடையநஞ் சயின்ற கண்ட
சேவசங் கரவி சால திரிபுராந் தகநால் வேத
நாவநல் லாற்றூர் மேய நம்பநின் பாதம் போற்றி. (உ௫)

## அவர் வேண்டி வரம் பெறுதல்.

எனத்துதி செய்து போற்று மிணர்த்துழாய் மாயோன் முன்பு
கனத்தினுங் கரிய கண்டக் கண்ணுதற் சாமி தோன்றி
மனத்தினுன் னியது சொற்றி யென்றனன் வானோர் மாற்றூர்
இனத்தினல் வருந்தா நின்ற திரிக்குமா றருளல் வேண்டும். (உ௬)

அன்றியு மடியே னிந்த வாற்றூரி னிருக்கை கொண்டு
துன்றிய தமரி னோடுஞ் சுகத்தினி திருக்க வேண்டும்
என்றுவிண் ணப்பஞ் செய்தா னிமையவர் பகையைச் சாடி
வென்றிடு வலியு னக்குத் தந்தன மேவக் கோடி. (உ௭)

---

உ௪. கனக கோதண்ட - தங்கவடிவமான வில்லையுடையாய். வெள்ளை வாரண - வெண்மையான அயிராவணமென்னும் யானையை யுடையாய்; வாரணம் - யானை. வாசி ஆரண - வேதத்தைக் குதிரை யாக உடையாய்.

உ௫. வியோமகேச - ஆகாசமாகிய கேசத்தை உடையாய். ஆவ - ஐயோ. சேவ - இடபவாகனத்தை யுடையாய்; சே - இடபம்.

உ௬. கனம் - மேகம். மாற்றூர் இனத்தினல் - பகைவரான அசுரர் கூட்டத்தினல். வானோர் வருந்தாநின்றதையென இயைக்க.

உ௭. கோடி - கொள்வாய்.

விழைசுகத் திருக்க வேண்டு மென்றுநீ வேண்ட லாலே
தழைசுகா சீன நாரா யணனெனு மொருபேர் தாங்கி
மழைதவழ் நமது கோயிற் கழற்றிசை மருவி வாழ்தி
கழைமொழித் திருவாழ் மார்ப வென்றனன் கருணை மூர்த்தி. (உஅ)

அவர் அவுணரை அழித்து ஆற்றார் வருதல்.

ஐயனீ தருளிச் செய்ய வடியனேன் பிழைத்தே னென்று
மையவா மேனி மாயோன் விடைகொடு வணங்கிப் போந்து
பொய்யவா மவுணர்ச் சாடி வானவர் புழுக்க மாற்றி
மெய்யர்வா ழாற்றூ ருற்றான் மேதகு மகிழ்ச்சி பொங்க. (உகூ)

அண்ணலன் றுரைத்த தேத்தே யாலய மொன்று கொண்டு
நண்ணலர் துணுக்குற் றஞ்ச நகுவலி விடுவச் சேனன்
வண்ணவன் கருடன் முன்னோர் பணிதலை வாய்ந்து நிற்பப்
பெண்ணமு தனைய மாவோ டமர்ந்தனன் பெயரா னாகி. (௩0)

தளிர்செய்மந் தார நீழற் றம்பிரா னடிகள் போற்றி
மிளிர்சுகா சீன நாரா யணப்பெயர் மேய மாலைத்
தெளிதரப் போற்று வோர்கள் வைகுந்தஞ் சேர்ந்து வாழ்வார்
அளிமிகு தவத்தீர் நந்தி யருச்சித்த கதையுஞ் சொல்வாம். (௩க)

ஆகத் திருவிருத்தம் - சகூக.

---

# கஉ. நந்தி அருள்பெறு படலம்.

கதைச் சுருக்கம்.

[சிலாதரென்னுமொருமுனிவர் புறாவைப் போலப் பருக்கைக்கற்களையே உணவாகக் கொண்டு சிவபெருமானை நினைந்து தவம் புரிந்தார். அவர் தவத்துக்கு மகிழ்ந்த சிவபிரான் அருள்செய்ய அவருக்கு ஒரு புத்திரர் பிறந்தார். அவருக்கு நந்தியென்னும் பெயரிட்டுச் சிலாதர் வளர்த்துவந்தார். ஒருநாள் சிலாதர் நந்தியை நோக்கி, "சிவபெரு

---

உஅ. அழற்றிசை - அக்கினிமூலையில்; தென்கிழக்குத் திசையில். கழை - கரும்பு.

௩0. தேத்து - இடத்து; தேம் - இடம். பணி - கட்டளை,

மானைப் பூசித்தால் ஞானமும் நினைத்த எப்பொருளும் எளிதில் உண்டாகும்; அவரை ஆற்றூரென்ற சிறந்த தலத்தே பூசை புரிந்து அருள் பெற்று வருக" என்று கூறினார். நந்தி அவர் கூறியதை உட்கொண்டு வணங்கி ஆற்றூரையடைந்து சிவபிரானை வழிபட்டுத் துதித்தனர். சிவபிரான் அருள்சுரந்து அவர்முன் தோன்றி, "நினக்குச் சிவஞானம் உண்டாகுக; நீ சைவசமய முதற்குருவாவதோடு நமது கைலாயத்தைக் காக்கும் அதிகாரத்தையும் பெறுவாயாக" என்று அருள் புரிந்தனர். அன்று முதல் நந்தியெம்பெருமான் ஞானாசிரியருள் முதல்வராக வீற்றிருந்து கைலைக் காவலையும் பூண்டனர். அவருடைய கட்டளையின்படி அளவில்லாதவர் ஆற்றூர்க்கு வந்து சிவபிரானை வழிபட்டு அருள் பெற்றனர்.]

---

## சிலாத முனிவர் தவம் புரிதல்.

### (கலிவிருத்தம்)

அஞ்சன நோக்கி யம்மையோர் பாகச்
செஞ்சடை மோலித் தேவர்பி ரானை
நெஞ்சு ளிருத்தி நீடு சிலாதன்
வஞ்சமி லாத மாதவ மாற்ற. (க)

தீய சுரத்திற் கல்லிரை தேர்ந்தே
ஆய புருவிற் கல்லுண வாக
மேய தவத்தின் மேன்மை யுணர்ந்து
பேயுட னுடி பேரருள் செய்தான். (உ)

## நந்தி அவதரித்தல்.

நங்கள் பிரானார் நல்லருள் செய்ய
அங்கண றும்பா லாழி யுதித்த
திங்களின் மேன்மைச் சிலாத முனிக்குத்
துங்கம் விளங்கத் தோன்றிய தோர்சேய். (ங)

---

கஉ. நந்தி அருள்பெறு படலம்

க. சிலாதன் - திருநந்தி தேவருடைய தந்தையார்; கல்லையே உணவாகவுடையவரென்பது இதன் சொற் பொருள்.

உ. சுரம் - பாலைநிலம். கல்இரை தேர்ந்து - பருக்கைக்கல்லாகிய உணவை அறிந்து. புருவின் - தூதுணம்புறுவைப்போல.

ங. பாற்கடலிற் றோன்றிய சந்திரனைப் போலச் சிலாதமுனிவருக்கு ஓர் ஆண் குழந்தை தோற்றிற்று,

தந்தி யுரித்துத் தன்றிரு மேனி
முந்தி யணிந்த முன்னவ னுயை
அந்தி நிறத்தம் மானருள் போற்றி
நந்தி யெனும்பே ரிட்டு நயந்து. (ச)

வாரி யெடுத்து மார்பி னணைத்துச்
சீரிய காதல் சிந்தை நிரம்பக்
கூரிய தேர்ச்சிக் கோதி றவத்தோன்
ஏரிய னந்திக் கிதுரை செய்யும். (ரு)

## சிலாதர் சிவபூசை செய்யும்படி நந்திக்குக் கூறல்.

தண்ணிய ஞான சாந்தம் விராவும்
எண்ணிய யாவு மெண்மையி னெய்தும்
புண்ணிய முக்கட் பூரண நாதன்
அண்ணிய பொற்றாட் பூசனை யாற்றின். (சு)

மேதகு பூசை விசேட தலத்தே
ஆதர வோடு மாற்றின் விசேடம்
மாதல மென்று வகுப்பது மண்மேற்
காதல்செ யாற்றூர் கண்டுகொண் மைந்த. (எ)

அன்ன தலத்தை யடைந்து பிரானை
நன்னர் வணங்கிப் பூசை நவின்றே
என்னவு மங்க ணெய்துதி யென்று
தன்னமர் மைந்தற் கோதினன் முதை. (அ)

## நந்தி ஆற்றூரடைந்து பூசித்தல்.

வசைதபு தந்தை வார்த்தை விரும்பி
நசையொடு போற்றி நந்தி யெழுந்து
மிசையுல கன்றி வேறல வென்று
திசைபுக ழாற்றூர் சென்றனன் மாதோ. (கூ)

மனனெக லோடு மண்ணி படிந்து
கனகயி லாய கங்கையுண் மூழ்கி

---

சு. ஞானமும் சாந்தமும். எண்மையின் - எளிமையின். ஆற்றின் விராவும், எய்துமென்க.

அ. என்னவும் - எல்லாப் பொருள்களையும்.

கO. கயிலாய கங்கை - சன்னிதியிலுள்ள சிவதீர்த்தம். முனகர் - கீழ்மக்கள்.

TIRUVANMIYUR, MADRAS

அனகன் வயங்கு மாலயம் புக்கான்
முனகர் விரும்பா முன்றில் பணிந்தான். (௧௦)

மஞ்சனம் வாச மாமலர் சாந்தம்
எஞ்சலி லாமற் றியாவையுந் தெவ்வி
அஞ்சன நோக்கி பாகனை யண்மி
நெஞ்ச முவப்பப் பூசை நிகழ்த்தி. (௧௧)

## நந்தி சிவபெருமானைத் துதித்தல்.

ஆரணன் மாயோ னாதியர் காணாப்
பூரண வாழ்வே போற்றவெவைக்கும்
காரண மாய கண்ணுதன் மூர்த்தி
தாரண வுன்றாள் சார நினைந்தேன். (௧௨)

மன்னுமந் தார வனத்தமர் வள்ளால்
உன்னு மவர்க்கு ளோங்கொளி யாவாய்
இன்னு மறைக்கு மெட்டரி யோயுன்
பொன்னுமொவ் வாத்தாள் பூண நினைந்தேன். (௧௩)

அல்ல லகற்றி யாட்கொள வல்லாய்
மல்லன்மந் தார வனத்தமர் தேவே
சொல்லரு மின்பச் சூழ்கட லேயுன்
நல்ல மலர்த்தா ளடைபு நின்றேன். (௧௪)

மறையவர் மாதை வேட்ட மணாளா
நிறையுமந் தார வனத்தமர் நேசா
சிறைமயி லூருஞ் செல்வனை யீன்றாய்
நறைமலர் நின்றா ணண்ண நினைந்தேன். (௧௫)

## சிவபிரான் நந்திக்கு அருள் புரிதல்.

என்று துதித்துப் போற்றிடு மேல்வை
குன்று குழைத்த கோனெதிர் தோன்றி
நன்று னுவந்தே நம்முணர் ஞானம்
ஒன்றுக நின்பா லூழிக டோறும். (௧௬)

௧௧. தெவ்வி - கைக்கொண்டு.
௧௨. தார் அணவு உன்தாள்.
௧௬. உவந்தேம் - மகிழ்ந்தேம்.

முடிவரு ஞான முதற்குரு வாகிக்
கடிதலி லாநங் கயிலையுங் காத்தி
பொடியணி மேனிப் புத்திர வென்று
கொடிவிடை யாளி கூறி மறைந்தான். (கஎ)

மறைதனு நெஞ்ச மகிழ்ந்து பணிந்து
குறையறு ஞானக் குரவனு மாகிக்
கறையற மிளிருங் கயிலையுங் காப்பான்
நிறையரு ளுற்ற நின்மல நந்தி. (கஅ)

முறைமையி னெங்கண் முதற்குரு வாய
கறைதபு நந்தி கழறுரை கொண்டு
மிறைதப வெண்ணிலர் மேவின ராற்று
இறையடி போற்றி யிலங்கரு ளுற்றார். (கக)

ஞானம் விழைந்தவர் நம்பர ளுற்றார்
ஆன பெருந்தல மண்ணுதல் வேண்டும்
ஈனவெம் பாச மிரித்தரு ளெய்தி
மோன நிரம்ப முயன்ற தவத்தீர். (உo)

ஆகத் திருவிருத்தம் - சஅக.

---

# கரு. சங்கர மறையோன் முத்தியடைந்த படலம்.

கதைச் சுருக்கம்.

[ஆற்றூரில் சுகேதுவென்னும் ஓரந்தணனுக்குச் சங்கரனென்னும் ஒரு குமாரன் இருந்தான். அவன் வேதமுதலியவற்றை முறையே பயின்று சிவபெருமானே பரம்பொருளென்று தெளிந்தான்; திருநீற்றையும் கண்மணியையும் பூண்டு பஞ்சாட்சர ஜபத்தோடு சிவஸ்தல தரிசனம் செய்துவந்தான்.

---

கஅ. ஞானக்குரவன் - ஞானாசிரியர்.

கக. கழறு உரை - சொல்லிய வார்த்தைகளை. மிறை - நடுக்கம். எண்ணிலர் - அளவற்றவர்கள்.

இங்ஙனம் இருக்கையில் ஒருநாள் அவன் தன் தாய் தந்தையருடன் கொள்ளிடத்தைக் கடந்து சிதம்பரமடைந்து சிவகங்கைத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ நடராசப்பெருமானைத் தரிசித்து மனம் உருகினான்; அப்பொழுது அவனுக்குண்டான ஆனந்தத்தால், "இந்த நடனத்தை நாடோறும் தரிசிப்பேன்; அங்ஙனம் தரிசியாத நாளில் என் உயிரை விடுவேன்" என்ற உறுதி பூண்டு ஆற்றூர்க்கு மீண்டு வந்து நாடோறும் விடியற்காலையிலெழுந்து சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராசப் பெருமானைத் தரிசித்து மீண்டு மாலையில் ஆற்றூர்க்கு வருவானாயினான்.

இங்ஙனம் அவன் ஒழுகும் நாளில், ஒருநாள் சிவபெருமான் அவனுடைய பக்தியின் தன்மையை வெளிப்படுத்தும்பொருட்டுக் கொள்ளிடத்தில் மிக்க வெள்ளம் வரும்படி செய்தார். அங்ஙனம் வந்ததை யறிந்தும் அவ் வந்தணன் மனஞ்சலியாமல் ஒரு புணையைக் கைக்கொண்டு நீந்தி ஆற்றைக் கடந்து சிதம்பரஞ்சென்று தரிசனம்செய்தான். அப்பொழுது மாலைக் காலம் வந்துவிட்டது. அவன் தன் ஆத்மார்த்தபூஜையை ஆற்றூரிலேயே வைத்து விட்டு வந்தானாதலின் அங்கே மாலைக்குள்ளேபோக இயலாதவனாகிப் பசியால் வருந்திச் சிதம்பரத்திலேயே இருந்தான். அப்பொழுது சிவபிரான் அருளால் அவனுக்குச் சிறுதுயில் வந்தது. அவனது கனவில் ஸ்ரீ நடராஜப் பெருமான் எழுந்தருளி, "இன்றுமுதல் நீ இங்கே வந்து துன்புறுதலைத் தவிர்க. நீ குடியிருக்கும் ஆற்றூரிலேயே நமது நடனதரிசனத்தைக்கண்டு இன்புறுவாயாக. மந்தாரவனமும் சிவதீர்த்தமும் அத்தலமும் முறையே தில்லைவனத்திலும் சிவகங்கையிலும் இத்தலத்திலும் சிறப்புடையன. அங்கே முன்பு சோழேந்திரனென்பவனுக்காக நாம் நடனம் செய்தோம்; உனக்காகவும் இப்பொழுது நடனம் புரிவோம். நீ தரிசித்து இன்புறுவாயாக" என அருளி மறைந்தனர். அப்பெருமான் திருமொழிகளையுணர்ந்து விழித்தெழுந்த சங்கரமறையவன், "சிவபிரான் திருவருள் இருந்தபடி என்னே!" எனவியந்து தெளிந்து அப்பொழுதே ஆற்றூரையடைந்தான். அடைந்து கைலாச கங்கையில் ஸ்நானம்செய்து ஸ்ரீ சொன்னயான நிரோதனரைத் தரிசித்துத் துதித்தான். சிவபிரான் அவனுக்கு முன் எழுந்தருளி அங்குள்ள சபையில் திருநடனம் செய்தருளினார். அதனைக் கண்ணாரத் தரிசித்து அவ்வந்தணன் அளவிலா மகிழ்ச்சியுற்றான். அன்று முதல் அவன் அத்தலத்தை அகலாமல் ஆனந்த நடன தரிசனம் செய்துகொண்டு பலவகையான திருப்பணிகளை இயற்றி வாழ்ந்திருந்து முடிவில் சிவபிரான் திருவடிநிழலை யடைந்தான்.]

சூதமுனிவர் கூற்று.

(தரவு கொச்சகக் கலிப்பா)

ஓங்குபுனல் வளவாற்றூர்த் தேவர்பெரு மான்சரிதம்
ஒங்குபெருங் காந்தமுரைத் ததையுரைத்தா மிதுகாறும்
வீங்குபுகழ்ப் பிரமாண்டம் விளம்புகதை யும்புகறும்
பாங்குறுவீர் கேண்மினெனச் சூதமுனி பகருவான். (௧)

சங்கரனென்னும் அந்தணன் வரலாறு.

மாலாத பெருந்தவத்து மறையவர்வா ழூற்றூரிற்
றோலாத கலைபுணர்ச்சிச் சுகேதுவெனு மொருமறையோன்
காலாத தவத்துதித்தோன் கருதுமற மன்றிமறம்
சாலாத சிவப்பிரியன் சங்கரனென் றொருவனுளன். (௨)

அன்னவனுன் மறையிருமூன் றங்கமிரோன் பானென்னச்
சொன்னபுரா ணங்கண்மற்று முள்ளதுக ளறுகலைகள்
என்னவுநன் கினிதுணர்ந்தே யேற்றமிகு திருவருளாற்
பன்னரிய பரப்பிரமம் பரசிவனே யெனத்தெளிந்தான். (௩)

பூதிநிறை தரப்பூசிப் பொலிதருகண் மணியும்பூண்
டாதிமுதல் வடிவாய வஞ்செழுத்து முச்சரிப்பான்
பாதிமதி முடியணியப் பரமனம ரிடங்கடோறும்
கோதியலா வகைபோய்ப்போய்க் கும்பிட்டு வழிபடுவான். (௪)

சங்கரமறையோன் சிதம்பரம்சென்று நடராசப்
பெருமானைத் தரிசித்தல்.

பரவுறுமிவ் வாறுவழி படுமொருசங் கரமறையோன்
உரவுறுதாய் தந்தையரு முடன்மேவ வெழுந்தொருநாள்

---

௧௩. சங்கரமறையோன் முத்தியடைந்த படலம்.

௧. பிரமாண்டம் - பிரமாண்டபுராணம். புகறும் - சொல்வோம்.

௨. மாலாத - மயங்காத. காலாத - நீக்கப்படாத. மறம் சாலாத - பாவம் பொருந்தாத.

௩. இருமூன்று அங்கம் - ஆறு அங்கங்கள். உள்ள கலைகள்.

௪, பூதி - விபூதி. ஆதிமுதல் - சிவபெருமானது. அப்பரமன் - அந்தச் சிவபிரான்.

அரவுறுசெஞ் சடைமோலி யண்ணலார் தனிநின்று
விரவுறுநன் னடமாடு மிக்கசிதம் பரம்புகுந்தான். (ரு)

பொங்குமொரு சிவகங்கைப் புனலாடி யுட்புகுந்தே
எங்குநிறை பேரொளியா யின்பமா யம்பலத்துட்
டங்குமொரு தாள்வீசித் தனிநின்று நடமாடும்
மங்குதலி லாதவருள் வள்ளலெதிர் போய்ப்பணிந்தான். (சு)

ஒருங்குலக மெளிதீன்ற வொண்முகங்கட் கடைபாயப்
பெருங்குலமா முனிவர்முதற் பெரியோர்க ளெக்குருக
அருங்குளிர்மென் னகையரும்ப வம்பலநின் றினிதாற்றும்
நெருங்குசுவைத் திருநடன நேர்நோக்கி மகிழ்சிறந்தான். (எ)

தீராத மகிழ்ச்சியெழத் திளைத்தலாற் றிருமறையோன்
பேராத காதன்மிகப் பிறங்குறுமித் திருநடனம்
பாராத தினத்துயிர்மாய்ந் தொழிவலெனப் பகர்ந்தெழுந்து
நேராத வளம்பொழிய நிலவுந்தன் னூர்புகுந்தான். (அ)

## சங்கரமறையோன் நாள்தோறும் சிதம்பரதரிசனம் செய்தல்.

ஒன்றுமிரு முதுகுரவ ருடனமராற் றூர்புகுந்தான்
அன்றுமுதல் வைகறைமுன் விரைந்தெழீஇ யாறுகடந்
தென்றுமிளிர் தில்லைவன மினிதெய்திச் சிவகங்கைத்
துன்றுசுவைப் புனலாடிச் சுடருமணி மன்றடைந்து. (கூ)

தோலாத வானந்த நடங்கண்டு தொழுதேத்தி
மாலாத கருத்தினனாய் மாலையிற்றன் னூர்புகுந்து
காலாத தன்பூசைக் கடனுமுடித் தினிதருந்தி
மேலாத வனிகர்வான் சற்றுறங்கி விழித்தெழுவான். (கO)

## கோள்ளிடத்தில் வேள்ளம் வருதல்.

இவ்வாறு தினந்தோறு மிதுநியம மாக்கொண்டு
செவ்வாய்மைத் திருமறையோன் சிறப்பநடந் திடுநாளில்
வெவ்வாயொண் மழுப்படைக்கை வித்தகமா தேவனிவன்
ஒவ்வாத பத்திமையை வெளிப்படுத்த வுளங்கொண்டான். (கக)

---

எ. ஒண்முகத்தில் சிவபிரானுடைய கட்கடை பாய.

கூ. இருமுதுகுரவர் - தாய்தந்தையர். வைகறைமுன் - விடியற் காலத்துக்கு முன்பு. தில்லை - ஒருவகைமரம்.

கO. மாலாத - மயங்காத.

மழைமுகில்யா வும்புகுந்து வாரிவறப் பக்குடித்துத்
தழைபுனற்று ரைகளெங்குஞ் சளசளவோ தையிற்பொழிந்து
பிழைதபுகொள் ளிடவகத்தும் புறத்துமிகு பெருவெள்ளம்
குழைதரமண் ணிமிர்ந்தோங்கிக் குல்வுவகை செய்வித்தான். (௧௨)

சங்கரமறையோன் ஆற்றை நீந்திச்சென்று
சிதம்பர தரிசனம்செய்தல்.

அன்னபொழு தத்துமனஞ் சலியாது யருமறையோன்
மன்னவொரு புணைகொண்டு வயங்குபெரும் புனனீந்திச்
சொன்னமணி மன்றுடுஞ் சோதிநடந் தரிசித்தான்
இன்னலுற மாலையும்வந் தெய்தியதா லப்பொழுது. (௧௩)

சங்கரமறையோனது கனவிற் சிவபிரான் தோன்றிக் கூறுதல்.

தன்பூசை யாற்றாரிற் றங்குதலா லங்கடைய
அன்பூறு மனமறையோன் முடியாமே யத்தலத்தே
துன்பூறு பசித்தழலுஞ் சுட்டுவருத் திடவமர்ந்தான்
இன்பூறு பரனருளா லெய்தியது சிறுதுயிலும். (௧௪)

துன்னியசங் கரமறையோன் சொப்பனத்தி லெழுந்தருளி
மன்னியவம் பலக்கூத்த ரருள்செய்வார் மாமறையோய்
முன்னியநீ குடியிருக்கு மூதூரில் யாம்புரியும்
இன்னியமா நடங்காணூஉ வின்புறுக வின்றுமுதல். (௧௫)

செறிமலர்மந் தாரவனந் தில்லைவனத் தினுமதிகம்
எறிதிரைவண் சிவதீர்த்த மிச்சிவகங் கையிற்சிறந்த
தறிதருமத் தலநாளு மித்தலத்து மதிகமவட்
குறிதருசோ ழேந்திரற்காக் குலவுநட முன்செய்தோம். (௧௬)

---

௧௨. மழைமுகில் - மழைபெய்தலையுடைய மேகம். "சளசள வெனமழைத் தாரை கான்றன" (கம்ப. திருவவதார. 46.) கொள்ளிட அகத்தும் - கொள்ளிட நதியின் உட்புறத்தும். மண் குழைதர.

௧௩. பொழுதத்து - பொழுதில். புணை - தெப்பம். சொன்னம் = ஸுவர்ணம் - தங்கம். மாலை - மாலைக்காலம்.

௧௪. தன்பூசை - ஆன்மார்த்த பூசை. அங்கு அடையமுடியாமே யென்க. பசித்தழலும் : உம்மை, இறந்தது தழுவிய எச்சவும்மை ; கொள்ளிட நதிவருத்துவதேயல்லாமல் என்பது முன் உள்ளது.

௧௫. இன்னியம் - இனிய வாத்தியங்கள். காணூஉ - கண்டு.

௧௬. தில்லைவனம் - தில்லைமரங்கள் செறிந்த காடு. அவண் - அவ்விடத்தே.

அத்தலத்தே விழையுனக்கு மானந்த நடஞ்செய்வாம்
கைத்தலத்தா மலகமெனக் கண்டுகளித் தின்புறுதி
முத்தலத்து மதுபோலுந் தலமில்லை முழுமறையோய்
சித்தமுவந் தடைதியெனச் செப்பிமறைந் தனரையர். (கள)

## சங்கரமறையோன் ஆற்றூர் மீண்டு சிவபிரானை வழிபடுதல்.

ஐயர்மொழி யுணர்ந்துவிழித் தருமறையோ னதிசயித்துச்
செய்யரரு ளிருந்தபடி யிவ்வாறே வெனத்தெளிந்து
வெய்யரடை வருமாற்றூர் மேவினு னப்பொழுதே
கையருறுக் கயிலாய கங்கைமா தடம்படிந்து. (கஅ)

காதன்மிக வெண்ணீறுங் கண்மணியுந் தரித்தெழுந்து
சீதளமந் தாரவனத் திருக்கோயில் வலஞ்சூழ்ந்து
போதமிகப் பணிந்தெழுந்து புத்தேளிர் காணரிய
நாதர்திரு முன்புகுந்தா னுடுபுகழ் மாமறையோன். (கக)

கரைந்துகரைந் துள்ளுருகிக் கண்ணருவி நீர்பாய
விரைந்துமல மாதிகளும் விடைகொண்டு புறனடப்ப
வரைந்துமறை காணரிய மாமுதலைக் கண்டுமகிழ்ந்
திரைந்துதுதி முழக்குவா னெய்தரும்பத் தியிற்சிறந்தோன். (உO)

## சங்கரமறையோன் செய்த துதி.

சயசயகங் காதரசம் போமகா தேவபர
சயசயம கேசசரு வேசசிவ சங்கரவோ

---

கள. கைத்தலத்து ஆமலகம் - உள்ளங்கை நெல்லிக்கனி. முத்தலத்தும் - சுவர்க்கம், பூமி, பாதலமென்னும் மூன்று உலகத்தும்; தலம் - ஸ்தலம்; உலகம்.

கஅ. செய்யர் - செந்நிறத்தையுடைய சிவபெருமான். வெய்யர் - தீவினையைச் செய்யும் கொடியோர். கையர் - கீழ்மக்கள்.

கக. போதம் - அறிவு. திருமுன் - ஸந்நிதி.

உO. மலம் - ஆணவமலம். விடை கொண்டு: "வினைக்கு விடை கொடுப்பாம்" (பிரபு. துதிகதி.) வரைந்து - அளவிட்டு. முதலை - சிவபெருமானை.

உக. சய - சயமுண்டாகக்கடவது; 'வெல்க' என்பர் திருவாதவூரடிகள். சயசய: "உயர்வுறு முழுதல குடையாய் சயசய, மயிலியன் மடமொழி மதிநுத லுமையவள், கயல்விழி மலைமகள் கணவா சயசய, தயவுடை யடியவர் தாயே சயசய" திருக்காளத்திப் புராணம், 30.

சயசயச தாசிவதற் பரசத்தி யோசாத
சயசயமந் தாரவனந் தழைத்தருளுந் தனிமுதல்வ. (உக)

போற்றிபுர தகனபர போற்றியர கரசம்பு
போற்றிநிரா மயபுனித போற்றிநிரஞ் சனபரம
போற்றிநிரா லம்பசிவ போற்றிநிருத் தனசுகுண
போற்றிமலர் மந்தார வனத்தமரும் புண்ணியவோ. (உஉ)

நமகருணைப் பிரவாக நமகருணைப் பிரகாச
நமகருணைப் பெருவடிவ நமகருணைக் காலயமே
நமவகண்ட பூரணமே நமநடன புரவாச
நமசருவ காரணமே நமவடியர் பெரும்பேறே. (உ௩)

## சிவபிரான் திருநடனம் புரிதல்.

என்றுதுதித் திடுமறையோ னெதிர்நின்று மெழுந்தருளித்
தொன்றுதடுத் தாண்டருளிச் சோழன்மகிழ் தரநடித்தார்
மன்றுநிறை தரமேவி வானவரா தியர்பரவ
நின்றுமறை தொழுமீட்டு நிலவுநட மாடுவார். (உச)

சடையாடப் பிறையாடத் தழலாடத் திருவரைப்புல்
உடையாட விருமுனிவ ருவந்தாட வுமைமேற்கட்
கடையாட வுலகமெலாங் கலந்தாடக் கமழ்கொன்றைத்
தொடையாட வம்பலத்துத் துலங்குநட மாடுவார். (உரு)

## சங்கரமறையோன் நடனதரிசனங்கண்டு உவத்தல்.

ஐயனிவ்வா றம்பலத்து ளானந்த நடமாட
மையன்மதி யாமறையோன் மகிழ்ந்துதாழ்ந் தெழுந்தேத்திச்
செய்யனு யினனுயே னென்றுதிரு வருள்போற்றித்
தையனு வினன்முதலோர் சாரரிய வுவப்புற்றான். (உசா)

---

உஉ. போற்றி - பாதுகாத்தருள்க. நிராமய - நோயில்லாதவனே.

உ௩. நம - நமஸ்காரம். கருணைப்பிரவாக - அருள்வெள்ளமே.

உச. தொன்று - முன்பு.

உரு. புல் உடை - புலித்தோலாகிய ஆடை; புல் - புலி. கட்கடை ஆட - கடைக்கண் செல்ல.

உசா. ஆனந்த நடமென்பது பரமானந்த தாண்டவத்தை. மையலை மதியாத. செய்யன்-செம்மையுடையேன். தையல் நாவினன் - கலைமகளை நாவின்கண்ணே உடைய பிரமதேவர்.

## திருப்பணிகள் முதலியன புரிதல்.

அன்றுமுதற் றிருமறையோ னத்தலத்தை யகலானாய்
நன்றுபுரி யானந்த நடந்தரிசித் துவப்புற்று
வென்றுமிளி ராலயமேன் மேலுமழ குறப்புதுக்கிப்
பொன்றுதலில் புகழ்க்கும்பப் புண்ணியநீ ராட்டுவித்து. (உஎ)

சிறந்தசோ மேந்திரன்போற் றிருவிழாச் சிறப்புமுதல்
அறந்தவா வகையாற்றி யன்புமலி நடநவிலும்
உறந்தவா ரருட்பெருமா னொருருவ மம்மையொடு
நிறந்தவா வகைகண்டு நெஞ்சுவப்பச் சேவித்து. (உஅ)

பழையமறை முதலாய பரமனா ரருள்சிறப்ப
விழையவள வறுபணிகண் மீட்டும்பன் னாள்புரிந்து
தழையவமை சிவதீர்த்தத் தடங்கோட்டிற் சிராத்தமுமுட்
குழையவியற் றுபுபிதிரர் தோன்றியுவப் பக்குளிர்ந்து. (உகூ)

## சங்கரமறையோன் சிவபிரான் திருவடியடைதல்.

பன்னாளு மித்தகைய பணியன்பிற் புரிந்துதவ
நன்னாமத் திருமறையோ னலங்கொடிரு வடியடைந்தான்
எந்நாளு மத்தலஞ்சார்ந் தினியசிவ தீர்த்தப்பால்
மன்னுவண் பிதிரர்கட னாற்றுவர்மாண் புறுதக்கோர். (ஙo)

ஆகத் திருவிருத்தம்—நகக.

---

உஎ. கும்பப்புண்ணியநீர் ஆட்டுவித்து-கும்பாபிடேகம்செய்வித்து.

உஅ. அறம் தவாவகை - சிவதருமம் கெடாதபடி. உறந்த - மிகுந்த. நிறம் - ஒளி. கண்டு - வார்ப்பித்துப் பிரதிட்டை செய்து.

உகூ. பழைய மறை - இருக்கு முதலிய நான்கு வேதங்கள்; பழைய மறை யென்றார் தேவாரம் முதலியன புதிய மறையாதலின், கோடு - கரை. உள் குழைய - மனம் உருக.

ஙo. தவ நன்னாமத் திருமறையோன் - தவத்தினையும் நல்ல புகழையுமுடைய சங்கரமறையோன். மன்னு - மன்னி; இருந்து.

# கச. முனிவர் முதலியோர் பூசித்த படலம்.

## கதைச் சுருக்கம்.

[ஆற்றூரிற் சிவபெருமான் சோமேந்திரனுக்காகவும் சங்கரமறையவனுக்காகவும் திருநடம் புரிந்தருளிய செய்தியைக் கேட்ட சில முனிவர்கள் மகிழ்ந்து இத்தலத்தை அடைந்தார்கள். உடனே சிவதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து திருக்கோயிலை வலம்வந்து மந்தாரவனேசரையும் அஞ்சனாட்சியம்மையையும் நடராசமூர்த்தியையும் தரிசனம்செய்து வேத மந்திரங்களால் துதித்து ஆனந்தமுற்றுத் தம் இருப்பிடத்துக்கு மீண்டு சென்றனர்.

பிரமதேவர் ஒருமுறை இத்தலத்துக்கு வந்து வழிபட்டுத் தாம் திலோத்தமையை விரும்பிய தோஷத்தினின்றும் விடுபட்டார்.

ஒருசமயம் திருமாலுக்கு வாகனமாகிய கருடன் இறுமாப்புற்றபொழுது அதனை யறிந்த இடபம் தன்னுடைய மூச்சுக்காற்றினால் அதை வருத்தத் தொடங்கியது. அப்பொழுது கருடன், சிவபிரானை யெண்ணி ஓலமிட அப்பெருமான் இடபத்தைக் கூவிக் கருடனை விடுவித்தார்; பிறகு இடபத்தை நோக்கி, "நீ தீமையொன்று மில்லாத கருடனை வீணாகத் துன்புறுத்தின பாவந்தீரும்வண்ணம் ஆற்றூர்க்குச் சென்று எம்மைப் பூசிப்பாயாக" என்று கட்டளையிட்டனர். அங்ஙனமே அவ்விடபம் ஆற்றூர்போந்து மந்தாரவனேசரைப் பூசித்துப் பாவம் நீங்கிப் பழைய நிலையை அடைந்தது.

இன்னும், ஐயனார், துர்க்கை, இந்திரன் முதலியவர்கள் இத்தலத்தில் வழிபட்டு நற்பயன் பெற்றனர்.

இங்ஙனம் சூதமுனிவர் திருவாய்மலர்ந்தருளக் கேட்ட நைமிச முனிவர்கள் மிக மகிழ்ந்து ஆற்றூர் சென்று தரிசனம் செய்து களித்தனர்.]

## முனிவர்கள் ஆற்றூர்வந்து பூசித்தல்.

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.)

வளவனு ரன்பின் முன்னு மறையவ னன்பிற் பினனுமப
பளகற நடனஞ் செய்தான் பண்ணவர் பெருமா னென்று
தளர்வறு முனிவர் கேட்டுத் தாவரு மகிழ்ச்சி பூத்துக்
கிளர்தரு மாற்றூ ரென்னுங் கேடிலா நகர்வந் துற்றூர். (க)

அந்நகர் வளங்க ணோக்கி யதிசயித் துவகை பூத்து
முன்னருஞ் சிவதீர்த் தத்து முழுகிமா முன்றி ருழ்ந்து
மின்னகு கோயில் சூழ்ந்து விண்ணவர் பெருமான் முன்பு
தன்னமர் காத லோடு சென்றனர் தரிசித் தாரே. (உ)

திருந்துபல் லுலகு மீன்ற தேவியஞ் சனக்க ணம்மை
பொருந்துபொற் றுளும் போற்றிப் புண்ணிய மன்று ளாடும்
மருந்துமுன் சென்று தாழ்ந்து மனங்கரைந் துருகி வேத
அருந்துதி நிரப்பி யோவாப் பரவச மடைந்தா ரன்றே. (ங)

முனிவரர் பலரு மெம்மான் முனிவரு நடனங் கண்டு
கனிதரு முளத்த ராகிக் கரையறு மன்பு பொங்க
இனியவா னந்த முற்று ரின்னடம் புரியு மாறு
புனிதமா ரன்பு செய்த விருவரை யும்பு கழ்ந்தார். (ச)

## பிரமதேவர் வழிபட்டுப் பேறுபெறுதல்.

உறுவா ரிவ்வா றேத்தி யுவந்துதம் மிருக்கை புக்கார்
மறுவறு மலரின் மேயோன் மாண்புறப் புகுந்து போற்றித்

---

கச. முனிவர் முதலியோர் பூசித்த படலம்.

க. வளவன் - சோழேந்திரன். மறையவன் - சங்கர மறையோன். பளகு - குற்றம். பண்ணவர் பெருமான் - மகாதேவர். தாவரு - கேடில்லாத.

உ. முன்றில் - சந்நிதியில்.

ங. மருந்து - நடராசப்பெருமான். ஓவா - ஒழியாத.

ச. முனிவு அறுநடனம் - வெறுத்தலில்லாத நடனம். இருவர் - சோழேந்திரன், சங்கரமறையோன்.

ரு. உறுவரர் - முனிவர்கள். தெறுதொழில் - வருத்துஞ்செயல், அறுதி - முடிவு.

தெறுதொழிற் கொடிய வாட்கட் டிலோத்தமை விழைந்த தோடம்
அறுதிசெய் துய்ந்தா னைய னருளடைந் திருக்கை யுற்றான். (ரு)

## இடபம் பூசித்துப் பேறுபெறல்.

ஒண்மையார் சிறையும் வெய்ய வுரகரஞ் சுரனு முள்ளோன்
எண்மையா நினைந்து மாயற் சுமத்தலா விறுமாப் புற்றான்
வண்மைசா லனைய மாயோன் மற்றது தெரிந்து மாறு
வெண்மைசா லிடப தேவற் குணர்த்தினன் வெள்ளி வெற்பில். (சு)

விடையஃ துணர்ந்து செம்புள் வேந்தன்வீ றடக்க வெண்ணி
உடையதன் முகத்தைக் கோட்டி யுற்றதன் கவான்பு குத்தி
மிடைதரு முறக்க முற்றாற் போலுற மேவிப் பின்பால்
அடைவலிக் கலுழன் றேம்பி யலைதர வுயிர்த்த தன்றே. (எ)

வெள்விடை சிற்று யிர்ப்பு விடுதல்வாங் குதலி யற்றப்
புள்வலி முழுது மாய்ந்து போதலும் வருத லும்பூண்
டொள்ளிய சிவபி ரானே யோலமென் றலறக் கேட்டு
வள்ளிய வனைய நாதன் மால்விடை யலைப்ப தோர்ந்து. (அ)

விடையினை யருகே கூவி விரிசிறைக் கலுழன் றீமை
உடையவ னல்லன் வீணே யுஞற்றினுய் பொல்லாங் கோர்நீ
அடையுமிக் குற்றந் தீர வான்றவாற் றார்பு குந்து
நடைபெற வெம்மைப் பூசி யென்றனன் ஞாதை னம்மா. (கூ)

இறைமொழி யேறு கேட்டு நதிபுர மெய்தி யான்ற
துறைமலி சிவதீர்த் தத்திற் றோய்ந்துமந் தார நீழல்
உறைபரம் பரனைப் பூசித் துற்றதன் குற்றந் தீர்ந்தே
அறைபுகழ்க் கயிலை மேவிப் பண்டுபோ லமர்ந்த தன்றே. (க0)

---

சு. உரகர் அஞ்சு உரனும் - நாகர் அஞ்சுகின்ற வன்மையும். உள்ளோன் : கருடன். எண்மையா - எளிமையாக. இடபதேவன் - ரிஷப தேவர்.

எ. விடை - இடபதேவர். செம்புள் வேந்தன் - கருடன்; செம்புள் - கருட பட்சி. கவான் - துடை.

க0. இறைமொழி - சிவபெருமானது கட்டளையை. ஏறு - இடபம்.

### சாத்தனூர் முதலியவர் பூசித்துப் பேறுபெறல்.

சாத்தனங் கடைந்து போற்றித் தனியறக் காவல் பூண்டான்
எத்திகற் றூர்க்கை போற்றி யெறும்வலி மயிடற் சாய்த்தாள்
மாத்தட வெள்ளை யானை வானவன் முதல்வா னோர்கள்
ஆத்தனை யங்குப் போற்றி யெண்ணிய தடைந்தா ரன்றே. (கக)

நெறியமை சொன்ன யான நிரோதனப் பெருமான காதை
அறிதரி னின்னு முண்டா லளவுசெய் துரைப்பார் யாவர்
பொறிவலி கடந்தீ ரோர்மி னென்றுசூ தன்பு கன்றான்
முறிவரு மகிழ்ச்சி யோராய்ப் பணிந்தனர் முனிவர் யாரும். (க௨)

### பயன்.

துதிமிகப் புரிந்தெ ழுந்து சூழ்பொழி லாற்றூர் மேவிக்
கதியருள் பரனைப் போற்றி முத்தராய்க் களித்தார் யாரும்
மதிமலி யிப்பு ராணம் வாசிப்போ ரெழுதி வைப்போர்
அதிகநீ டாயுள் செலவ மடைந்துபே ரின்பந் துய்ப்பார். (கங)

### வாழ்த்து.

நிறைபுகழ்ச் சொன்ன யான நிரோதனப் பெருமான் வாழ்க
அறைபல புவன மீன்ற வஞ்சனக் கண்ணி வாழ்க
மறைபல முழங்க வானோர் மற்றையர் வாழ்த்த வெங்கள்
குறையற மன்று ளாடுங் குஞ்சிதப் பொற்றாள் வாழ்க. (கச)

ஆகத் திருவிருத்தம் - ருஉரு.

## ஆற்றூர்ப்புராணம் முற்றியது.

---

கக. சாத்தன் - ஐயனார். மயிடன் - மகிஷாசுரனை. வெள்ளை யானை - ஐராவதம். வானவன் - இந்திரன். ஆத்தன் - ஆப்தன்; சிவ பிரான், "ஆத்தியொடு மாத்தனைக்கணடு" திருப்பெருந்துறைப். கடவுள் வாழ்த்து, 19.

க௨. பொறிவலி - இந்திரியங்களின் வன்மையை. முறிவுஅரு - அழிவில்லாத.

கங. முத்தர் - பற்றினின்றும் விடுபட்டவர். துய்ப்பார் - அனுபவிப்பார்.

கச குஞ்சிதப் பொற்றாள் வாழ்க : இந்நூலாசிரியர் தாம் இயற்றிய புராணங்களிற் பெரும்பாலனவற்றில் இங்ஙனமே ஸ்ரீ குஞ்சித சரணத்தை வாழ்த்தி நிறைவுறுத்துதல் வழக்கம்.

---

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.